
ஆரத்தி
பி.வி.ஆர்.
திருவரசு புத்தக நிலையம்

# ஆரத்தி

**பி. வி. ஆர்.**

திருவரசு புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை - 17.

முதற் பதிப்பு : டிசம்பர், 2003

பதிப்பாசிரியர்: வானதி திருநாவுக்கரசு

விலை ரூ. 36.00

- *Title* : **AARATHI**
- *Author* : P.V.R.
- *Language* : Tamil
- *Subject* : Novel
- *Edition* : First Edition, Dec, 2003
- *Pages* : IV + 140 = 144
- *Published By* : **THIRUVARASU PUTHAKA NILAYAM,** 23, (Old No: 13), Deenadayalu Street, T.Nagar, Chennai - 600 017.
- *Price* : Rs. 36.00

**Laser Execution :** ***IMAGE - DTP*** Chennai - 17 Cell : 94442-02860

Printed at : **Mani Offset,** Chennai - 5. Ph : 28555249

## பதிப்புரை

குடும்பக் கதைகளை- விரசமில்லாத குடும்பக் கதைகளை எழுதி வாசகர்கள் மனத்தில் தனி இடம் பிடித்தவர் பி.வி.ஆர். ISI முத்திரை சுத்தமானது, சுகாதாரமானது, தரமானது, உயர்வானது என்பதால் இனியும் அதுபோல் பி.வி.ஆர். என்ற பெயரும் வாசகர்கள் மனதில் ISI முத்திரை போல் பதிந்த முத்திரை எழுத்தாளர்.

இது வழக்கமான காதல் கதைதான் என்றாலும் எழுதிய முறையில் வித்தியாச மான கதை. பணக்காரப் பெண்ணும் ஏழைப் பையனும் காதலிக்கிறார்கள். வழக்கம் போல் பணக்காரத் தந்தை அவர்கள் காதலை ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால் பெண்ணின் தாயாரோ அவர்கள் காதலுக்கு பச்சைக் கொடி காட்டுகிறாள். மகளை டூர் அனுப்புவதுபோல் அனுப்பி அவர்கள் திருமணம் செய்து கொள்ள உதவுகிறாள். திருமணம் முடிந்தால் தந்தை மனம் மாறலாமில்லையா?

காதலை அலட்டிக்கொள்ளாமல் ஜாலி மூடில் எழுதியுள்ளது போல் எழுதியுள்ளார். வர்ணனைகளும்- கதையைச் சொல்லிப்

போகும் முறையும் சுவையானவை. இனிமையானவை.

உமேஷ், வைஷ்ணவி, கனகராஜன், கோமதி, சேஷாத்திரி, சீதா- மனதில் நிற்கும் கதாபாத்திரங்கள். அவர்களைக் கற்பனைக் கதாபாத்திரங்களாக நினைக்க முடியாது. நகமும் சதையுமான உயிருள்ள கதாபாத்திரங்களாகத்தான் நினைக்க முடிகிறது.

கதையைப் படிக்கும் போதே காட்சிகள் மனதில் திரைப்படக் காட்சி களாக விரியச் செய்கிறது ஆசிரியரின் எழுத்து.

'ஆரத்தி' நாவலைப் படிக்கும் உங்களைப் பெரிதும் கவரும். படித்துவிட்டு பி.வி.ஆர். என்றால் பி.வி.ஆர். தான் என்று பாராட்டத் தயங்க மாட்டீர்கள்.

நாவலை வெளியிட அனுமதித்த எழுத்தாளர் பி.வி.ஆர். அவர்களுக்கும், படித்து மகிழ்ந்து பாராட்டப்போகும் உங்களுக்கும் எங்கள் நன்றி.

-பதிப்பகத்தார்.

# 1

> ஒரு நாற்பது வயது சுமங்கலி கையில் பூக் கூடையுடன் வந்து கொண்டிருந்தாள். இதைவிட நல்ல சகுனம் எப்படி வாய்க்க முடியும்?

நுங்கம்பாக்கத்துக் கடை வீதிகளையும் சந்து பொந்துகளையும் மறந்து, சற்றுத் தூரத்துக்குச் சென்று விட்டால் போதும். ஸ்டர்லி வாலர்ஸ் அவென்யு, ரட்லண்ட் கேட் இவையெல்லாம் மகாலட்சுமி தாண்டவமாடும் இடங்கள். அமைதியின் உறைவிடம். உள்ளடங்கி நிற்கும் பல பங்களாக்கள், அடத்தியான மரங்கள் செடிகள் சாதாரணமாகத் தெருவில் நின்று பார்ப்பவர்களுக்குத் தெரியாது. யாராவது கேட் அருகே நின்று கூர்ந்து கவனிக்க முற்பட்டால் ஒன்று, உள்ளேயிருந்து ஐந்தாறு அல்சேஷன், புல்டாக், டாஷண்ட் ஓடிவரும். கேட் கதவின் மேல் முன்னங்கால்களை வைத்துக் கொண்டு உறுமும். அல்லது இடுப்பில் கூர்வாளும் உதட்டில் பீடியுமாய்க் கூர்க்கா விறைத்துப் பார்ப்பான். வந்தவன் திரும்பி விடுவான்.

அன்று அக்டோபர் ஐந்தாம் தேதி ஞாயிற்றுக்கிழமை. புரட்டாசி மாத வெய்யில் இதமாகத்தான் இருக்கும் என்ற நினைப்பு இருந்தும் 'சேம்பர்லின்' சேஷாத்ரி குடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். புறப்படும் முன் வாசற் பக்கத்து அறையினுள் எட்டிப் பார்த்தார். உமேஷ் இந்து பேப்பரில் கடைசிப் பகுதியைப் படித்துக் கொண்டிருந்தான். ஆர்ட் புஷ்வால்டின் கட்டுரையாகத் தான் இருக்கும். ஆனால் உமேஷ் தன்னுள் சிரித்துக் கொள்ளாமல் படிக்கிறானே! உள்ளே சிரித்துக் கொண்டால் வெளியே கொஞ்சமாவது பிரதிபலிக்க வேண்டாமா!

"நான் போயிட்டு வரேண்டா."

குரல் கேட்டு உமேஷ் நிமிர்ந்தான்.

"ரொம்ப தாங்க்ஸ், அப்பா!"

"நான் செய்யறது சரியில்லை. இது தெரியுமாடா உனக்கு?"

"தெரியும்ப்பா. பெண்ணைப் பெற்றவர்கள்தான் பிள்ளை வீட்டாரை அணுக வேண்டும். பிள்ளை அப்புறம் பெண் பார்க்க வருவான். நம்ப கமலிக்காக நான் கூட ஜாதகத்துடன் எத்தனையோ வீடுகள் ஏறி இறங்கியிருக்கிறேனே!" என்றான் உமேஷ்.

"இது தெரிஞ்சும், மான அவமானமில்லாமல் பெத்த தகப்பனாரை இந்த வயசில் தூது அனுப்புகிறாயே!" குரல் உள்ளிருந்து லேசாகக் கிளம்பி வந்தது.

"அம்மாவும் வந்து விட்டாளா?"

உமேஷ் ஒரு நிமிடம் தலைகுனியும் பாவனையில் இருந்துவிட்டு அந்த ஒரு நிமிடத்தில் தொண்டையையும் சரி செய்து விட்டு, குரல் தழுதழுக்கச் சொன்னான்:



"தப்புத்தான் அம்மா! ஆனா இப்பவும் சொல்றேன், அப்பா எனக்காக ஒரு கோடீசுவரன் வீட்டுக்குப் போய் அவமானப்பட வேண்டாம்."

"போகாவிட்டால் ஷேர் மார்க்கட்காரன் பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்து உன் காலடியில் போடுவானா?"

"மாட்டான் அம்மா."

"வேறு என்ன வழி இருக்கு," என்றார் சேஷாத்ரி.

"கதைகளிலே சினிமாக்களிலே வர்ற வழிதான்" என்றான் உமேஷ்.

ஆனால் அது என்ன என்று உமேஷ் சொல்லவில்லை. அதே வழியைத்தான் கடைசியில் அவனும் வைஷ்ணாவும் வேறு மார்க்கம் ஏற்படாவிட்டால் கடைப்பிடிக்கப் போகிறார்கள்.

"எதுக்கும் நான் போயிட்டுவரேன், சீதா" என்றார் சேஷாத்ரி.

"ஒரு சமாச்சாரம்..."

"என்ன?"

"ஏதோ நம்ப பிள்ளை ஆசைப்படறானேன்னு இப்ப நான் உங்களை அனுப்பறேன். நீங்களும் போகிறீர்கள். ஆனால் அதற்காக நீங்கள் உங்க சுய கௌரவத்தையும் தன்மானத்தையும் அந்த ஷேர் மார்க்கட்காரன் வீட்டு வாசலிலேயே விட்டு விட்டு வரணும் என்கிறது இல்லை. புரியறதா?"

"சரி!"

"அவர் சோபாவிலே உட்கார்ந்தா நீங்களும் சோபாவில் உட்காரணும். நாம ஸ்கூல் வாத்தியாராச்சே

நின்று நின்றுதான் நமக்குப் பழக்கம்னு அங்கேயும் நின்று லெக்சர் அடிக்காதீங்கோ."

"சரி, சீதா!"

"நறுக்குத் தெறிச்சாப்லே ரெண்டே ரெண்டு வார்த்தையிலே காரியத்தை முடியுங்கோ. என் பிள்ளையும் உங்க பெண்ணும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறா, நீங்க என்ன சொல்றேள்? இவ்வளவுதான் நீங்க கேட்கணும். என்ன?"

"ரெண்டு வார்த்தைக்கு மேலேயே போறது!"

"குதர்க்கம் இப்ப வேண்டாம். மணி எட்டாயிடுத்து புறப்படுங்கள்."

"வரேண்டா."

"தாங்க்ஸ் அப்பா!"

"உன் தாங்க்ஸைக் கொண்டு உடைப்பிலே போடு. ஒரு காலேஜ் அட்மிஷன், ஒரு ஆஸ்பத்திரி அட்மிஷனுக்குக் கூட உன் அப்பா போனதில்லை, உனக்கு ஒரு பெண்டாட்டி தேட அனுப்புகிறாயே!"

"ஸாரி அம்மா!"

"அவர் ஏதானும் கேள்வி கேட்டா ரத்னச் சுருக்கமாகச் சொல்லுங்கோ, மௌரிய சாம்ராஜ்யத்தைப் பற்றித்தான் கேக்கறான்னு பீடிகையோடே தொடங்கி விடாதீர்கள். என் பிள்ளையின் பெயர் உமேஷ் பி.இ. எம்.பி.ஏ., ஷாவாலஸில் வேலை. ஆயிரத்து எழுநூறு சம்பளம். கலியாணமான ஒரு அக்கா, கலியாணமாகாத ஒரு தங்கை காலேஜ்லே படிக்கிற தம்பி, ரிடயராகப் போகிற ஸ்கூல் வாத்தியார் அப்பா. இம்மாதிரியான ஒரு பிள்ளையைப் பெத்ததற்காக வருத்தப்படற ஒரு அம்மா அப்படீன்னு பட்டுன்னு சொல்லுங்கோ."



"இப்படியெல்லாம் எனக்குப் பேசவராது சீதா."

"வேணும்னா நான் கூட வர்றேன். யார்டா அவள்? வைஷ்ணவியா அவளைப் பெத்தவ கிட்டே நான் பேசறேன்... எனக்கு அவளைத் தெரியும்!"

"வேண்டாம் அம்மா, வைஷ்ணாவின் அம்மா கிட்டே நீ பேச வேண்டாம். அவ அப்பாகிட்டே நம்ப அப்பாவே பேசட்டும்."

"உன் படிப்புக்கும் வேலைக்கும் ஆயிரம் பேர் தினசரி லெட்டர் போடறாடா... மகாலிங்கபுரம் கோவில்லே வரன் பட்டியலில் உன் பெயர் இருக்கு..."

"இன்னிக்கே நான் போய் அதை நீக்கி விடறேன் அம்மா."

"ஏன்தான் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாயோ... அது சரி, அவள் என்ன ரம்பையா ஊர்வசியா இல்லை..."

"அவ சாதாரணமாகத்தான் இருப்பா அம்மா. ஆனா எனக்கு..."

"சரி சரி. இவ்ன் வெட்கமில்லாமல் பேச ஆரம்பிக் கிறான். நீங்க ஏன் இன்னும் நிற்கறேள்... போங்கோ."

"சரி, நான் வரேண்டா."

"தாங்க்ஸ் அப்பா!"

"இந்த தாங்க்ஸை நன்கு பிடிச்சுக்கோ... அது சரி இந்தப் பீத்தல் குடை எதுக்கு? அவர்களுக்கும் நீங்க ஒரு சேம்பர்லின்னு தெரியணுமா?"

"இது இல்லாட்டா எனக்கு கையும் ஓடாது காலும் ஓடாது. சரி. நான் போயிட்டு வரேன்."

"சகுனத்துக்காக வீட்டு வாசற்படியிலே நிக்கா தீங்கோ. விறகு வண்டி வைக்கோல் உப்பு எது வந்தாலும் இறங்கி நடங்கோ."

சேஷாத்திரி அங்கவஸ்திரத்தால் முகத்தின் வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"ஒரு வாய் காப்பி இருக்குமா சீதா!" என்றார்.

"கொஞ்சம் இருங்கோ."

"எனக்கும் ஒரு வாய்!" என்றான் உமேஷ்.

"நீ ரெண்டு தடவை ஏற்கெனவே குடிச்சாச்சு..."

"அம்மா, ப்ளீஸ்..."

"சரி... சரி... இரு... இரு..."

சீதா உள்ளே போனாள்.

"ஜாக்கிரதை ஃபாதர்!" என்றான் உமேஷ்.

"பயமாத்தான் இருக்குடா."

"கனகராஜன் யாரையும் முன்னேற்பாடு இல்லாமல் பார்க்க மாட்டார். பேசமாட்டார். வாசல்லே கூர்க்காவே உங்களை மடக்கி திருப்பி அனுப்பப் பார்ப்பான். பங்களாவைச் சுற்றி நிறைய நாய்கள் வளைய வரும். எல்லாம் பாய்ந்துண்டு வரும். பயத்திலே ஓடாதீர்கள். தைரியமா நடந்தா அதுகள் போயிடும். போர்ட்டிக் கோவில் டிரைவரோ வேறு யாராவது சிப்பந்தியோ இருப்பான். கனகராஜனிடம் பேசணும்னு சொல்லா தீர்கள். விடமாட்டான். வைஷ்ணாவின் அப்பாவைப் பார்க்கணும்னு சொல்லுங்கள்."

"பேர்தான் வாயிலேயே நுழைய மாட்டேன் என்கிறது."



"வைஷ்ணவி கோவில்... வைஷ்ணவி வைஷ்ணா வைஷ்ணா..."

"என்னடா ஜபிக்கறே? இந்தா காபி. இந்தாருங்கள் பிள்ளை என்ன சொல்றார்... பெருமூச்சுப் பெரு மூச்சா உதிர்த்துத் தள்றார்?" என்று சீதா டம்ளரை நீட்டினாள்.

சேஷாத்திரி மௌமாகக் காபியைக் குடித்து விட்டுப் புறப்பட்டார்.

வாசலுக்கு வந்ததும் திடீரென்று அவர் முகத்தில் ஒரு பிரகாசம் ஏற்பட்டது. வழக்கமாக எட்டேகால் மணிக்கு கத்திக்கு சாணை தீட்டுகிறவன் வருவான் இல்லாமற் போனால் ஒரு எண்ணெய் வண்டி வரும்.

ஒரு நாற்பது வயது சுமங்கலி கையில் பூக் கூடையுடன் வந்து கொண்டிருந்தாள். இதை விட நல்ல சகுனம் எப்படி வாய்க்க முடியும்? நிச்சயமாக போகும் காரியம் வெற்றிதான். சந்தேகமே இல்லை.

மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில் கோபுரத்தைப் பார்த்து, மனத்துக்குள் வேண்டிக்கொண்டவர் பஸ் ஸ்டாண்டில் ஒரு 29 ஸி நிற்பதைக் கண்டார். விரைந்தார். அவர் ஏறினதும் பஸ் புறப்பட்டது. உட்காரவும் இடம் கிடைத்தது.

எல்லாம் நல்லபடியாகவே ஆரம்பித்திருக்கிறது. ஷேர் மார்க்கெட் கனகராஜன் ஒரு ஸ்கூல் வாத்தி யாருக்கு சம்பந்தி! பயம் கலந்த மகிழ்ச்சி புரையோடியது.

நுங்கம்பாக்கம்.

இன்கம்டாக்ஸ் அருகே உள்ள பஸ் ஸ்டாண்டில் இறங்கினார். நடந்தார். டாஜ் ஓட்டல் எதிரே பல டாக்ஸிகளும் நின்று கொண்டிருந்தன. சாலையின் குறுக்கே நடந்து பாரத் ஸ்டேட் பாங்க் அருகே நின்றார்.

மூன்றாவது தெருவில் 56ஆம் நம்பர். அவருடைய வயதும் அதுதான். நல்ல சகுனம்.

மெதுவாக நடந்தார். புரட்டாசி வெய்யில் இதமாக இருந்த போதிலும் உடலை மெல்ல மெல்ல பயம் தாக்க, உஷ்ணம் ஏறியது. அயர்த்தது. நாய்கள் கத்துமோ? வேஷ்டியை நார் நாராகக் கிழிக்குமோ? போன வருடம் அப்பா காலமான போது மாமனார் வீட்டிலிருந்து வந்த குண்டஞ்சி வேஷ்டி. ஜதை தொண்ணூறு ரூபாய் என்று சீதா இன்னும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிறாள்.

திரும்பிப் போய் விட்டால்...

டெலிபோன் மூலம் பேசினால் என்ன?

பிள்ளைக்காக அவர் படாதபாடு பட்டிருக்கிறார். ஆனால் நாய்க்கடி தேவையா?

பூக்கூடை சுமங்கலி கண் முன் தோன்றினாள். கோவில் கோபுரம். அவருக்காக நின்றது 29 ஸி. உட்கார இடம்.

இவ்வளவு நல்ல நிமித்தங்களுக்குப் பிறகு எப்படி விபரீதம் நிகழ முடியும்? அங்கவஸ்திரத்தால் வியர்வையைத் துடைத்துக் கொண்டார். நடந்தார்.

மூன்றாவது தெரு வந்தது.

பங்களாவும் வந்தது.

பளிங்குக் கல்லில் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

கனகராஜன்.

உச்சரிக்கும்போது உதடுகள் நடுங்கின. தயங்கித் தயங்கி கேட் அருகே சென்றார். உன்னிப்பாகக் கவனித்தார்.



நாய்கள் ஜாக்கிரதை அறிவிப்புப் பலகை இல்லாதது ஒரு தென்பு அளித்தது. ஆனால் நாய்கள் உண்டு என்று உமேஷ் சொன்னானே? ஒரு வேளை பயப்படத் தேவை யில்லை என்று எச்சரிக்கைப் பலகையைத் தொங்க விட வில்லையோ?

"யார் சாமி வேணும்?"

குரல் கேட்டுத் திடுக்கிட்டார்.

கூர்க்கா வேஷத்தில் ஒரு ஆள். ஆறு அடி. கூர்க்கா அதிகபட்சம் ஐந்து அடிதான் இருப்பான்.

"கனகராஜன் இருக்காரா?"

"இருக்காரு. அதுக்கு என்ன?"

"அவரைப் பார்க்கணும்."

"உள்ளே வுடறேன்... ஆனா அவர் உன்னைப் பார்ப்பாரா மாட்டாரான்னு சொல்ல முடியாது..."

"தாங்க்ஸ் அப்பா!"

அவன் கேட்டைத் திறந்தான்.

"நாய் கடிக்குமா?"

"குரைக்கும்."

"கடிக்காதே?"

"தைர்யமா போ சாமி... அல்லாம் ஓடியாரும். ஆனா கண்டுக்காதே..."

"நீ கொஞ்சம் கவனிச்சுக்கப்பா!"

"நிமிந்து நட சாமி!"

சேஷாத்திரி நடந்தார்.

போர்ட்டிகோ எங்கோ தொலை தூரத்தில் தொடு வானத்தில் இருப்பது போலத் தோன்றியது. கால்கள் பின்னிக் கொண்டன.

திடீரென்று ஆயிரம் பட்டாசுகள் வெடிப்பது போன்ற சத்தம். ஒரு பெரிய கூட்டமே அவரைச் சூழ்ந்து கொண்டது. உயரம்... குட்டை, நீளம், கோரம், அப்பப்பா எவ்வளவு ரகங்கள்! அவர் கண்ணை மூடிக்கொண்டே மெதுவாக நடந்தார். நாய்கள் சுற்றி வளைத்துக் கொண்டன. பைரவர் மீதான ஒரு தோத்திரம் மனத்துக்குள் தந்தி அடித்தது. சகுனம் ஏமாற்றி விட்டதான பயம் பிறந்தது.

"ஏய் போங்கடா... டீ போடீ... இந்தாடீ ஜூலி..."

அவர் கண்ணைத் திறந்தார்.

ஹவுஸ்கோட்டை அணிந்து கொண்டு, தலை மயிரைத் தூக்கி ஒரு பந்தாகக் கட்டியவள் அருகே வந்தாள்.

"யார் வேணும்?"

"கனகராஜன்."

"அப்பா ஹாலில்தான் இருக்கிறார்..."

"நீ... நீ..."

"வைஷ்ணவி."

"நான் உமேஷின் அப்பா."

"அவர் வரலையா?"

"என்னை மட்டும் அனுப்பினான்."

"மாமியையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே!"



"இப்ப நான் வந்த காரியம் ஜெயமானால் அவள் அப்புறம் வருவாள்."

"எனக்கு நம்பிக்கை இல்லை. இருந்தாலும் நீங்கள் போய்ப் பாருங்கள்."

"நீயே இப்படிச் சொன்னால்..."

"போர்டிகோ வந்து விட்டது. என்னை உங்களுடன் பார்த்தால், அப்பா என்னைத் தப்பா எடுத்துக் கொள்வார்."

"ஒரே கேள்வி."

"என்ன?"

"படிக்கிறாயா?"

"ஆமாம். எம்.ஏ. பர்ஸ்ட் இயர். ஸ்டெல்லா..."

அவள் பங்களாவைச் சுற்றி வளைத்து ஓடி மறைந்தாள். நாய்கள் சிதறின.

சீதா கேட்ட போது பெண் ரம்பையும் இல்லை ஊர்வசியும் இல்லை என்று உமேஷ் சொன்னான்! ஏன் பொய் சொன்னான்?

நல்ல நிறம்.

எடுப்பான முகம்.

கூர்மையான கண்கள்.

லட்சணமா இருக்கிறாளே?

சேஷாத்திரி படி ஏறி எப்படி ஹாலுக்குள் பிரவேசிப்பது என்று யோசித்து நின்றார்.

## 2

> நாய்களுக்குச் சோறு போடறதை உன் அப்பா லட்சியமா வெச்சிட்டிருக்கார்னா, ஏன் அஞ்சு பைசாவுக்கு பொறை வாங்கி தெரு நாய்களுக்குப் போடக்கூடாது?

வைஷ்ணவிக்கு உமேஷைவிட அதிகம் பிடித்தது ஒன்று இருந்ததென்றால் அது தூக்கம்தான். காரில் உட்கார்ந்தபடியே தூங்குவாள். சர்ச்சில் என்ற எண்ணம். கல்லூரியில் வாய்க்குள் கொட்டாவி விட்டுக்கொண்டே கண் அயர்வாள். சாப்பிட்டால் கண்களைச் செருகும். டிபன் சாப்பிடும் போதே தூக்கம் தலை தூக்க ஆரம்பிக்கும். இரவு வேளைகளில் கேட்கவே வேண்டாம். தொ(ல்)லைக் காட்சி மற்றவர்களுக்கு தாலாட்டுப் பாடிக் கொண்டிருக் கையிலேயே அவள் லேசான குறட்டை ஒலியில் மூழ்கி விடுவாள். அவள் சின்னஞ்சிறு பெண்ணாக இருந்த நாட்களில் அம்மாவோ, அப்பாவோ, அத்தையோ, சித்தியோ அருகே இருந்தாலும் அவளை மார்பு மேலும்



தோள் மேலும் போட்டுக்கொண்டு படுக்கையில் போடுவார்கள். இப்போது ஐந்து அடி ஆறு அங்குலம். அறுபத்திரண்டு கிலோ. வாட்டசாட்டமான அப்பாவாலும் கூடத் தூக்கிக் கட்டிலில் போடமுடியாது.

ஒரு வேளை உமேஷால் முடியுமோ என்னமோ, எதிர்காலம்தான் விடை அளிக்க வேண்டும்.

முந்தின நாள் மாலை, உட்லண்ட்ஸில் வெஜிடபிள் கட்லட்டின் மேல் தக்காளி ஸாஸைத் தடவிக் கொண்டிருக்கையில், உமேஷ், அவளிடம் தன் தகப்பனாரின் மறு நாளைய விஜயத்தைப் பற்றிக் கூறிய போது கை ஸ்பூன் ஆடியது. மகிழ்ச்சியில் அவளுடைய உடல் சிலிர்த்தது. தூக்கத்தைக் கூட ஒரு கணம் மறந்தாள்.

"இத்தனை நாளாக நான் சொன்னதை இப்பவாவது கேட்கத் தோணித்தே! உமேஷ்!" என்றாள் அவள்.

"எல்லாவற்றுக்கும், நேரம், காலம், வேளை வரவேண்டாமா, வைஷ்ணா?" என்றான் உமேஷ்.

உமேஷிடம் ஒரு குணம். அது நல்ல குணம். பெருமை தேடித் தரக்கூடியது என்று அவன் நினைப்பு. திடீரென்று ஒரு வேதாந்தியைப் போல இரண்டொரு வார்த்தைகளை உதிர்த்து, முகத்தைச் சற்றுக் கடுமையாக மாற்றிக் கொள்ளுவான். அப்போது அவனுடை முகம் பார்க்கச் சகிக்கவில்லை என்பதை அவன் உணரவில்லை. உணரும் வாய்ப்பை யாரும் ஏற்படுத்தவில்லை. வைஷ்ணவிதான் உணர்த்தினாள். அவள் அவனுக்கு முகம் பார்க்கும் கண்ணாடி ஆனாள்.

"உன் முகம் திடீர்னு மாறி விட்டது... பார்க்கச் சகிக்கலை..."

"ஏன், என் பெர்சனாலிடி..."

"அதை ஏன் எடுத்து மேலும் வாட்றே. உமேஷ். நீ பிலாஸபி பேசு. வேணாம்னு சொல்லலை. நாட்டிலே தினசரி பாதிப்பேர் அதைத் தான் செய்யறாங்க... ஆனா டிராமாவிலே டாக்டர் பேஷண்ட்டை ஒரு தடவை நாடி பார்த்து விட்டு மூக்குக் கண்ணாடியை எடுத்து ஒரு கையில் வைத்துக் கொண்டு ஆடியன்ஸை அப்ளாசுக்காகப் பிச்சை கேட்கிற மாதிரி வைச்சுக்காதே!"

உமேஷ் சிரித்தான்.

அசடு வெள்ளமாக இருந்திருந்தால் உட்லண்ட்ஸ் மூழ்கி இருக்கும்.

"சரி மேலே சொல் உமேஷ்..."

உமேஷ் உள்ளூர பல்லைக் கடித்துக் கொண்டான். அவனுடைய அம்மா, அப்பாவிடம் எவ்வளவு மரியாதை யுடன் நடந்து கொள்ளுகிறாள்? அவர் மீது வசைபாடும் போது மரியாதையைக் குறைப்பதில்லை. ஆனால் இந்த வைஷ்ணா ஏக வசனத்தில் பேசுகிறாள்!... காதல் என்றால் மட்டு மரியாதை எல்லாம் மீறலாம் போலும். இதே வைஷ்ணா, அப்பாவுக்கு அம்மா மாதிரி அவனுக்கு 'அவளாகி' விட்டால், ஏகவசனத்தை நிறுத்தி விடுவாள். அவன் நிறுத்த முயற்சிப்பான்.

"என்ன திங்க் பண்றே சன்னியாசி?" என்றாள் வைஷ்ணா.

"ஒண்ணுமில்லே."

"அப்ப சோலா பட்டுரா ஒரு கை பார்!"

"உன் டாடி எப்படி?"

"சிக்ஸ் ஃபீட்... ஹண்ட்ரட் கிலோஸ்..."



முகம்மது அலியுடன் கோதாவில் இறங்கவா அவன் கேள்வி கேட்டான், வைஷ்ணவி இப்படி பதில் சொல்ல? அவன்தான் பல தடவை, பல இடங்களில் கனக ராஜனுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பார்த்திருக்கிறானே?

"வைஷ்ணா, நான் ஹைட் அண்ட் வெயிட் கேட்கலை."

"அப்ப க்ளியராக் கேளு உமேஷ்."

"என் அப்பா உன் டாடியைச் சந்திச்சா? என் டாடியை உன் அப்பா சரியா மதிச்சு நடத்துவாரா?"

"நீ ரொம்ப கன்ஃப்யூஸ் பண்றே உமேஷ். அப்பா, டாடி, டாடி அப்பா... கொஞ்சம் இரு தண்ணியைக் குடிக்கறேன்."

குடித்தாள்.

உமேஷ் ஆவலுடன் காத்திருந்தான்.

"கேள்வியை மறுபடியும் கேளு."

"நாளைக்கு என் ஃபாதர் வருவார்."

"ஐ மீன் கொஸ்டியன்... நீ இப்ப சொன்னது கேள்வி அல்ல."

"என் அப்பா உன் அப்பாவை நம்ம கலியாண விஷயமாகப் பார்க்க வரப்போறார். அப்ப உன் அப்பா எப்படி நடந்து கொள்ளுவார்? ஐ மீன் உன் அப்பாவின் ரியாக்ஷன் எப்படி இருக்கும்?"

"யூ வாண்ட் தி ட்ரூத்?"

"என்ன இப்படிக் கேட்கிறே வைஷ்ணா? யெஸ். எனக்கு உண்மை தெரியணும்."

"நன்னாயிருக்காது."

"எது நன்றாயிருக்காது?"

"ரியாக்ஷன்!"

"அப்படீன்னா?"

"பீ பிராக்டிகல் உமேஷ், நீ பெரிய கம்பெனியிலே சின்ன வேலையிலே இருக்கே..."

"என்ன சின்ன வேலையா, ஆயிரத்து எழுநூறு ரூபா சம்பளம், இது சின்ன வேலையா?"

"கையிலே நெட்டா என்ன வரும் உமேஷ்?"

"கொஞ்சம் இரு. பிராவிடண்ட் பண்ட், இன்கம் டாக்ஸ், அது இது எல்லாம் போக, நெட்டா ஆயிரத்து நூற்று..."

"பஸ் பஸ்... உமேஷ் உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?"

"என்ன?"

"மட்டன் இப்ப என்ன விலை சொல்லு."

"தெரியாது. நாம குடித்தனம் வைச்சா மட்டன் வாங்க வேண்டி வருமா?"

"ஷியூர்... நாயில்லாமல் நான் இருக்க முடியாது..."

"நான் இருக்கேனே, வைஷ்ணா."

"அப்ப நீயும் வேணும்னா சாப்பிடு... இரு. எங்கே இருந்தேன்?"

"மட்டன்லே!"

"ஹாங்... மாசம் ஆயிரத்து ஐநூறு ரூபா எங்க அப்பா செலவு செய்கிறார்!"



"நாய்களுக்கு சோறு போடறதை உன் அப்பா ஒரு லட்சியமா வைச்சுட்டிருக்கார். ஏன் மாசம் பத்து ரூபாய்க்கு பொறை வாங்கி தெரு நாய்களுக்குப் போட்டக் கூடாது. வைஷ்ணா... ஏன் நான் வாங்குகிற சம்பளத்தை நாய் மேலே கொட்டணும்?"

"நீ லைன் மாறிப் பேசறே, உமேஷ்... உன் ஃபாதர் என் டாடிகிட்டே..."

"இப்ப நீ என்னைக் கன்ஃபியூஸ் பண்ணப் பார்க்கிறே!"

"என் தாட்ஸை டிஸ்டர்ப் பண்ணாதே, உமேஷ். எனக்கு தாட்ஸ் வர்றதே கஷ்டம். வர்றப்போ நீ குறுக்கிட்டா இதே தாட்ஸ் திரும்ப வர ஒரு மாசம் ஆகும்."

"ஸாரி."

"உன் ஃபாதர் வரட்டும். என் டாடியை மீட் பண்ணட்டும். அவர் நன்றாகக் கொடுப்பார். அதை உன் ஃபாதர் வாங்கிக் கொள்ளட்டும்."

"அப்புறம்?"

"நாம்தான் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்தாச்சே, அதன்படி நடப்போம்..."

"பணம் ரொம்ப வேஸ்ட்டாகும் வைஷ்ணா!"

"நான் ஒண்ணு சொல்லட்டுமா உமேஷ்..."

"உம்!"

"கோவிச்சுக்காதே!"

"எனக்கு எப்படி வைஷ்ணா உன் மேலே கோபம் வரும்."

"காதலே ஒரு வேஸ்ட், உமேஷ்... காதல் பீரியட்டுக்கு ஒரு லிமிட் வைச்சுடணும். ஒரு வாரம்... இல்லாமல் போனா பதினைஞ்சு நாள்... மாக்சிமம் ஒரு மாசம்... அப்புறம் காதல் இருக்கக் கூடாது."

"அப்ப?"

"இம்மிடியட்டா மாரேஜ். காதல் ஆரம்பத்திலேயே கலியாணத்துக்கு சான்ஸ் இல்லேன்னா லவர்ஸ் வெறும் ஃப்ரண்ட்ஸா மாறி பிரிஞ்சுட வேண்டும்."

"வைஷ்ணா..."

"ஏன் உருகறே உமேஷ்!"

"நீயும் நானும் அப்படி அப்படி.... அப்படி...."

"அப்படி வெறும் ஃப்ரண்ட்ஸா பிரியக் கூடாது வைஷ்ணா."

"நாம்தான் எட்டு மாசமா காதலிக்கிறோமே. ஸபையர், சத்தியம், காஸினோ, ஈகா எல்லாம் நம்மை கப்பிள்ன்னு நினைச்சுட்டிருக்கு. என் காலேஜிலே ப்யூன்லேந்து பிரின்ஸி வரை எல்லாருக்கும் நீ தினசரி கேட்லே நிக்கறது தெரியும்..."

"உன் அம்மா அப்பாவுக்குத்தான் இன்னும் தெரியாது!"

"யார் சொன்னா?"

"தெரியுமா?"

"ஏன் பயப்படறே உமேஷ். நான் அம்மாகிட்டே சொல்லியாச்சு."

"அம்மா என்ன சொன்னா? அவ ரியாக்ஷன் எப்படி?"



"டல்!"

"அப்படீன்னா?"

"அர்த்தம் தெரியாதா உமேஷ்?"

"விளையாடறே வைஷ்ணா."

"காபி, வந்தாச்சு அதைக் குடி. வரும்போதே ஆறித்தான் வரும்."

"உன் அம்மா..."

"இரு. நான் காபியைக் குடிக்கறேன்."

குடித்தாள்.

சுண்டு விரலை மூடக் கூடிய கைக் குட்டையால் உதட்டைத் துடைத்துக் கொண்டாள். இளம் சிகப்பு லிப்ஸ்டிக் சற்றே கைக் குட்டையில் ஏறியது.

"என்ன சொன்னா வைஷ்ணா"

"–ஏன் அவசரப்படறே உமேஷ். நான் பில் கொடுக்காம ஓடிப்போயிடமாட்டேன்..."

கைப் பையைத் திறந்தாள். ஒரு நூறு ரூபாய் நோட்டு வெளியே வந்தது.

"எப்ப வந்தாலும் நீயே கொடுக்கிற வைஷ்ணா..."

"அவமானமா இருக்கா?"

"–பின்னே?"

"அப்ப நீ ஏன் உன் பர்ஸை எடுக்க ட்ரை பண்ணக் கூடாது."

"இப்ப ட்ரை பண்றேன்."

"ஃபர்கெட் இட்..."

பீங்கான் தட்டு. ஒரு ரோஸ் கலர் காகிதம். அதன் மேல் சோம்பு. உமேஷ் சோம்பை அள்ளிப் போட்டுக் கொண்டான். ஒரு மணி, நாக்கின் ஒரு ஓரத்தைக் கொஞ்சம் கிழித்தது.

நூறு நோட்டுடன் தட்டு விடை பெற்றுக் கொண்டது.

"எங்கே இருக்கேன் உமேஷ்?"

"உன் அம்மா கிட்டே."

"யெஸ் மை மதர்... மை ஒன்லி மதர். ஷி லைக்ஸ் யூ."

"அப்பாடா?"

"டோண்ட் ஜம்ப் வித் ஜாய். என் அம்மாவுக்குப் பிடிச்சுட்டா எல்லாம் சுபமா முடியும்னு ஒரு இடியாட்டிக் முடிவுக்கு வராதே. என் டாடி சொற்படிதான் அவ நடப்பாள்..."

"உன் டாடி"

"அவர் உன்னைப் பார்த்ததுகூட இல்லை."

"நீ உன் வீட்டுக்கு இன்வைட்டே பண்ணலை. ஆனாலும் உன் அம்மாவுக்குப் பிடிச்சிருக்கு. ஷி இஸ் க்ரேட்..."

"என் மதரைப் பத்தி எனக்குத் தெரியும் உமேஷ்..."

"இப்ப என்னதான் செய்யறது வைஷ்ணா."

"பேஷன்ஸ்."

"இன்னும் ரெண்டு மாதம்."



"உன்னை இன்னும் நான் தொட்டுக் கூடப் பார்த்ததில்லை."

"அதுக்கு நான் உன்னை அலோ பண்ணியதில்லை..."

"உனக்கு இருதயம் இல்லை."

"நீ அதைத்தவிர மற்றதையெல்லாம் தொட ஆசைப் படறே உமேஷ். நான் அதுக்கு பலியாயிட்டா அப்புறம் என்னன்னிக்கும் ஹார்ட்டை உன்னால் டச் பண்ணவே முடியாது?"

"வெயிட்டர் வர்றார்."

எண்பத்தி எட்டு ரூபாய் சில்லறை வந்தது. மூன்று ரூபாய் சில்லறையை வைத்துவிட்டு எட்டு பத்து ரூபாய் நோட்டுக்களை வைஷ்ணா பைக்குள் திணித்தாள்.

"டிப்ஸ் ரொம்ப ஜாஸ்தி."

"ஜஸ்ட் த்ரி ரூபீஸ் அன்ட் ஆட்!"

"அதுக்கு ஒரு வேளை டிபனே சாப்பிடுவேன்."

"உமேஷ்!"

"என்ன வைஷ்ணா!"

"அந்த பேரர்... தமிழ்லே என்ன? யெஸ்... ஸப்ளையர்..."

"அது தமிழ் இல்லை."

"என்ன கரெக்ட் வார்த்தை?"

"சிப்பந்தின்னு சொல்லலாம்"

"ஓகே சிப்பந்தி! இந்த மூணு ரூபாய் சில்லரை அவனுக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும்?"

—"எனக்கு பதில் செல்லத் தெரியலை வைஷ்ணா."

"உன்னை எங்கே ட்ராப் பண்ணணும்?"

"நான் போய்க் கொள்றேன்."

"புட்போர்ட்லே நிக்கக் கூடாது!"

"மாட்டேன்!"

"உமேஷ்!"

"என்ன?"

"ஒரு ஸ்கூட்டர் வாங்கேன்!"

"ரெண்டு லட்சம் ரூபாவண்டி சௌகரியமா கிடைக்கிறது, வைஷ்ணா!"

"நீ நாளைக்கு என் ஹஸ்பண்டா ஆனா?"

"அப்ப உன் கார் இருக்கும்"

"இருக்காது!"

"ஏன்?"

"டோபிகானாவிலே டோபி துணியை உதறுவதை நீ பார்த்திருக்கிறாயா, உமேஷ்!"

"நான் அதைப் பார்க்க டோபிகானாவுக்குப் போக வேண்டாம். என் ஃபாதர் தினமும் வீட்டிலே அதைச் செய்யறார்!"

"அது மாதிரி என் அப்பா என்னை உதறப்போறார். அப்புறம் ஏது கார்?"

"நீ அவருக்கு ஒரே பெண்."

"ஸோ வாட்?"

"அப்படியெல்லாம் உதற மாட்டார். மனசு வராது. பெற்ற பாசம்!"



"அம்மாதான் பெத்தாள்!"

"சரி வளர்த்த பாசம்!"

"அம்மாதான் வளர்த்தாள்!"

"இருந்தாலும்..."

"என் டாடி லவ்ஸ் மி... பட்... ரொம்பக் கண்டிப்பு. ஆனா நான் துணிஞ்சுட்டேன், உமேஷ், நான் துணிஞ்சுட்டேன்!"

"நான் அதுக்கு உன்னைப் பாராட்டறேன், வைஷ்ணா!"

"அதே மாதிரி, நான் உன்னைப் பாராட்டும்படியா நீ ஏன் நடந்து கொள்ளக் கூடாது?"

"எப்படி?"

"நான் சொல்றபடி கேட்டு."

"அதான் ரெடின்னாச்சே!"

"லாஸ்ட் மினிட்லே உன் கை கால் நடுங்கினா...?"

"நடுங்காது."

"அப்படி நடுங்கினா, நம்ம லவ் வில் பி லாஸ்ட்!"

"ஸோ குட்பை, சீரியோ, பாய்... பாய்..."

"நாளைக்கு மார்னிங் என் அப்பா..."

"ஓகே!"

"நாய்களை எல்லாம் கட்டிப் போட்டு வை. அவர் ஹிஸ்டரி டீச்சர், அவர் ஹிஸ்டரியை மாத்திடாதே."

"நம்ம ஹிஸ்டரியே மாறப்போறது உமேஷ். குட்பை!"

## 3

ஒரு முற்றம். அதன் ஓரம். இளம் காற்று வேர்க்கடலை கலந்த அரிசிப் பொரி, பல்லாங்குழி, மஞ்ஜாடி, இல்லா விட்டால் புளியங்கொட்டை கொந்தாட்டம்

இன்று அதிகாலையில் அவள் தூக்கத்தின் இறுக்கத்திலிருந்து திடீரென்று விடுபட்டபோது, முந்தின நாள் உமேஷுடன் பேசினதுதான் முதலில் நினைவில் முட்டியது. சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்தாள்.

அம்மா தெலுங்குச் செய்தி கேட்டுக் கொண்டிருந்தாள். 'சங்கராபரணம்' பார்த்த நாளிலிருந்து அம்மாவுக்கு தெலுங்கு மீது ஒரு அபார மோகம். முப்பது நாளில் தெலுங்கு பாஷை கற்றுகொள்ள வசதியாக ஒரு புத்தகத்தை வாங்கி, அதனுடன் மல்லுக்கு நிற்கிறாள்.

பாத்ரூம், டூத்பேஸ்ட், பிரஷ், காபி எல்லாம் ஆயிற்று. தெலுங்கில் செய்தி அறிக்கை முடிவுற்றது. அவள் அம்மாவைச் சந்திக்க நடந்தாள்.



கோமதி கல்லிடைக்குறிச்சியில், சில்லோடு வேய்ந்த ஒரு வீட்டில் ஜனனமான போது அவளை ஈன்ற தாயார் பழகிப்போன வலியினிடையிலும், 'இன்னும் ஒரு பெண்ணா' என்று அழுது தீர்த்தாள். 'அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது' என்று ஊர்ப்பாட்டிகள் ஆறுதல் அளிக்கவென்றே ஏற்படுத்திய பழமொழியை அவள் காதில் ஏற்ற முயன்றார்கள். மணிமுத்தாறு நதியின் பாசனத்தில் ஏதோ விளைந்த நெல்லை வைத்துக்கொண்டு, நிரந்தர வேலை எதையும் நம்பாத, விரும்பாத கோமதியின் தகப்பனார் 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்ற கொள்கையில் அலட்சியமாக இருந்தார்.

*1931*ல் அவதாரமான கோமதி மற்ற நான்கு பெண்களை விட அழகு வாய்ந்தவள் என்று ஊர் முழுதும் சொல்ல ஆரம்பித்தது. நாளாவட்டத்தில் அவள்தான், 'மிஸ் கல்லிடைக்குறிச்சி' என்று புகழ்ந்தார்கள். பதினாறாம் வயதில் அவள் செக்கச் செவேலென்று இருந்ததோடு நிறுத்திக் கொள்ளவில்லை. தினசரி சாப்பிடும் பழைய சாதத்தினால் உருண்டு திரண்ட அங்க அவயவங்களுடன் திகழ்ந்தாள்.

என்னதான் அவ்வளவு அழகு அமைந்திருந்த போதிலும், ஒரு ஏழைப் பெண்ணைக் கொத்திக் கொண்டு போக எந்த வீட்டாரும் முண்டியடித்துக் கொண்டு வந்து விழவில்லை. நான்கு பெண்களை எப்படியோ, ஒரு ஓட்டல் மானேஜர், வக்கீல் குமாஸ்தா, மின்சார இலாகாவில் மீட்டர் ரீடர், ஒரு நியூஸ் பேப்பர் ஏஜண்ட் என்று பலதரப்பட்ட இடங்களில் பெற்றோர் தள்ளி விட்டனர். கோமதியை எங்கே தள்ளுவது? நிலத்தை விற்றதில் இரண்டு பெண்கள் சிலவானார்கள். வீட்டை விற்றதில் இரண்டு பெண்கள் போனார்கள்.

விற்க இனியும் ஏதும் இல்லை என்ற நிலையில் அம்மாவும் அப்பாவும் தவித்தபோது, கோமதி உடற் செழிப்புடன் நின்றாள்.

இரண்டு மூன்று குடும்பங்கள் அவளை ஏற்க முன் வந்தன. ஒன்றில், பிள்ளை பி.ஏ. எல்.டி. ஸ்கூல் வாத்தியார். மாணவர்கள் எள்ளுருண்டை என்று, வருஷாந்திர விழா நடத்தாமலேயே பட்டம் அளித்திருந் தார்கள். இன்னொரு குடும்பத்துப் பிள்ளை சென்னையில் ஏதோ ஒரு கம்பெனியில் ஏதோ ஒரு வேலையைப் பார்க்கிறான் என்ற தகவல் கிடைத்தது. வாத்தியார் குள்ளம். கறுப்புடன் சேர்த்தி. சென்னை. உயரம், சிகப்பு. மீசை ஒன்றுதான் சற்று அவலட்சணம்.

ஸ்கூல் வாத்தியார் வீட்டில் எதிர் ஜாமீனும், நகைகளும் பாத்திரங்களும் கேட்டார்கள். மீசைக்காரன் பெண்ணை மட்டும் கேட்டான். அம்மா இல்லாத அவனுக்குக் கொடுத்தால் மாமியாரின் ரோதனை இருக்காது என்று கோமதியின் தாயார் நினைத்தாள். சம்பந்தி அம்மா இல்லாத குறையை விட, பெண்ணுக்கு மாமியார் கிடையாது என்ற நினைவுதான் மேலிட்டது. கோமதியின் தகப்பனார் மனைவி எடுத்த முடிவுக்கே வந்தபோதிலும் வேறுவிதமாக எண்ணிப் பார்த்தார். பையனுடைய அப்பா, அவனுடைய அம்மா போன மறுமாதமே குடும்பப் பொறுப்பிலிருந்து விடுதலை வாங்கிக்கொண்டு, புதியதோர் பந்தமொன்றை ஏற்படுத்தி, அந்தப் பந்தத்தில் மூழ்கிவிட்டார்; இனிமேல் பிள்ளையுடன் தொந்தமோ சொந்தமோ இராது; தாமும் தம் மனைவியும் சென்னையில் குடியேறி மாப்பிள்ளையை அவன் வீட்டிலேயே கவனித்துக்கொண்டு வாழலாம்; என்றெல்லாம் எண்ணினார்.



கனகராஜன் ஒரு மாபெரும் ரசிகன். கலை அழகு எங்கிருந்தாலும் அதை ரசிக்கத் துடிக்கிறவன். சில சமயங்களில் புரியாத கலைகளைக்கூட, மற்றவர்கள் பாராட்டுகிறார்கள் என்ற ஒரே காரணத்தினால், விரும்பி ரசிக்க முயல்வான். உதாரணம்: பால சரஸ்வதியின் நடனம்.

கோமதி அவன் கண்ணில் பட்டவுடன் அவள் அவனுள் ஐக்கியமாகிவிட்டாள். ஒரு ஸ்கூல் வாத்தியார் வீட்டில் பேச்சு நடக்கிறது என்று தெரிந்ததும், ஸ்ரீவைகுண்டத்தில் இருந்த ஒரு ஒன்றுவிட்ட மாமாவுக்கு மூன்று கடிதங்களும் இரண்டு மணிஆர்டர்களும் அனுப்பி, கலியாணப் பேச்சை இடமாற்றம் செய்ய முயன்றான். வெற்றியும் கண்டான்.

எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

மாமியார், நாத்தனார் இல்லாத புக்ககம் — கோமதியின் அம்மா.

தம்மையும் தம் மனைவியையும் ஆதரிக்க மனம் கூசாத மாப்பிள்ளை — கோமதியின் அப்பா.

வின்ஸன்ட் கலர் குடித்தால், அது கோமதியின் தொண்டையில் இறங்குவது வெளியே தெரியும் என்று மகிழ்ந்த கனகராஜன், அங்கேயும் இங்கேயும் கடன் வாங்கி, தான் வேலை பார்க்கும் ஷேர் புரோக்கர்ஸ் அலுவலகத்தில் கொஞ்சம் விளையாடி தம்புச் செட்டித் தெருவில் புதுக் குடித்தனத்தை ஆரம்பித்தான்.

இதெல்லாம் **1947, 48** வருடங்களில்.

இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகு திடீரென்று ஒரு மாற்றம் ஏற்படலாயிற்று. கோமதி முழுதாக ஒரு நூறு ரூபாய் நோட்டை முதன் முதலாகப் பார்த்தாள்.

மேலும் ஒரு ஆண்டுக்குப் பிறகு, கனகராஜன் ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை அவளுடைய மடியில் போட்டு, இடையைப் பிடித்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்.

நாட்களும் மாதங்களும் ஓட ஓட, நாகப்பட்டினம் புயல்போல வீட்டில் புயல் அடிக்க ஆரம்பித்தது. தம்புச் செட்டித் தெரு ஒண்டுக்குடித்தனத்தில் மாமியார் மாமனார்களை அமர்த்தி விட்டு, நுங்கம்பாக்கம் ஜோசியர் தெருவில் ஒரு சிறு வீட்டில் கனகராஜன் குடியேறினான். இது **1953**—ல். அப்போது கோமதிக்கு வயது இருபத்திரண்டு.

பணம் வர ஆரம்பித்தது.

பங்கு மார்க்கெட்டுகள், நாளைக்குச் சரியும் என்றால் கனகராஜன் இன்று பங்குகளை விற்றான். அடுத்த வாரம் நியூயார்க்கில் பருத்தியோ, லண்டனில் தங்கமோ விலை ஏறக்கூடும் என்று ஏதாவது ஒரு வண்டு காதில் ரீங்காரம் செய்தால், உடனடியாக கையிலிருக்கும் பணத்தையெல்லாம் முடக்கினான்.

மகாலட்சுமி, கனகராஜன் விஷயத்தில் நடக்க வில்லை, குதிக்கவில்லை. தாண்டவமாடினாள்.

***1960.***

சொந்த வீடு. சொந்தக் கம்பெனி.

***1961.***

கம்பெனிக்குச் சொந்தக் கட்டடம். வைஷ்ணவியின் அவதாரம்.



நுங்கம்பாக்கத்தில் ஒரு பம்பாய் வியாபாரி தம் பணத்தை யெல்லாம் ஷேர் மார்க்கெட் எனும் பாதாளத்தில் கொட்ட, கனகராஜன் அவருடைய வீட்டைத் தாமே வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்தார். வியாபாரி மூன்றாம் வகுப்பில் மூட்டை முடிச்சுகளுடன் பம்பாய் ஏற கனகராஜன் ஒரு புது சாம்ராஜ்யத்துக்கு அடிகோலினார். 'ஏ' ரக அந்தஸ்து உயர்வு பெற்று விட்ட கனகராஜனை, ஷேர் மார்க்கட்டில் சிங்கம் என்கிறார்கள். புலி என்கிறார்கள். புதுப் புது கம்பெனிகள் பிறக்கும் முன்பும், பிறந்த பின்பும் அவரிடம் ஆலோசனை கேட்டார்கள். எங்கே, எப்போது எவ்வளவு ஷேர்கள் வாங்கினால் அல்லது விற்றால் நல்லது எது என்று கனகராஜனிடம் முறையீடுடன் வரும். அவர் சொல்லுவார். கம்பெனியே எல்லா உதவிகளையும் வழங்கும்.

இப்படி உழைப்பால் உயர்ந்த கனகராஜன் உயரத்திலும் உயர்ந்தவர். ஆறு அடி. அகலத்திலும் சற்று வளர்ந்தவர். பார்த்தவர்கள் பயந்தார்கள். பார்க்காதவர் பார்க்கப் பயந்தார்கள்.

அவரிடம் இரண்டே இரண்டு பேர்தான் பயப்பட வில்லை.

ஒருத்தி கோமதி, இன்னொருத்தி வைஷ்ணவி. இதைப்பற்றி கனகராஜன் வருத்தப்படவில்லை. ஒரு விதத்தில் பெருமைப்படவும் செய்தார். வீட்டில் அவர் என்ன ஷேர் புரோக்கரா?

ஆனால் வீட்டில் அவர் சில சட்டதிட்டங்களை, விதிமுறைகளை வகுத்திருந்தார். அதன்படியே எல்லோரும் நடக்க வேண்டும்.

சில முக்கியமான சட்ட திட்டங்கள் :

1. அவர் செய்யும் முடிவுக்கு எதிராக யாரும் செயல்படக் கூடாது.

2. ஒருவருடைய காரை இன்னொருவர் எக்காரணம் கொண்டும் உபயோகிக்கக் கூடாது.

3. எந்தச் சிப்பந்தியும் ஒரு வருடத்துக்கு மேல் வீட்டில் நீடிக்கக் கூடாது.

4. அவருடைய மாமியார், மாமனார், மைத்துனிகள், சகலர்கள் யாரும் பண உதவி கேட்டு அவரிடம் வரக் கூடாது.

5. வீட்டில் அப்பா, அம்மா, பெண் இவர்கள் மூவருமே அரட்டை அடிக்கலாம். பெரிய வீடுகளிலிருந்து வருகிறவர்களை, சிரித்த முகத்துடன் வரவேற்று விரைவில் நாசூக்காக அனுப்பி விட வேண்டும். எப்போதும் நல்ல உடை அணிந்து கொண்டால் இதை சாமர்த்தியமாக நிறைவேற்றலாம். 'இப்பத்தான் வெளியே போகலாம் என்று நினைத்திருந்தேன். நீங்கள் வந்து விட்டீர்கள்!' என்ற வார்த்தை நல்ல பயனைத் தரும்.

6. பெண்ணின் கலியாண விஷயத்தில் தங்கள் அபிப்பிராயத்தைக் கூற, தாயாருக்கும் பெண்ணுக்கும் உரிமை உண்டு. ஆனால் அவர்தான் முடிவு எடுப்பார்.

இப்படிப்பட்ட ஒரு மனிதருக்கு வாழ்க்கைப்பட்ட கோமதி, எவ்வளவோ சுகங்களை அனுபவித்தாலும் சில சங்கடங்களையும் கஷ்டங்களையும் சந்தித்தாள். கணவனின் கண்டிப்பு அர்த்தமில்லாமல் எல்லை கடந்து செல்லுவதாகப்பட்டது.



இந்தக் கட்டத்தில்தான், வைஷ்ணா தன்னுடைய காதல் பிரச்னையைக் கொண்டு வருகிறாள்.

என்ன செய்ய?

"குட்மார்னிங், மம்மி டியர்!"

"என்னடா டார்லிங்?"

கோமதி தனக்குப் பிள்ளையே பிறக்காத குறையை 'டா' போட்டுத் தீர்த்துக் கொண்டாள்.

"நேத்து நைட் சொன்னேனே?"

"ஞாபகம் இருக்கு. டார்லிங்!"

கலியாணமான புதிதில், மெருகு தேயும் வரை, கோமதியை கனகராஜன் டார்லிங் என்றுதான் சமையல் அறையிலிருந்து படுக்கை அறைவரை அழைத்து வந்தார். அந்த வார்த்தை அவர் உதட்டிலிருந்து வருவது நின்ற பிறகு, அதைப் பெண்ணிடம் பிரயோகிக்கலானாள் கோமதி.

"அதான் சொன்னாயே!"

"அவர் சாது."

"தெரியும்."

"என்ன மம்மி தெரியும்?"

"உன்னோடே உமேஷின் அம்மா, அப்பா எல்லாரையும் எனக்கு ஏற்கெனவே தெரியும்டா!"

"சொல்லவேயில்லையே!"

"அவசியம் இருக்கலை!"

"எப்படித் தெரியும்?"

"திருநெல்வேலி ஜில்லாதான் அவர்களுக்கும்!"

"கல்லிடைக்குறிச்சிதான் நம்ம ஊரு!"

"ஆமாம், அதான் உன் அப்பா ஊரும்."

"திருநெல்வேலின்னு பின்னே எப்படிச் சொல்றே மம்மி!"

"நீ ஜியாகிராபி படி, டார்லிங்."

"உமேஷின் அப்பா ஹிஸ்டரி டீச்சர்."

"சரி."

"அப்பா கிட்டே..."

"உன் டாடிகிட்டே இப்ப எதுவும் பேசக்கூடாது, வைஷ்ணா!"

"அப்புறம், அவர் வந்து போனப்புறம் பேசினா ஒரு வேளை பிரயோசனப் படாமல் போயிட்டா?"

"ஒரு வழி இருக்கு?"

"என்ன வழி மம்மி?"

"இருக்கு அப்புறம் சொல்றேன்."

"நிச்சயமா?"

"ஷ்யூர்... டார்லிங்!"

"என்ன, மம்மி?"

"உமேஷ் உன்னை உண்மையாவே விரும்பறாரா!"

"ரொம்ப பைத்தியமா இருக்கார்!"

"அப்ப நீ..."



"நானும் அதே மாதிரி!"

"ரெண்டும் பைத்தியங்களா?"

"போ, மம்மி!"

"வைஷ்ணா!"

"என்ன மம்மி?"

"ஒரு கேள்வி!"

"கேளு."

"உங்க லவ் எதுவரையில்..."

"சந்தேகமா?"

"இல்லை ஆர்வம்!"

"நான் உன் பெண், மம்மி, போதுமா?"

"போதும்டா!"

"நான் இப்பவே போய், வில்லி, ஜூலி, சீஸர், ஸாண்டோ எல்லாவற்றையும் கவனிச்சுக்கறேன். பாவம் அவர் மேல் ஏதானும் பாய்ஞ்சு, விபரீதமா..."

"ஆமாமாம்... போ... பாவம்... ஸ்கூல்லே வேற பசங்க குதறுவாங்க... இங்கே எக்குத்தப்பா ஏதானும் நடந்துட்டா..."

"டாடி நல்ல மூடில்தானே இருக்கார்?"

"சிரிச்சுப் பேசினார்."

"குட் வெரிகுட்."

பெண் போன பிறகு கோமதி யோசித்தாள்.

அவளுடன் சோழி, பல்லாங்குழி ஆடின சீதாவின் பிள்ளைக்கு, எதிர் ஜாமீன் கேட்ட— 'எள்ளுருண்டை' வாத்தியார் பிள்ளைக்கு அவளுடைய பெண் வாழ்க்கைப் பட்டால்?

ஆஹா! என்ன சந்தோஷம்.

சீதாவும் அவளும் மறுபடியும் பல்லாங்குழி ஆடலாமே?

பல்லாங்குழி ஆடி எத்தனை வருடங்கள் ஆகின்றன.

இந்த ஏர்கண்டிஷனும் மொஸாய்க்கும் டைனிங் டேபிளும் யார் கேட்டார்கள்.

ஒரு முற்றம்.

அதன் ஓரம்.

இளம் காற்று.

வேர்க்கடலை கலந்த அரிசிப்பொரி.

பல்லாங்குழி.

மஞ்ஜாடி.

இல்லாவிட்டால்

புளியங்கொட்டை.

கொந்தாட்டம்.

திடீரென்று நாய்கள் குரைத்தன.

ஒரு குள்ளமான உருவம் கையில் குடையுடன் கால்கள் பின்ன உடல் நடுங்க மெள்ள மெள்ள நடந்து வந்து கொண்டிருந்தது.



கோமதி ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

நாய்களை அடக்கிக்கொண்டு வைஷ்ணா அவருடன் நின்று பேசுவது தெரிந்தது.

என்ன நடக்குமோ என்ற பயம் அவளைக் கவ்வலாயிற்று.

## 4

> ஷர்ட்டும் அங்கவஸ்திரமும் இருக்கின்றன; புரோகிதர் அல்ல. குடை பீத்தலாக இருக்கிறது; பணக்காரர் அல்ல. இதுவரைப் பார்த்த முகமாக இல்லை; தெரிந்தவர் அல்ல.

கனகராஜன் என்னதான் பெரிய பங்கு மார்க்கட் புலியாக இருக்கட்டுமே, அவர் தினந்தோறும் காலையில் ஹிந்துப் பேப்பரை எடுத்தால் மார்க்கட் நிலவரங்களை முதலில் கவனிக்க மாட்டார். முதல் பக்கத்தில் வேகமாகக் கண்ணை ஓட்டிவிட்டு இரண்டாவது பக்கம் வருவார். இரண்டு ரக அறிக்கை அல்லது விளம்பரங்களைக் கண் தேடும். ஒன்று மரண அறிக்கை. இன்னொன்று ஏல அறிவிப்பு. யார் இந்த உலகைவிட்டு என்று எக்காரணத்தினால் போயிருக்கிறார்கள் என்று அறிய அவருக்கு பிரத்யேக ஆர்வம். அடுத்தாற்போல எங்கே என்ன சொத்துக்கள் — வீடானாலும் சரி, நிலபுலன்களானாலும் சரி — ஏலத்துக்கு வருகின்றன என்பதைத் தெரிந்துகொள்வதில் தனி விருப்பம். சில சமயங்களில் இரண்டாம் பக்கம் மரண அறிவிப்பு இல்லாமல் அது பன்னிரண்டு அல்லது



பதினாலாம் பக்கத்தில் வெளியாகும். கனகராஜன் தேடுவார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை ஆனதால் கனகராஜன் எடுத்த எடுப்பிலேயே, நான்கு, ஐந்து, ஆறாம் பக்க விளம்பரங்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, பதினாலாம் பக்கத்துக்கு ஓடிவந்தார்.

ஒரு மரண அறிவிப்பு கண்ணில் பட்டது.

கே.எம்.எஸ். பூதலிங்கம் என்பவர் தமது எண்பத்தாறாவது வயதில் கடவுளின் 'லோடஸ் ஃபீட்டில்' போய் விழுந்திருக்கிறார்.

அறிவிப்பு அவரைப் பாதிக்கவில்லை என்றாலும், கனகராஜன் ஓரிரு நிமிடங்கள், தாமரைப் மலர்ப் பாதங்களில் சரணாகதி அடைந்த பூதலிங்கத்தை நினைத்துக் கொண்டார். நாகர்கோவிலில் பிறந்த பூதலிங்கம் கல்லிடைக்குறிச்சியில் ஒரு பெரிய புள்ளியாகத் திகழ்ந்தவர். லட்சக்கணக்காக ஷேர்களில் முடக்கி ஆண்டுதோறும் ஆயிரக்கணக்காக டிவிடண்ட் வாங்கினவர். பெரிய பெரிய கம்பெனிகளில் தூக்கி எறிகிற காசுக்கு முன்னொரு காலத்தில் ஏராளமான பங்குகளை வாங்கிவிட்டு, பிற்காலத்தில் பெரும் லாபத்தை அநுபவித்தவர் பூதலிங்கம்.

அவரைப் பற்றி அவர் இன்னும் ஒரு நிமிடம் நினைத்துப் பார்க்கலாம். அவருடைய பிள்ளை வடிவீசுவரனுக்கு அநுதாபச் செய்தி அனுப்பலாம் என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கையில்தான் போர்ட்டிகோ வாசற்படியில் தீனமான குரல் அவரைச் சற்றே தட்டி எழுப்பியது. குரல் முதலில் மனிதக் குரலாக ஒலிக்கவில்லை. பல நாய்களில் ஒரு நாயின் தாழ்ந்த குரலில் அழும்

கேவலாகப்பட்டது. நாய் மீது அவருக்கு உயிராதலால் பார்த்தார்.

ஒரு மனிதர் வெளிறிப்போன குடையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார். அவர்தான் 'சார்' 'சார்' என்று அழைத்திருக்கிறார்.

ஒரு சில வினாடிகளில் கோபம், எரிச்சல், ஆத்திரம், வெறுப்பு எல்லாம் அவருள் ஒரு மிக்சர் பொட்டணமாக நின்றன.

*யார் இவரை உள்ளே அனுமதித்தார்கள்?*

*வாசலில் நிற்பவனுக்கு மூளை எங்கே போய்விட்டது?*

*ஷர்ட்டும் அங்கவஸ்திரமும் இருக்கின்றன.*

*புரோகிதர் அல்ல.*

*குடை பீத்தலாக இருக்கிறது.*

*பணக்காரன் அல்ல.*

*இதுவரைப் பார்த்த முகமாக இல்லை.*

*தெரிந்தவர் அல்ல.*

அவர் யோசனை செய்து கொண்டிருக்கையிலேயே, குடை தயங்கித் தயங்கி முன்னேறி, படி ஏறி வந்தது.

கனகராஜன் பொறுமையுடன் காத்திருந்தார்.

*கடைசியில்—*

"வரலாமா?" என்ற குரல் அடித் தொண்டையிலிருந்தும் வந்தது.

கனகராஜனுக்குப் பொறுக்கவில்லை.



"அதான் இவ்வளவு தூரம் வந்தாச்சே, உள்ளே வாருங்கள்."

எடுத்த எடுப்பில் எல்லா ஆத்திரத்தையும் கொட்டி விட்டால் வந்தவர் போகும் போது அவர் மீது தெளிக்க ஆத்திரம் இல்லாமற் போய் விடும் என்று கனகராஜன் எண்ணினார்.

சேம்பர்லின் சேஷாத்ரி ஹாலுக்குள் வந்தார். சீதா சொன்னது நினைவுக்கு வந்தது. 'அவர் சோபாவில் உட்கார்ந்தால் நீங்களும் சோபாவில் உட்காருங்கள்.' சோபாவில்தான் கனகராஜன் உட்கார்ந்திருக்கிறார். ஆனால் எப்படி இவ்வளவு நவீனமான, உயர்ந்த ரக சோபாவில் அவர் உட்காருவார். உட்காரக் கூடத் தெரியாதே!

"யார் நீங்கள்?"

"எனக்கு பூர்விகம் திருநெல்வேலி ஜில்லா..."

"நீங்க யார்னு கேட்டேன்?"

"நான் சேஷாத்திரி. இந்தக் குடை எப்போதும் என் கையில் இருக்கும். அதனாலே பசங்க சேம்பர்லின் சேஷாத்ரின்னு கூப்பிடுவா. உங்களுக்கு சேம்பர்லின்னைத் தெரியுமில்லையா? சேம்பர்லின் போன யுத்தத்துக்கு முன்னாலே ஹிட்லரோடே...?"

"சேம்பர்லினை நான் அப்புறம் தனியாக் கவனிச்சுக் கிறேன். நீங்க யார், எதுக்காக வேளை கெட்ட வேளையில் நான் பேப்பர் படிக்கும் போது தொந்தரவு செய்ய வந்திருக்கிறீர்? இதை யெல்லாம் ரத்னச் சுருக்கமா சொல்லும்."

சேஷாத்ரிக்கு கனகராஜன் பேசின விதம் ரொம்பவும் பிடித்திருந்தது. என்ன இருந்தாலும் செல்வந்தன் செல்வந்தன்தான். தம்மை அவர் மிரட்டுகிறார் என்ற எண்ணமே அவருடைய மண்டையினுள் புகவில்லை.

"நான் ஒரு ஸ்கூல் வாத்தியார். அந்தக் காலத்து பி.எ.எல்.டி. உமேஷின் அப்பா"

"யார் உமேஷ்?"

"ஷா வாலஸ் கம்பெனியைத் தெரியுமோ? உங்களுக்குத் தெரியாம எப்படி இருக்க முடியும்? பெரிய கம்பெனியாச்சே!"

"எனக்கு அதனோடு சேர்மனையும் மானேஜிங் டைரக்டரையும்தான் தெரியும். உங்க பிள்ளை உமேஷைத் தெரியாது!"

"என்ன ஆச்சரியமா இருக்கே! என் பிள்ளை உமேஷை உங்களுக்குத் தெரியாது?"

"அதான் சொன்னேனே தெரியாது."

"ஆனா, பாருங்கோ நீங்கதானே கனகராஜன். உங்க பெண் இருக்காளே வைஷ்ணு சிச்சீ விஷ்ணு..."

"வைஷ்ணா!"

"எஸ் வைஷ்ணா. அவளுக்கு என் பிள்ளை உமேஷைத் தெரியும். அதுவும் நன்னாத் தெரியும்!"

கனகராஜன் திகைக்கவில்லை. திடுக்கிடவில்லை. வியப்பு, ஆச்சரியம், லேசான பயம் எல்லாம் பிறந்தன.



"என்ன உளர்றேள்!"

"கால் வலிக்கிறது..."

"உட்காருங்கள்!"

"முன்னாடியே சொல்லியிருந்தால் பெருமைப் பட்டிருப்பேன்..."

"விஷயத்துக்கு வாருங்கள்."

"அதான் வந்தாச்சே!"

"என்ன வந்தாச்சு?"

"என் பிள்ளை உங்க பெண்..."

"அப்படீன்னா?"

"அந்தக் காலத்திலே அப்பா அம்மா பார்த்து வைச்சா. இப்ப அவர்களே..."

"ஓய்!"

"என் மேலே சாடாதீர்கள். எனக்கும் என் பிள்ளை மேலே கோபம்தான். ஆனா என்ன செய்யறது? என் பிள்ளையாச்சே?"

"இது எத்தனை நாளா?"

"நாள் கணக்குத் தெரியாது. ஒரு ஏழெட்டு மாசமாவது இருக்கணும். உங்க பெண் இருப்பாளே அவளையேக் கூப்பிட்டு வேணும்னா கேளுங்கோ!"

"அததுப்பத்தி அப்புறமா நான் ஒரு முடிவு எடுத்துக்கறேன். இப்ப வந்தது, நான் என்ன சொல்லப் போறேன்னு தெரிஞ்சுக்கத்தானே?"

"ஆமாம். அதுவேதான். இது அக்டோபர். பத்து நாளிலே புரட்டாசி முடிஞ்சி ஐப்பசி அடை மழை. கார்த்திகை அவ்வளவு சுகமில்லை. அப்புறம் மார்கழி தான். அது முடிஞ்சுட்டா தை..."

"தமிழ் மாச மெல்லாம் அத்துப் படி!"

"இங்கிலிஷ்லே சொல்லவும் தெரியும். ஜனவரி 14க்குத் தை பிறக்கிறது. சங்கராந்தி ஆனப்புறம் ஒரு நல்ல நாளிலே..."

"நான் யார் தெரியுமா, சேஷாத்திரி?"

"கனகராஜன்!"

"அது பெயர்."

"கம்பெனி அதிபர்."

"சாதாரண அதிபரா?"

"அது தெரியாது."

"பாதி நாள் நான் கவர்னருடன் சாப்பிடறவன். சீஃப் மினிஸ்டர்களுடன் கை குலுக்குகிறவன். பெரிய பெரிய இண்டர்நேஷனல் கம்பெனி டைரக்டர்களுடன் டெலிபோன்லே தினசரிப் பேசறவன். லண்டனுக்கு ஏழு தடவை நியூயார்க்குக்கு நாலு தடவை டோக்கியோவுக்கு..."

"இதைப் பற்றி யெல்லாம் என் பிள்ளை என்னிடம் சொல்லவில்லை, கனகராஜன்!"

"மிஸ்டர் கனகராஜன்!"

"என்னை நீங்கள் வெறும் சேஷாத்ரியாகத்தான்..."

"நீங்கள் போகலாம்."



"அப்படீன்னா?"

"வாத்தியாருக்கேப் புரியலையா? நீங்க வந்தக் காரியம் முடிஞ்சாச்சு..."

"உமேஷ் கிட்டே என்ன சொல்றது?"

"ஒரு சின்ன இடமாப் பார்த்து லவ் பண்ணச் சொல்லுங்கள்."

—"சொல்றேன. ஆனா அவன் பார்க்கமாட்டான்... உங்க பெண் ஒரு பெரிய இடமாப் பார்த்து லவ் பண்ணி யிருந்தால் இந்தப் பிரச்னையே முளைச்சிருக்காது."

—"என் பெண்ணைப் பத்தி எனக்கு நன்னாத் தெரியும். அவளுக்கு.... அவளுக்கு..."

"ஆண் வாடையே பிடிக்காதோ?"

—"அவள் லவ் பண்ற பெண் இல்லை... கலியாணமான பிறகுதான் லவ் பண்றது நம்ம தேசத்துத்துக் கலாச்சாரம்னு என் பெண்ணுக்குத் தெரியும்."

"எனக்கு ஆட்சேபணை இல்லை. தற்காலிகமாக ரெண்டு பேரும் 'லவ்வை' நிறுத்தி வைச்சுக்கட்டும்."

"உமக்கு என்ன திமிரா. இல்லை குசும்பா, என்ன கிண்டல் இப்படிப் பேச?" என்றார் கனகராஜன்.

—"நான் ஒரு ஏழை. திமிருக்கு இடம் இல்லை. கலியாணம் பேச வந்திருக்கேன். அதுவும் பிள்ளைக்காக கெஞ்ச. குசும்பு வார்த்தை எப்படிப் பேசுவேன்."

"என் பெண்ணை உங்க பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக் கொடுக்க எனக்குச் சம்மதம் இல்லை. சம்மதம் இல்லவே இல்லை!"

—"ரொம்ப தாங்க்ஸ்!"

"என்ன?"

"தாங்க்ஸ் சொல்றதும் தப்பா?"

"சொன்ன விதமும் இடமும்தான் சரியில்லை."

"இனிமே என் பாடு விட்டது. என் வரையில் பிரச்னை தீர்ந்தது. இனிமேல் என் பிள்ளைபாடு, உங்க பெண் பாடு... நான் வரேன்."

கனகராஜன் திடீரென்று மௌனமானார்.

"ஒரு சின்ன விஷயம்!"

"என்ன? பஸ் சார்ஜா?"

"இப்ப நீங்க உங்க பணக்காரத் திமிர்லே பேசுகிறீர்கள். பரவாயில்லை. கார்த்திகை மாசத்திலே தெருவில் நாய்கள் கூட்டம் கூட்டமா அலையும். ஆனா வருஷம் பன்னண்டு மாசமும் அதுகள் உங்க வீட்டைச் சுற்றி அலையறது. கேட் வரை யாரையாவது உடன் வரச் சொல்லுங்கள்."

"வர்றப்போ யார் துணை வந்தார்களோ அவர் இப்பவும் வரட்டும்!" என்றார் கனகராஜன்.

"தற்செயலா ஒரு தேவதை போல, உங்க பெண் எதிர்ப்பட்டா. இப்பவும் எதிர்ப்படுவாள்னு நம்ப முடியாது. அவளையே கூப்பிடுங்கள்!"

கனகராஜன் தாம் உட்கார்ந்திருந்த சோபாவின் இடப்புறம் இருந்த ஸ்விட்சை அழுத்தினார். அடுத்த நிமிஷம் ஒருவன் ஓடோடி வந்தான்.



"இவரைக் கேட் வரையில் கொண்டுவிடு. நம்ம வீட்டு டாக்ஸ் கடிக்காதுன்னு தெரியாது அவருக்கு!"

"வரேன். உங்க வீட்லே நாய்கள்தான் கடிக்காதுன்னு தெரிஞ்சு கொண்டேன். உங்க பெண் வைஷ்ணாவை தைரியமாக இருக்கச் சொல்லுங்கள். காதலிச்ச பெண்ணைக் கைவிடற கயவன் என் பிள்ளை இல்லன்னு அழுத்திச் சொல்லுங்கள். வரட்டுமா? வரேன்!"

சேஷாத்ரி குடையுடன் படி இறங்கி நடந்தார்.

என்ன திமிர்!

என்ன குசும்பு!

என்ன நக்கல்!

என்ன நம்பிக்கை!

கனகராஜனுக்கு பிளட் பிரஷர் ஏறியது. தலை கனத்தது. கண்கள் செருகின.

"கோமதி!" என்று கத்தினார்.

5

நாம லவ் பண்ணவேயில்லை. வெறும் புருஷன் பொண்டாட்டியா இருந்தோம், அவ்வளவுதான். லவ்... அந்த வார்த்தைக்கு அர்த்தமே வேறு...

கோமதி, கணவருடைய கோபக் குரலைக் கேட்டதும் அறையிலிருந்து பூனையாக நடந்து பூஜை அறைக்குள் நுழைந்தாள். இருபது நிமிடங்களுக்கு மேலாக கனகராஜனும் சேஷாத்ரியும் பேசித் தீர்த்ததை ஒரு தனி சுவாரசியத்துடன் அநுபவித்த அவள் இப்போது, கணவர் அருகே போகக் கூடாது என்று தீர்மானித்து சுவாமி படங்களை நாடினாள். உமேஷின் தந்தை சேஷாத்ரி இவ்வளவு அழகாக, நையாண்டி கலந்து பேசுவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. தம் பெண்ணை ஒரு சாமான்யன் காதலிக்கிறான் என்ற செய்தி கூட கணவரின் எரிச்சலைக் கிளப்பவில்லை. பிள்ளையின் தந்தை குத்தியும் குதறியும் கிழிக்கிறார் என்ற எண்ணம்தான் அவரை ஒரு ஆக்ரோஷக் குழியில் தள்ளியிருக்கிறது என்பதைக் கோமதி உணர்ந்தாள். இந்த வேளையில் அவள் அவரைச் சந்தித்துப் பேசினால் அவ்வளவுதான்.



கனகராஜன் எரிச்சலையெல்லாம் அவள் மீது திசை திருப்புவார். எதற்கு வீண் பேச்சு; எரிச்சல், கோபம் எல்லாம். அவராகவே அவளைத் தேடி மெதுவாக வரட்டும்.

பூஜை அறையில் இல்லாதது ஏதும் இல்லை. சுவர் நிறைய முருகன்கள், லட்சுமிகள், பார்வதிகள், சிவ விஷ்ணுக்கள், ஒரு படத்தில் சாயிபாபா, இன்னொரு ஓரத்தில் ஐயப்பன்.

நட்ட நடுவே ஒரு படம். காஞ்சி காமாட்சி. அதன் முன் விளக்கு. முந்திய நாள் எரிந்தபின் திரி கரிநூலாகக் கிடந்தது. ஊதுபத்தியின் மிச்சம் தனியாக நிற்க, சாம்பல் கீழே சிதறியிருந்தது. கனகதாராவிலிருந்து சங்கராந்தி பூஜை வரை அநேக சிறு சிறு புத்தகங்கள் அலங்கோலமாகக் கிடந்தன.

கோமதி தரையில் உட்கார்ந்தாள்.

திடீரென்று கணவர் வந்துவிட்டால்; அப்போது அவள் வெறுங்கையுடன் இருப்பாளே?

ஒரு சின்னஞ் சிறு மூன்று அங்குலப் புத்தகத்தை எடுத்தாள்.

மகாலட்சுமி அஷ்டோத்திரம்.

பிரித்தாள். கண் ஓடியதுடன் சரி. மனம் கணவரின் வருகையை எதிர்பார்த்து நின்றது.

"அம்மா!"

"என்ன?"

"அப்பா கூப்பிடறார்."

"சத்தம் போடாதே!"

"அப்பா கூப்பிடறார்."

வைஷ்ணா கிணற்றுக்குள் இறங்கிக் குரல் கொடுத்தாள்.

"தெரியும். நீ பேசாமல் போ... மாடிக்குப் போ..."

"என்ன பேசினா?"

"அப்புறம் சொல்றேன். இப்பப் போ!"

"அப்பா ரொம்பக் கோபமாகக் கத்தினார்."

"அதுதான் இங்கே வந்தேன்."

"ஒளிஞ்சுண்டிருக்காயா?"

"நீ போகமாட்டே?"

"போறேன். ஆனா நான் உன்னைத்தான் நம்பிண்டிருக்கேன்!"

"நான் இந்த அம்பாளை, இந்தக் குருவாயூரப்பனை, இந்த முருகனை இந்த..."

"அப்பா எழுந்து வர்ற மாதிரி இருக்கு. நான் போயிடறேன்."

வைஷ்ணா ஓடிச் செல்லுவதை உணர்ந்த கோமதி, புத்தகத்தில் இருக்கும் சுலோகங்களை உச்சரிப்பது போலப் பாவனை செய்தாள்.

காலோசை நெருங்கி வந்தது. பூஜை அறை வாயிலில் நின்றது.

கோமதி கண்களை மூடிக் கொண்டாள்.



"கோமு!"

அவள் திரும்பவில்லை.

"ஏன் இங்கே வந்து உட்கார்ந்திருக்கே. வெளியே வா."

இன்னும் தாமதித்தால் ஒரு வேளை கனகராஜன் உள்ளே புகுந்து அவளுடைய கையைப் பிடித்து இழுத்தாலும் இழுப்பார் என்று கோமதிக்குப் பட்டது.

"கூப்பிட்டீர்களா?"

"ஏழு தடவை. உங்கிட்டே பேசணும். வா!"

"இதோ."

பூஜை அறையை விட்டு அவள் வெளியே வந்ததும் "வைஷ்ணா என்ன செய்திருக்கிறாள் தெரியுமா?" என்றார் கனகராஜன்.

"என்ன?"

"லவ் பண்றாளாம்!"

"அப்படியா? இருக்காது. அவ என் பெண்!"

"என் பெண்ணும்தான்."

"இருந்தாலும் இருக்காது!"

"யாரோ உமேஷாம்."

"உமேஷா? வடக்கத்திப் பெயரா இருக்கு."

"எல்லாம் தெக்கத்திதான்... நீ என்ன சொல்றே?"

"எதைப் பத்தி."

"வைஷ்ணாவைப் பத்தி."

"எனக்கு என்ன தெரியும்? நீங்க திடீர்னு வந்து ஒரு குண்டைப் போடறேள்!"

"அவள் எங்கே?"

"நான் பார்க்கவில்லை?"

"கூப்பிடு."

"பூஜை ரூம் ரொம்ப டெர்ட்டியா இருக்கு."

"அதனாலேதான் இங்கே வந்து சுலோகம் சொல்ற மாதிரி பாசாங்கு பண்ணினாயோ?"

"வந்து..."

"உன் பெண்ணாலே நம்ம வீடும் டர்ட்டியாக வேண்டாம். கூப்பிடு அவளை!"

கோமதி பதில் சொல்லாமல் நடந்தாள். எப்போது கணவருடன் எதிர்வாதம் செய்யலாம் என்பதை அவள் அறிவாள்.

அவள் பெண்ணுடன் ஹாலுக்கு வந்தபோது, கனகராஜன் இன்னும் 104 டிகிரி ஜுரத்திலேயே இருந்தார்.

"வைஷ்ணா!"

அவருடைய உறுமலுக்கு வைஷ்ணா, "என்ன டாடி?" என்று தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"யார் உமேஷ்?"

"ஃப்ரண்ட்."

"ஃப்ரண்டுன்னா எப்படி ஃப்ரண்ட்?"

வைஷ்ணா தயங்கினாள்.

"சொல்லேன்" என்றாள் கோமதி.



"குட் ஃப்ரண்ட் டாடி."

"எங்கே மீட் பண்ணினே?"

"காலேஜ்லே!"

"அவன் எங்கே அங்கே வந்தான்? ஸ்டெல்லா மாரிஸ் விமன்ஸ் காலேஜ்தானே!"

"ஆமாம்பா... மானேஜர், குமாஸ்தா, பியூன், வாட்ச்மேன் இவங்கதான் ஆண்பிள்ளைகள்."

"இம்பர்ட்டினன்டா யேசாதே!"

"ஸாரி டாடி."

"இப்பச் சொல்லு உமேஷ் எதுக்கு காலேஜுக்கு வந்தான்."

"அவர் ஒரு எம்.பி.ஏ.... எம்.பி.ஏ.ன்னா..."

"நான் எஸ்.எஸ்.எல்.சி. தான். ஆனா ஒரு எம்.பி.ஏ. என்கிட்டேயும் வேலை பார்க்கிறான். விஷயத்துக்கு வா."

"எங்க காலேஜ்லே ஒரு செமினார் நடந்தது. "இந்தியாவில் பிஸினஸ் மானேஜ்மெண்ட் அப்படீங்கற தலைப்பிலே ஒரு ஸெமினார். ஸெமினார்னா..."

"தெரியும். நான் எத்தனையோ ஸெமினார்லே கலந்து கொண்டிருக்கேன்..."

"அப்ப மீட் பண்ணினேன். ஸெமினார் மூணு நாளுக்கு நடந்தது."

"ஓ. ஐ. ஸீ!"

"ரொம்ப நல்லவர் அப்பா."

"அவனுடைய அப்பா யார் தெரியுமா?"

"தெரியும்பா?!"

"அவர் ஒரு டீச்சர். ஜஸ்ட் ஒரு ஸ்கூல் டீச்சர். டீச்சரோடு இன்றைய மதிப்பு என்ன தெரியுமா உனக்கு?"

"அது தெரியாது. டாடி. ஆனா உமேஷ் அப்பா டீச்சரா இருக்கிறதுக்கு உமேஷ் பொறுப்பு இல்லைன்னு நினைக்கிறேன்."

"ஓ, அப்படியா?"

"உமேஷ் ஷாவாலஸில் ஆபீஸர். நாளைக்குப் பெரிசா வருவார். ஏன்னா அவர் ரொம்ப இன்டலிஜெண்ட்..."

"ஓகே. அவன் பெரிசா வரட்டும். ஒரு கலியாணத்தப் பண்ணி ஒரு பிள்ளையையோ, ஒரு பெண்ணையோ பெறட்டும். நீ கலியாணம் ஆகி ஒரு பெண்ணையோ பிள்ளையையோ பெத்துக்கோ. அவங்க பெரியவங்களானப்புறம் அவன் ஃபேமிலியோட அலையன்ஸ் வச்சுக்கோ."

"சரி. டாடி."

"என்ன சரி."

"அதுதான் சொன்னீங்களே, அவர் தனியா கலியாணம் பண்ணிக்கட்டும். நான் தனியா கலியாணம்..."

"கிண்டலா?"

"இல்லை டாடி... நிச்சயமா கிண்டல் இல்லை. நான் ஏற்கெனவே உமேஷ் கிட்டே சொல்லியாச்சு. ஆனா அவர் அப்பாதான்..."

"என்ன சொன்னே?"

வைஷ்ணா தயங்கினாள்.



"அப்பா கேட்கிற கேள்விக்கு பதில் சொல்லு, வைஷ்ணா!" என்றாள் கோமதி.

"நான் சொன்னேன் டாடி. 'என் ஃபாதர் கமர்ஷியல் ஓர்ல்ட்ல ஒரு பெரிய பிராமினனட் பர்ஸன். நான் அவருக்கு ஒரே பெண். என் மேலே உயிரையே வைச்சிருக்கார். நான் பெரிய இடத்தில் சீரும் சிறப்புமாக இருக்க ஆசைப்படறவர்... நீங்க என்னை மறந்துடறது உங்களுக்கு நல்லது அப்படினு சொன்னேன், டாடி."

"குட். வெரிகுட்... ஆனா இதுக்கு அந்த உமேஷ் என்ன பதில் சொன்னான்?"

வைஷ்ணா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கனகராஜன் பதிலுக்காகக் காத்திருந்தார். அது வரவில்லை. கோமதி ஒரு தயக்கத்துக்குப் பிறகு அவளை உந்தினாள்: "சொல்லு."

"உஹூம்."

"முணுமுணுக்காதே, வாய் திறந்து சொல்லு."

"மாட்டேன்."

"நீங்க என்ன பேசிக் கொள்ளுகிறீர்கள்?" என்றார் கனகராஜன்.

"சொல்ல மாட்டாளாம்!" என்றாள் கோமதி.

"ஏன்?"

"இல்லேப்பா..."

"சொல்லு வைஷ்ணா, அந்த உமேஷ் என்ன சொன்னான்?"

"அதை வெளியிட ரொம்பக் கஷ்டமாயிருக்கு டாடி."

"ஏன்?"

"கஷ்டமாயிருக்கு?"

"அதான் ஏன்னு கேட்டேன்?"

"உங்க மனசுக் கஷ்டப்படும். கோபமும் வரும்."

"சொல்லு."

"கோவிச்சுக்காதீங்க டாடி."

"இல்லே சொல்லு."

"அவர் சொன்னார்: 'உன் அப்பாவின் பயோ டேட்டா என் சுண்டு விரல் நக முனையிலே இருக்கு வைஷ்ணா. உன் ஃபாதர், ஆஃப்ட்டர் ஆல் ஒரு எம்.ஏ.பி.எஃப்...'"

"நிறுத்து எம்.ஏ.பி. எஃப்—ன்னா என்ன அர்த்தம்?"

"மெட்ரிகுலேஷன் அப்பியர்ட் பட் ஃபெயில்ட்..."

"ராஸ்கல்."

"அதுதான் சொன்னேனே டாடி நீங்க கோபிச்சுக்குவீங்கன்னு."

"நீங்க எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் இல்லையோ?" என்றாள் கோமதி.

"நீ பேசாம இரு. இப்ப என் ஸ்கூல் குவாலிஃபிகேஷனா முக்கியம்? மேலே சொல்லு வைஷ்ணா."

"ஆஃப்ட்டர் ஆல் ஒரு எம்.ஏ.பி.எஃப்..."

"அதான் ஒரு தடவை சொல்லி வியாக்கியானமும் பண்ணியாச்சே. மேலே வா."



"வீட்டுத் தரகன், கலியாணத் தரகன் மாதிரி அவர் ஒரு ஷேர் தரகன். ஷேர் மார்க்கட்டைப் பார்த்து, ஷேர்களை வாங்க, விற்க மற்றவங்களுக்கு உதவி செய்யற தரகன். அதுக்குக் கமிஷன் வாங்கறார். நிறைய கமிஷன் கிடைக்கறதாலே வீடு கார் ஆள் படை எல்லாம் இருக்கு. உன் அப்பா அப்படி ஒண்ணும் பெரிய பிராமினன்ட் பெர்ஸன் இல்லை அப்படின்னார்."

"அவன் கண்டானா ராஸ்கல்... நான் என்னென்ன செய்யறேன். தெரியுமா, வைஷ்ணா?"

"எனக்குத் தெரியும்பா. எனக்கு நன்னாத் தெரியும். அவர் அப்படிச் சொல்றார். அதுக்கு நான் என்னப்பா செய்யறது."

"இன்னிக்கே இப்பவே ஷாவாலஸ் சேர்மனுக்கு போன் பண்ணி அவன் சீட்டைக் கிழிக்கச் சொல்றேன்."

"அவரே இதை விட்டு விட்டு இன்னொரு பெரிய வேலைக்குப் போறதா இருக்கார்."

"எந்தக் கம்பெனி?"

"தெரியாது."

"தெரிஞ்சாச் சொல்லு, அங்கே இவனை எடுத்துக்காமச் செய்துடறேன்."

"சரி, அப்பா!"

"ராஸ்கல்?!"

"நான் போலாமா அப்பா?"

"நீ இனிமே அவனை மீட் பண்ணக் கூடாது, வைஷ்ணா."

"சரி. டாடி, ஆனா புதுக் கம்பெனியின் பெயர் தெரியணும்னு சொன்னீங்களே..."

"ஓழிஞ்சு போறான். நீ அவனை இனிமேல் மீட் பண்ணப்படாது."

"யெஸ். டாடி... ஆனா அவர் மீட் பண்ண வந்தா?"

"மூஞ்சியைத் திருப்பிக்கோ."

"ஓகே. ஃபாதர்."

—"அந்த டீச்சர் சொன்னதைப் பார்த்தப்போ, நீ உண்மையாகவே அந்தப் பயலை 'லவ்' பண்றியோன்னு ஒரு சந்தேகம் வந்தது..."

"இப்பவும் சந்தேகம் இருக்கா டாடி!"

"நோ... நாட் அட் ஆல். நீ ரியலா அவனை லவ் பண்ணியிருந்தா இப்படியெல்லாம் அவனுக்குப் பாதகமாப் பேசியிருக்கமாட்டே.... என்னை எதிர்த்துப் போராடி இருப்பே..."

"உங்க குணம், கொள்கை, மனசு எல்லாம் எனக்கு நன்னாத் தெரியும், டாடி!"

"யூ ஆர் எ குட் கேர்ள்!"

"தாங்க்யூ, டாடி. ரொம்ப தாங்க்ஸ். ஒரு சின்ன கேள்வி கேட்கலாமா... உங்களை நன்னாப் புரிந்துண்டிருப் பேனான்னு தெரிஞ்சுக்கறதுக்குத்தான், டாடி!"

"கோ ஆன்.. நன்னாக் கேளு!"

"நான் உமேஷைத்தான் லவ் பண்றேன்; அவரைத் தான் கலியாணம் பண்ணிப்பேன்னு பிடிவாதம் பிடிச்சிருந்தா நீங்க எப்படி ரியாக்ட் பண்ணியிருப்பீங்க?"



"முதல்லே அவன் கைகாலை ஒடிப்பேன்... உன்னை ஒரு ரூம்லே போட்டுப் பூட்டி வைப்பேன்... இல்லாமப் போனா நீ கட்டியிருக்கிற துணியோட வீட்டை விட்டுத் துரத்தியிருப்பேன்."

"நீங்க இப்படியெல்லாந்தான் செய்வீங்கன்னு நான் உள்ளூற நினைச்சேன் டாடி..."

"உன் எதிர்காலம் என் கையிலிருக்கு. பயப்படாதே! லவ், கிவ் எல்லாம் பேத்தல்... கண்ணுக்கு லட்சணமா, ஒரு பெரிய பணக்காரப் பிள்ளயாப் பாத்து உன்னை அவன் வசம் ஒப்பிக்கிறேன் பாரு."

"நான் என் ரூமுக்குப் போறேன் டாடி!"

"ஓகே... கோமதி இப்ப என்ன சொல்றே?"

"சொல்ல என்ன இருக்கு. உங்க வழியே தனி வழி."

"இன்னும் இருபது வயசு ஆகாத பெண்ணுக்கு நாம தான் நல்லது பொல்லாதது சொல்லிக் கொடுக்கணும். நல்ல வேளை, அந்த டீச்சர் இன்னிக்கு வந்தார். இல்லாமப் போனா, அந்த உமேஷ் நம்ம பெண்ணின் மனசைப் பாய்சன் பண்ணிக் கடைசியில் நாமத் தலை குனியும் படியாப் பண்ணியிருப்பான்."

"நீங்க சொல்றதும் சரிதான்."

"உன்னை நான் லவ் பண்ணியா கலியாணம் பண்ணிக் கொண்டேன், கோமதி?"

"இல்லை, நாம ரெண்டுபேரும் 'லவ்' பண்ணிக்கவே யில்லை!"

"கலியாணத்துக்கு அப்புறம்தான் லவ் பண்ணிக் கொண்டோம்."

"அப்பவும் நாம் லவ் பண்ணிக்கலை. வெறும் புருஷன் பெண்டாட்டியா இருந்தோம். 'லவ்'– அதுக்கு அர்த்தமே வேறே... உங்களையும் என்னையும் மாதிரி உள்ள சாதாரண மனித ஜன்மங்களாலே அவ்வளவு எளிதில் புரிஞ்சு கொள்ள முடியாது."

"அப்ப! நான் உன்னை லவ்வே பண்ணலை என்கிறாயோ?"

"என் உடம்பு மேலே ஆசையைக் கொட்டினேள். ஒரு வெறியோடு என்னைப் பார்த்தேள். அது எல்லா மிருகங்களும் செய்யற ஒரு காரியம். அதுக்குப் பேரு லவ் இல்லை. லஸ்ட்."

கனகராஜன் ஒரு தடவை ஏற இறங்க அவளைப் பார்த்தார். கோமதியா இப்படியெல்லாம் பேசுகிறாள்? இப்படிப் பேச எங்கே கற்றுக்கொண்டாள்?

லவ் என்றால் என்ன?

லவ்... அன்பு... காதல்

குழந்தை மேல் லவ்

அம்மா மீது லவ்

தம்பிமேல் லவ்

குருவாயூரப்பன் மேல் லவ்

ஒரு பெண்மீது லவ்

இதில் எது அன்பு?

எது பாசம்?

எது பக்தி?

எது நட்பு?



எது காதல்?

இதெல்லாம் தெய்வீகம் என்றால், லஸ்ட் என்றாளே கோமதி, அதற்கு என்ன அர்த்தம்?

ஒரு நிமிட மன உளைச்சலுக்குப்பின் கனகராஜன் எழுந்தார். ஒரு உறுதி நிலைத்தது.

அவருடைய மாப்பிள்ளை ஒரு மாபெரும் பணக்கார வீட்டுப் பிள்ளையாக இருப்பான். இது நிச்சயம்.

## 6

> எவ்வளவு அழகா, ஒத்தை நாடியா
> உதடெல்லாம் சிவக்க, முகத்திலே கண்
> விளையாட இருப்பே! இரு. ஒரு தடவை
> நான் என் கண்ணைத் துடைச்சுட்டுப்
> பார்க்கிறேன்.

அந்த ஞாயிற்றுக்கிழமை எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சுகளை கஞ்சத்தனம் இல்லாமல் உதிர்த்தார்கள்.

இனிமேல் தன் பெண் வைஷ்ணா காதல் திசையில் தலைவைத்துப் படுக்கமாட்டாள். தாம் பார்க்கும் வரனுக்கேக் கழுத்தை நீட்டுவாள் என்று கனகராஜன் நிம்மதி அடைந்தார்.

பிள்ளை இட்ட கட்டளையை நிறைவேற்றியாகிவிட்டது. இனிமேல் தமக்கு எந்த விதமான ஒரு தொல்லையும் இராது என்று சாம்பர்லின் சேஷாத்திரி சரித்திரத்தின் பொற்காலங்களில் ஒன்றினைத் தேடி எடுத்து அதனுள் மூழ்கினார்.

அப்பாவின் உள்ளம் என்ன என்பதைத் திட்ட வட்டமாக வைஷ்ணா அறிந்து இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு அந்தத் திட்டத்தை எப்போது எப்படியெல்லாம் செயல்படுத்த வேண்டும் என்று யோசிக்கலானாள்.



உமேஷ் வைஷ்ணாவுக்காகக் காத்திருந்தான்.

—மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று முடிவெடுக்க.

இவர்கள் எல்லோரும் இப்படியாக வெவ்வேறு திசைகளில் நிம்மதி என்னும் கோட்டையைப் பிடித்து மகிழும்போது, கோமதி மட்டும் சும்மா இருப்பாளா?

திங்கட்கிழமை அன்று கனகராஜன் கம்பெனிக்குக் கிளம்பிச் சென்றதும் எங்கேயோ பரண்மேல் நூற்றுக் கணக்கான சாமான்களுக்கிடையில் ஒளிந்திருந்த பல்லாங்குழியைத் தேடி எடுத்து துணியால் துடைத்து தயாரானாள். பனை ஓலைக் கூடை நிறையக் குந்து மணிகள்! ஆஹா, பல்லாங்குழி ஆடி எத்தனை எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன!

கார் சேஷாத்ரி வீட்டு வாசலில் நின்றது. டிரைவரிடம் ஒரு ஐந்து ரூபாய் நோட்டை வீசி எறிந்து, "சரியா மூணு மணிக்கு வா" என்றாள். டிரைவர் அந்த ஐந்து ரூபாய் நோட்டில் என்ன வாங்கலாம் என்று மனத்துள் ஒரு பட்டியல் தயாராக்கிக்கொண்டு கிளம்பினான்.

திண்ணைக் கம்பிகளைப் பிடித்து நின்று கொண்டிருந்த சீதா கார் நின்றதும் திகைத்தாள். அதிலிருந்து ஒருத்தி ஒரு பையுடன் இறங்குவதைக் கண்டதும் மலைத்துப் போனாள். அனாயாசமாக ஒரு ஐந்து ரூபாய் நோட்டு வீசியெறியப்படுவதைக் கண்டதும் ஸ்தம்பித்துப் போனாள்.

யார் இது?

பட்டுப் புடவை,

வைரத்தோடு.

வலது கையில் ஏழெட்டு வளையல்கள், இடது கையில் வாட்ச்.

மூக்கில் பேஸரி.

கழுத்து நிறையச் சங்கிலி.

ஒரு கிராம் தங்கத்தின் விலை அன்று ரூ. 151.25.

எட்டு கிராம் ஒரு சவரன்.

எவ்வளவு சவரன் இருக்கும்? வைரம் ஜொலிக்கிற ஜொலிப்பைப் பார்த்தால், நிச்சயமாக கிம்பர்லி வைரமாகத்தான் இருக்கவேண்டும். பெல்ஜியத்தில் செதுக்கின வைரமாகத்தான் இருக்க வேண்டும். காரட் பத்தாயிரம், ஏன் பன்னிரண்டாயிரம் கூடத் தேறும்!

அவள், அந்தக் கார் வீடு தவறி நின்றுவிட்டது என்று முதலில் நினைத்திருந்தாள். ஐந்து ரூபாய் நோட்டை வீசியெறிந்தவள் நிச்சயமாக சரியான விலாசம் கேட்பாள். பதில் சொல்லலாம். சொல்லும் போது நகைகளை மேலும் உன்னிப்பாகக் கவனிக்கலாம். பட்டுப் புடவை ஸ்பெஷல் தறியில் நெய்தது போல இருக்கிறது. நல்லியில்தான் ஆர்டர் கொடுத்து வாங்கியிருக்க வேண்டும்.

சீதா நினைத்தபடி கோமதி படியேறி வந்தாள்.

சீதா திண்ணைக் கம்பிகளை அப்புறம் கவனித்துக் கொள்ளலாம் என்று வாசற் கதவுக்கு ஒரு பரபரப்புடன் வந்தாள். கதவைத் திறந்தாள்.

கோமதி ஒரு கணம் சீதாவின் விழி பிதுங்கும் வியப்பைச் சந்தித்துவிட்டு, "என்னடீ சீதா, கண்ணை



உருட்டிப் பார்க்கிறே? என்னைத் தெரியலையாடீ?" என்றாள்.

ஞாபக சக்திப் பந்தயத்தில் சீதா சுரணையுடன் போட்டி இட்டாள். சுரணை தோற்காது.

"உள்ளே வாருங்கள்."

"என்னடீ மரியாதை? கார்லே வந்தேன்னா? நான் உன் பழைய சிநேகிதி கோமா டீ... கோமதி!"

"என்ன... என்ன சொன்னே? நீ... நீ... என் பழைய கோமாவா? என்னடீ இப்படி குண்டாப் போயிட்டே? எவ்வளவு அழகா, ஒத்தை நாடியா உதடெல்லாம் சிவக்க முகத்திலே கண் விளையாட இருப்பே! இரு. ஒரு தடவை நான் என் கண்ணைத் தொடைச்சுட்டுப் பார்க்கிறேன்."

"வேணும்னா சோப்புப் போட்டு அலம்பிட்டுப்பாரு, சீதா!"

"வா... வா... வா உள்ளே வா. இப்ப நான் எவ்வளவு சந்தோஷப்படறேன் தெரியுமா? அளந்தா லட்சம் விட்டர் இருக்கும்... நிறுத்தினா லட்சம் கிலோ தேறும்... வா... வா..."

"வா வான்னு சொல்லிண்டு இங்கேயே நின்னா எப்படி முதல்லே நட..."

சீதா நடந்தாள்.

கோமதி பின் தொடர்ந்தாள்.

"நீ கார்லேருந்து இறங்கி வந்திருக்கிறவள். பெரிய பங்களாவில் வாழறவளாப்படறது. இது ரொம்பப் பழைய வீடு. சுவரைப் பார்க்காதே. கண்ணு கலங்கும். நிலத்தைப் பார்க்காதே... சிமெண்ட் தரைன்னு சொன்னா அங்கங்கே பாளம் பாளமா..."

"நிறுத்துடீ... நான் இதையெல்லாம் பார்க்க வரலே. உன்னைப் பார்க்க வந்திருக்கேன்... இந்தா முதல்லே இதை வாங்கிக்கோ."

"என்ன அது?"

"உனக்குக் கற்பூர வாழைப்பழம் உசிராச்சே... வாங்கிண்டு வந்தேன்!"

"இன்னும் நினைவு வைச்சுண்டிருக்கியே!"

"நீதான் என்னை அடியோடு மறந்துட்டே..."

"உன்னை ஞாபகம் வைச்சுக்கும்படியா என் வாழ்க்கை அமையலைடி கோமதீ!"

"ஏண்டீ குறைப்பட்டுக்கிறே?"

"பின்னே என்னடீ? புடவை தீபாவளிக்கா, பொங்கலுக்கான்னு மூளையைக் குழப்பிக்கொண்டு கடைசியில் எதற்குமே இல்லை என்கிற நிலை... என் ஆம்படையான் ஒரு ஸ்கூல் டீச்சர்."

"ஏன், உன் பிள்ளை சம்பாதிக்கணுமே. நான் அவன் விஷயமாத்தான் வந்தேன்! அதோடே உன் கூட ஒரு தடவையாவது பல்லாங்குழி ஆடணும்னு ஆசைப்பட்டேன்..."

"ஓ, ஆடலாம்."

"காலம் நேரம் போறது தெரியாம எத்தனை நாட்கள் ஆடியிருக்கோம்."

"ஒரு தடவை என் அம்மா நம்ம ரெண்டு பேரையும் நறுக்கு நறுக்குன்னு கிள்ளினா, நீ பால் பொங்கறதையும் கவனிக்காம ஆடினேன்னு!"



"இப்பக்கூட அந்த இடம் வலிக்கிறது. அதுசரி. எனக்குக் கலியாண வயசில் ஒரு பிள்ளை இருக்கான்னு உனக்கு எப்படித் தெரியும்? மகாலிங்கபுரம் கோவில் லேந்து தெரிஞ்சுண்டாயா?"

"எப்படியானால் என்ன?"

"நீ நல்ல சமயமாப் பாத்துத்தான் வந்திருக்கே, கோமா. நேத்துத்தான் எங்களுக்கு ஒரு இடத்திலேருந்து முடிவு தெரிஞ்சுது!"

"பெண்ணோட அப்பாவுக்குப் பிடிக்கல்லை யாக்கும்!"

"ஆமாம், அது உனக்கு எப்படித் தெரியும்?"

"நான்தான் அந்தப் பெண்ணோட அம்மா..."

சீதா மூர்ச்சையாகப் போக இருந்தாள். தக்க சமயத்தில், கோமதியின் வைரப் பேசரி ஒளிவீசி அவள் கண்ணைத் திறக்கவே சமாளித்துக்கொண்டாள்.

"வைஷ்ணவின் அம்மாவாடீ, நீ?"

"ஆமாம்டீ..."

"ஆனா, நான்தான் உன் பழைய சினேகிதிதான். உமேஷின் அம்மான்னு எப்படித் தெரிஞ்சுது?"

"என் பெண்ணும் உன் பிள்ளையும்தான் ஏழெட்டு மாசமா ஓட்டல்லே டிபன், தியேட்டர்லே சினிமா, பீச்சிலே காத்துன்னு அலையறாளே! ஏண்டி, நாமெல்லாம் அந்தக் காலத்திலே இந்தக் காலத்து பிள்ளை, பெண்கள் மாதிரி அலைஞ்சோமா?"

"அலைய யாரும் விடலை. அப்படி அலையறதுன்னு புறப்பட்டாலும் எங்கே அலையறது கல்லிடைக்குறிச்சியிலே?

ரெண்டு தியேட்டரோ, மூன்று தியேட்டரோ! ஓட்டலுக்குள் நுழைய முடியாது. பீச் கிடையாது... அப்ப உன் பெண் மூலமாகத்தான் என் விலாசத்தைத் தெரிஞ்சுண்டாயா?"

"ஏன் உன் ஆம்படையான் இங்கே இருக்கிறது ஏற்கெனவே தெரியும். ஆனா நீதான் அவர் பெண்டாட்டின்னு ரொம்ப நாளாகத் தெரியாது..."

"உன்னை அவருக்குப் பார்த்தார்கள் இல்லே?" என்றாள் சீதா.

"யார் யார், யார் யாருடன் மணையில் உட்காரனும்னு பகவானாப் பார்த்து நிச்சயிக்கறப்போ, அதிலே என்ன இருக்கு பேச... வா பல்லாங்குழி ஆடிண்டே பேசலாம்..."

"உன் பெண் என் பிள்ளைக்குக் கிடைக்கலைங்கற விசனம் மறைஞ்சே போச்சுடீ, கோமா, உன்னைப் பார்த்ததும்!"

"யார் சொன்னா, என் பெண் உன் பிள்ளையை கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லைன்னு?"

"என்ன உளர்றே, உன் ஆம்படையான்தான் என் ஆம்படையானைத் துரத்தித் துரத்தி அடிச்சாரே..."

"அவர் கிடக்கிறார், ஒவ்வொரு வரனுக்கும் என்ன ஷேர் இருக்கும்னு கணக்குப் போடறவர்தானே அவர்! நீயும் நானும் சம்பந்தியாகப் போகிறோம்டீ. என் பெண் ஆசைப்படிதான் நடக்கப் போறது?"

"அது எப்படியடீ சாத்தியம்?"

"யார்ட்டேயும் உளற மாட்டாயே சீதா!"

"மாட்டேன்."



"உன் புருஷன்கிட்டே கூடச் சொல்லக்கூடாது!"

"இல்லே. சொல்லலல்லே."

"ரெண்டு பேரும் ஓடப் போறா."

"என்ன சொன்னே?"

"ஏன், காதலிச்ச ரெண்டு பேர் எதிர்ப்பு வர்றப்போ ஓடறதில்லையா? உன் பிள்ளை இங்கேயும் என் பெண் அங்கேயும் தூக்கம் பிடிக்காம, சோறு பிடிக்காம சரியாப் பல் தேய்காம, குளிக்காம பரட்டைத் தலையுடன் உட்கார்ந்திருக்கணும்னு ஆசைப்படறியா? இன்னும் ஒரு வாரத்தில் உன் பிள்ளை ஆபீஸ்காரியம்னு ஒரு பெட்டி யுடன் கிளம்பறான். என் பெண் காலேஜ் எஸ்கர்ஷன்னு புறப்பட்டு...!"

"எந்த ஊருக்கு?"

"அது அவர்களுக்குத்தான் தெரியும். எனக்குக் கூடத் தெரியாது!"

"ஏண்டி இந்தக் கூத்து?"

"என் புருஷனைப் பற்றி உனக்குத் தெரியாது. தாம் பிடிச்ச முயலுக்கு ரெண்டே முக்கால் கால்தான்னு ரோட்டரி கிளப் மீட்டிங்கிலே கூடச் சாதிக்கிறவர். அவர் மனசாலே உன் பிள்ளையைத் தூக்கி எறிஞ்சாச்சு. அவர் மனசை ஆபரேஷன் செய்துதான் மாத்தணும். காதல் ஓட்டம் ஒன்றுதான் வழி. அதுதான் நான் யோசிச்சு முடிவு செய்திருக்கிற ஆபரேஷன்!"

"அவர் போலீஸ் கீலீஸ் போனா? என் உமேஷை லாக் அப்லே போடுவாளே! அவனுக்கு கட்டித் தயிரா சாப்பிட்டுப் பழக்கம். லாக் அப்லே கட்டித் தயிர் கொடுக்க மாட்டாளே."

"ஏண்டி, பல்லாங்குழி ஆட உட்காராம பேத்தறே. சீதா என் பெண்ணுக்கு பத்தொன்பது நிறைஞ்சாச்சு. மைனர் இல்லை. மேலும் சம்ஸ்காரங்களிலே என்ன சொல்லியிருக்கு தெரியுமா?"

"என்ன சொல்லியிருக்கு?"

"ஒரு பெண தான் ருதுவாகி மூன்று வருஷங்களுக்குள் கன்னிகாதானம் செய்து கொடுக்கப்படாவிட்டால், அவள் சுதந்திரமாகிறாள். அவளுக்கு யாரை வேண்டுமானாலும் விரும்பி மணந்து கொள்ள உரிமை உண்டு."

"அப்படியா?"

"அன்னிக்கு நீயும் நானும் இந்த உரிமையை உபயோகிக்கலை. ஆனா என் பெண்ணுக்கு நான் உரிமையை மறுக்கப் போவதில்லை."

"இந்த மாதிரிக் கதை இன்னொரு வீட்டிலே நடந்தா கேட்க ரசமாயிருக்கும். நம்ம வீட்டிலே..."

"பேசாம இருடீ... என் பெண் ரம்பை மாதிரி இருப்பாள்."

"உமேஷைக் கேட்டப்போ பெண் சாதாரணமாகத்தான் இருப்பாள்னு சொன்னானே..."

"நாளைக்கு நான் உனக்குக் கார் அனுப்பறேன்... வா. வந்து பெண்ணைப் பாரு. ஆனா வைஷ்ணா கிட்டே நீ யார்னு சொல்லிக்காதே. என்னதான் நாளைக்குக் கலியாணமானப்புறம் அவள் உன்னை உதறி எறிவாள்னு எதிர்பார்த்தாலும் இப்போதே அவள் அப்படி ஆரம்பிக்க வேண்டாம்."



"எனக்குத் தலை சுத்தறது."

"இன்னொரு சமாச்சாரம்."

"என்னடீ?"

"நான் இன்னிக்கு வந்துபோனது உன் வீட்லே யாருக்கும் தெரிய வேண்டாம். முக்கியமா உன் ஆம்படையானுக்கு..."

"சரி."

"என்னை என் அப்பாவை எல்லாம் தெரியும். அன்னிக்கு அவர் வீட்டிலே எதிர் ஜாமீன் கேட்டப்போ, என் அப்பா விழி பிதுங்காம இருந்திருந்தா நான் இந்த வீட்டிலே ஒரு ஸ்கூல் டீச்சரின் பெண்டாட்டியா இருந்திருப்பேன்!"

"கடவுள் உன்னைக் காப்பாற்றினார்!" என்றாள் சீதா.

"இப்ப என்னை ஒரு ராட்சசன் பொன்னும் மணியுமாகக் கொட்டிக் காப்பாத்திண்டிருக்காள், சீதா. வாழ்க்கையில் எங்கே என்ன சுகம் இருக்குன்னு உனக்கு இன்னும் தெரியலைடீ... ஒரு ஏழை திடீர்னு பணக்காரனாகி விட்டால், பணக்கார் இதயம் திடீர்னு முளைச்சுடாதுடீ... மாறாக வக்கிர புத்திதான் முளைக்கும். நான் என்னுடைய கூடப் பிறந்தவர்களோடு உறவாடறது கூட அவமானம்னு நினைக்கிற அளவுக்குக் கூட என் புருஷன் தாழ்ந்து போயிட்டார்! இதையெல்லாம் நான் எந்தச் சுவர்கிட்டே சொல்லி முட்டிப்பேன்! என்னமோ சீதா இன்னிக்கு இங்கே வந்து உங்கிட்டே சொல்றேன்!"

"உன் தொண்டை கனக்கிறது. கோமதி வா பல்லாங்குழி ஆடலாம்..."

"அதுக்கு முன்னாலே ஒரு டம்ளர் மோர் குடுமே தாகமாயிருக்கு!"

சீதா உள்ளே போக, கோமதி சிறு கூடத்தில் சுவரில் தொங்கும் படங்களைப் பார்த்தாள்.

ஒரு படம் கண்ணை ஈர்த்தது. ஒரு நிமிடம் நின்று பார்த்தாள். தம்பதியின் போட்டோ!

சீதா இருந்தாள். சேஷாத்ரி இருந்தார்.

அவள் உள்ளூர விதியின் சிரிப்பை நினைத்துக் கலங்கினாள்.

# 7

> எனக்கும் கிரிக்கெட்லே என்ன தெரியும்? முக்கால் வாசிப் பேருக்குத் தெரியாது. ஏதோ டெஸ்ட் மாட்ச், உற்சவம் மாதிரி, பொங்கலுக்குப் பொங்கல் நடக்கிறது...

முன்பெல்லாம் கனகராஜனுக்குக் குஷி பிறந்தால் தலைகால் புரியாது. 'ஹா' என்பார். 'ஹூ' என்பார். தோட்டக்காரக் கிழவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு சுழலாட்டம் ஆடுவார். ஆனால் இப்போது கடந்த நான்கு ஆண்டுகளாக, அவர் அகில இந்திய ஷேர்பிரோக்கர்ஸ் அஸோஸியேஷனின் காரியதரிசி ஆன நாளிலிருந்து தம்மைத் தாமே மாற்றிக் கொண்டார். அளந்து பேசுவது, முகத்தை அனாவசியமாகக் கடுமையாக வைத்துக் கொள்ளுவது, சிரிப்பு இயல்பாக வரும் போது அதை வாய்க்குள்ளேயே அடக்கிக் கொள்வது என்ற பழக்கங்களையெல்லாம் ஏற்படுத்திக் கொண்டார். வீட்டுக்கு வெளியே இருந்த பழக்கங்க ளெல்லாம் நாளடைவில் வீட்டினுள்ளும் தோன்றலாயின. இது கோமதிக்கு ஒரு விதத்தில் பரம திருப்தியை அளித்த போதிலும் பல விதங்களில் இம்சையாக இருந்தது.

கணவருடைய செயற்கையான உணர்ச்சிகளை அவளால் ரசிக்க முடியவில்லை. புரிந்து கொள்ளவும் முடிய வில்லை.

அன்று செவ்வாய்க்கிழமை.

எது தவறினாலும் கோமதியின் செவ்வாய், வெள்ளி எண்ணெய் ஸ்னானம் தவறாது. அதிகாலையிலேயே குளித்துவிட்டு, மலையாளத் துண்டால் கேசத்தைப் பொதிந்து கொண்டு அவள் ஹாலுக்கு வந்தாள்.

அப்போது கனகராஜன் குஷியாக இருந்தார். முந்தினநாள் இரவுதான் (பத்தரை மணிக்கு அப்போது கோமதி தூங்கியாகிவிட்டது) கல்கத்தாவிலிருந்து ஒரு சர்வதேசக் கம்பெனியில் இந்தியப் பிராந்தியத்துக்கு ஜெனரல் மானேஜராக இருக்கும் சதாசிவத்திடமிருந்து டெலிபோன் மூலம் பதில் வந்தது. எக்கச்சக்கமான பணத்தையும் ஒரே பிள்ளையையும் கொண்ட அவர் சம்மதம் தெரிவித்து விட்டார். சதாசிவத்தின் பிள்ளை ஒரு கிரிக்கட் வீரன். இந்தியா குழுவுக்கும் அவனுக்கும் இடையில் ஓரிரு அங்குலங்கள்தான் இருந்தன. அதில் அவன் இடம் பெற்றுவிட்டால், கிரிக்கட் வீரர் ஆகி விடுவார். அவனுடைய ஆட்டத் திறமையை உத்தேசித்து ஒரு பெரிய நிறுவனம் சுவீகாரம் எடுத்துக் கொண்டிருந்தது. அந்த ஸ்ரீ குமாருக்கும் வைஷ்ணாவுக்கும் கலியாணம் நடக்கத் தடை ஏதும் இல்லை என்று சதாசிவம் கூறி விட்டார். பெண் பார்க்கும் படலம் அனாவசியம் என்றாலும், ஸ்ரீ குமார் ஒரு கிரிக்கட் பந்தயத்தை முன்னிட்டு அந்த வியாழக்கிழமை இரவு விமானத்தில் சென்னை வரும் போது, அவன் மட்டும் வைஷ்ணாவைச் சந்தித்துக் கொள்ளலாம் என்று சதாசிவம் கூறியிருந்தார்.



கனகராஜன் இரவைச் சொப்பனங்களில் கழித்தார். சதாசிவம் சம்பந்தியாக வந்தால் அகில இந்தியாவிலும் கனகராஜன் புகழ் பெறுவார். சதாசிவத்தின் உதவியால் கல்கத்தாவில் ஒரு கிளை துவங்கலாம்.

வைஷ்ணா கொடுத்து வைத்தவள். இதை அவருடைய மனம் முணுமுணுத்துக் கொண்டிருக்கையில் தான் கோமதி மஞ்சள் முகத்துடன் குங்குமம் பளிச்சிட, மலையாளத் துண்டுத் தலையுடன் ஹாலுக்குள் வந்தாள்.

"கோமா!"

"உம்."

"ஒரு வெரிகுட் நியூஸ்!"

"என்ன?"

"உன்கிட்டே மட்டும் சொன்னால் போதாது. வைஷ்ணாவையும் வரச் சொல். தூங்கிண்டிருந்தா எழுப்பு."

"அது கஷ்டம்!"

"என்ன சொல்றே?"

"இப்ப அவள் எங்கே இருக்கான்னு எனக்குத் தெரியாது."

"என்ன உளர்றே?"

"சனிக்கிழமை ராத்திரி அவள் காலேஜ் எஸ்கர்ஷன்னு உங்ககிட்டே சொல்லிவிட்டுப் போனாளே, நினை வில்லையா?"

"நான் அவசரமாப் புறப்பட்டு கார்லே ஏர்ற சமயத்திலே ஓடிவந்தா. என்னமோ சொன்னா, நானும் தலை ஆட்டினேன்."

"எஸ்கர்ஷன் போறேம்ப்பா அப்படீன்னா. நான் வாசல் வெராண்டாவில் நிண்டிருந்தேன். நீங்க வெறுமனே தலையாட்டினீங்க. ஜாக்கிரதையா போயிட்டுவான்னு கூடச் சொல்லலை."

"எனக்கு வர வர..."

"வீட்டுப் பேர்லே அக்கரை குறைஞ்சுண்டு வர்றதுன்னு எனக்கேத் தெரியும். ஷேர் மார்க்கட்தான் உங்க உலகம். வீடு எல்லாம்."

"சரி எப்ப வர்றா!"

"அதைச் சரியா சொல்லலை."

"எங்கே இருக்கா?"

"முதல்லே கோடைக்கானல்னா. அப்புறம் மதுரை திருவனந்தபுரம்..."

"கொஞ்சம் இரு."

"சொல்லுங்கள்."

"காலேஜ் எஸ்கர்ஷனா?"

"ஆமாம்."

"நவம்பர்லே பரீட்சை இருக்குன்னாளே..."

"ஆமாம்."

"இது அக்டோபர் 14ந் தேதி. எப்படிக் காலேஜ்லே இந்த சமயம் பார்த்து எஸ்கர்ஷன் ஏற்பாடு செய்ய முடியும்?"

"இது காலேஜைக் கேட்க வேண்டிய கேள்வி. இன்னும் நாலைஞ்சு நாளிலே வந்துவிடுவான்னு நினைக்கிறேன்."



"வர்ற ஞாயிற்றுக் கிழமைக்குள்ளே வருவாளா?"

"தெரியாது."

"சரி..." என்று சொன்னவர், "வரவழைக்கிறேன்" என்று தாழ்ந்த குரலில் கூறினார்.

"ஏனாம்?"

"சதாசிவம் நேற்று ராத்திரி போன்லே பேசினார்."

"யார் அது சதாசிவம்..."

"இண்டர்–கான்டினென்டல் கம்பைன்ஸில் ஜெனரல் மானேஜர். கல்கத்தாவில் இருக்கார். நீகூட ஒரு தடவை ஏர்போர்ட்லே அவரைப் பார்த்திருக்கே. நாம் பம்பாயிலிருந்து திரும்பறப்போ அவர் கல்கத்தா பிளேனுக்காக வெயிட் பண்ணிண்டிருந்தார்..."

"அவர் போன்லே என்ன சொன்னார்?"

"சம்மதம்னு சொன்னார்."

"சம்மதம்னா... கொஞ்சம் புரியும்படியா சொல்லுங்களேன்."

"ஓ, மூலக் கதையே மறந்துட்டேன், பாரு. சதாசிவத்துக்கு எக்கச்சக்கமா சொத்து இருக்கு. ஒரே பிள்ளை. கிரிக்கெட் சாம்பியன். இப்ப வெஸ்ட் பெங்காலுக்கு ஆடறான்."

"ஆட்டுமே."

"இருபத்தஞ்சு வயசு."

"இருக்கட்டுமே."

"நாளைக்கே டெஸ்ட்லே இடம் பெறுவான். இந்த இருபத்தாறாம் டெஸ்ட் டீம் அனௌன்ஸ் பண்ணப்

போறா... கவாஸ்கருக்கே அவனுடைய பேட்டின் மேலே அபார மதிப்பு. போலீங் அற்புதம்னு கபில்தேவ் சொல்லியிருக்கான்... ஃபீல்ட்டிங்லே..."

"எனக்கு கிரிக்கெட் தெரியாது. பல்லாங்குழிதான் தெரியும்."

"எனக்கும் கிரிக்கெட்லே என்ன தெரியும்? முக்கால் வாசிப் பேருக்குத் தெரியாது. ஏதோ டெஸ்ட் மாட்ச் உற்சவம் மாதிரி பொங்கலுக்குப் பொங்கல் நடக்கிறது. நானும் வைஷ்ணாவை, அழைச்சுண்டு பெவிலியன்லே உட்கார்ந்துட்டு வர்றேன்... என்ன சொல்ல வந்தேன்னா, வந்து..."

"இப்ப எல்லாம் புரிஞ்சுடுத்து."

"ஸ்ரீ குமார் வியாழக்கிழமை வர்றான். மூணு நாள் மாட்சு. வெள்ளி ஆரம்பிச்சு ஞாயிறு முடிஞ்சுடும். அன்னிக்கு ராத்திரியே ஒரு வேளை கல்கத்தா திரும்பிடுவான். அதுக்குள்ளே..."

"பெண் பார்க்க இங்கே வரணும்னு சொல்றீங்க!"

"எக்ஸாட்லி."

"அடுத்த மாட்சுக்கு வரும்போது பார்த்துக் கொள்ளட்டும்"

"ஏன், உனக்குப் பிடிக்கலையா?"

"உண்மையைச் சொல்லட்டுமா லவலேசமும் பிடிக்கலை."

"ஏன்?"

"வைஷ்ணாவுக்குப் பிடிக்காதது எனக்கும் பிடிக்காது."



"இந்த ஸ்ரீ குமார் விஷயம் இன்னும் அவளுக்குத் தெரியாது. எப்படி அவளுக்குப் பிடிக்கலைன்னு நீ முடிவு சொல்றே?"

"அவளுக்கு ஒருத்தனைத் தவிர யாரையும் பிடிக்காது."

"யார் அந்த ஒருத்தன்?"

"உமேஷ்."

"யார் அவன்?"

"சேஷாத்திரியின் பிள்ளை."

"யார் சேஷாத்திரி?"

"சேஷாத்திரி ஒரு பெரிய கம்பெனியில் சேர்மனாகவோ மானேஜிங் டைரக்டராகவோ இருந்தால் கப்புன்னு ஞாபகம் வரும். ஒரு பீத்தல் குடையை கஷ்கத்திலே மாட்டிண்டு வர்ற ஸ்கூல் டீச்சரா இருக்கறப்போ உங்களுக்கு எப்படி நினைவு வரும்...?

"கொஞ்சம் இரு... கொஞ்சம் இரு... போன ஞாயிற்றுக் கிழமைக்கு முந்தின ஞாயிற்றுக்கிழமை, என்கிட்டே கிண்டலா குறும்பாப் பேசிட்டுப் போனாரே அவரா?"

"அவரேதான் சேஷாத்திரி. அவருடையப் பிள்ளை தான் உமேஷ். அவனைத்தான் வைஷ்ணாவுக்குப் பிடிச்சிருக்கு."

"நடக்காது."

"இதைத்தான் அன்னிக்கே சொல்லியாச்சே? ஏன் மறுபடியும் கத்தறேள்?"

"என்னிக்கும் இதைத்தான் சொல்லுவேன். நான் பெத்த பெண் யாரைக் கலியாணம் பண்ணிக்கொண்டு வாழ்ந்தால் சீரும் சிறப்புமா இருப்பான்னு எனக்குத் தெரியும்."

"உங்களுக்குத்தான் தெரியும்."

"எங்கே போறே?"

"சுவாமிக்கு ரெண்டு பூவையாவது போட்டுட்டு வேலையைக் கவனிக்கிறேன்..."

"ஸ்ரீ குமார்?"

"அவன் நன்னா கிரிக்கெட் ஆடட்டும். வேணும்னா நானும் பெவிலியன்லே உட்கார்ந்து வேடிக்கை பார்க்கிறேன்..."

கோமதி உள்ளே சென்றாள்.

கனகராஜன் பொருமிக்கொண்டே கடிகாரத்தைப் பார்த்தார். ஏழு அடித்து எட்டு நிமிஷம். இப்போது கல்லூரி வாட்ச்மேன், கண் விழித்திருக்கமாட்டான். ஏன் கல்லூரித் தலைவிக்கு போன் செய்யக் கூடாது. கண்டிப்பாக அவள் எஸ்கர்ஷனில் கலந்துகொண்டிருக்க மாட்டாள்.

டெலிபோன் டைரக்டரியை எடுத்தார். தேடினார். கிடைத்தது. டயல் செய்தார்.

"குட்மார்னிங். கனகராஜன் பேசறேன். ஷேர் மார்க்கெட் கனகராஜன். என் பெண் வைஷ்ணா உங்க காலேஜ்லே எம்.ஏ. ஃபர்ஸ்ட் இயர் படிக்கிறா."

"யெஸ், ஐ நோ ஹெர். வாட் இஸ் தி பிராப்ளம்."

"காலேஜ் எஸ்கர்ஷன் போயிருக்கா!"



"வாட் எஸ்கர்ஷன்?"

"மதுரை..."

"ஸாரி மிஸ்டர் கனகராஜன். அக்டோபர்லே எம்.ஏ. ஸ்டூடண்ட்ஸுக்கு எஸ்கர்ஷன் இல்லை."

கனகராஜன் டெலிபோனை டக்கென்று வைத்து விட்டு அதையே ஓரிரு நிமிடங்களுக்கு முறைத்துப் பார்த்தார்.

ஒன்று தெளிவாயிற்று.

வைஷ்ணா வீட்டை விட்டுப் போய்விட்டாள்.

எங்கே?

அவரையும் கோமதியையும் நன்றாக ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாள்.

திடீரென்று அவர் இன்னும் பாத்திராத உமேஷ் கண்முன் நின்றான். பீத்தல் குடை சேஷாத்ரி நின்றார். இவன் அவருடைய பிள்ளை. எங்கே குடியிருக்கிறார்கள்? ஏதோ ஒரு ஸ்கூலில் டீச்சராக இருப்பதாக அவர் சொன்னார். எந்த ஸ்கூல்? பிள்ளை ஏதோ ஒரு கம்பெனியில் ஏதோ ஒரு வேலையில் இருப்பதாக டீச்சர் சொன்னார்! எந்தக் கம்பெனியில்?

நிச்சயமாக வைஷ்ணா வீட்டை விட்டு வெளியேறி இருக்கிறாள். கல்லூரி எஸ்கர்ஷன் இல்லை என்று எப்போது நிச்சயமாக, பிரின்ஸிபால் மூலமாகவே தெரிந்து விட்டதோ? அப்போதே அவள் ஒரு நாடகமாடியிருக்கிறாள் என்பதும் தெளிவாகிவிட்டது. சூதும் கபடும் தெரியாத வைஷ்ணா எப்படி நாடகம் தயாரித்தாள்? எல்லாம் உமேஷின் வேலையாக இருக்கவேண்டும். ஒரு ஸ்கூல் வாத்தியார் பிள்ளை

அவருக்கு எல்லாம் கற்றுக் கொடுத்திருக்கிறான். அவனைச் சும்மா விடக்கூடாது. லாக்–அப்லே போட வேண்டும். எலும்பை முறிக்கவேண்டும். அவன் புத்தூர் பக்கமே நகரவும் முடியாதபடி முதுகு எலும்பை நொறுக்க வேண்டும்.

"கோமதி!"

அவருடைய கத்தலில் வீடு ஆடியதோ என்னவோ, அவர் உடம்பு ஆடியது.

கோமதி இரண்டாவது கத்தலுக்குப் பிறகுதான் தலையைக் காட்டினாள்.

"அந்த சேஷாத்ரி எங்கே இருக்கான்?"

"எந்த சேஷாத்ரி?"

"அதான், அன்னிக்கு வந்து என் கழுத்தை அறுத்தானே, அந்த சேஷாத்ரி!"

"எனக்கு என்ன தெரியும்?"

"எந்த ஸ்கூல்லே அவன் டீச்சர்?"

"அவர் டீச்சரா?"

"என்னடீ, என்னையேப் பதம் பார்க்கிறாயா?"

"சத்தியமா அவர் எந்த ஸ்கூல்லே டீச்சர்னு தெரியாது."

"ஓழியட்டும். அந்தப் பிள்ளை எங்கே வேலையாயிருக்கான்?"

"தெரியாது."

"உனக்கு என்னதான் தெரியும்?"



"உங்களைத் தெரியும். உங்க முரட்டுக் குணம் தெரியும். உங்கப் பிடிவாதம் தெரியும். உங்களுடைய எல்லா வெறிகளும் தெரியும். முயலுக்கு இரண்டே முக்கால் கால்..."

"நிறுத்துடீ..."

கோமதி நகர்ந்தாள்.

"எங்கே போறே?"

"உள்ளே வேலை இருக்கு."

"நம்ப பெண் எஸ்கர்ஷன் போகலை!"

இரண்டு அடி நடந்தவள் நின்றாள். திரும்பினாள். பார்த்தாள்.

"என்ன சொன்னீங்க... வைஷ்ணா எஸ்கர்ஷன் போகலியா?"

"இல்லை. உன்னையும் என்னையும் நன்னா ஏமாத்தி, வீட்டை விட்டே ஓடிட்டா!"

"ஐயோ... என்னென்னவோ சொல்றேளே... இப்ப நான் என்ன செய்வேன்... ஐயோ வைஷ்ணா... ஏன் சும்மா உட்கார்ந்திட்டிருக்கீங்க.. ஏதானும் செய்யுங்கள்."

"அதுக்குத்தான் சேஷாத்ரியின் அட்ரஸைக் கேட்டேன். அந்தப் பயலுடன் இந்தப் பெண் போயிருக்கிறாள்..."

"அடக் கண்றாவியே... நம்பக் குடும்ப மானமே தெருவுக்கு வந்துட்டுதே!"

"அதுவும் சாதாரணத் தெருவா. மவுண்ட் ரோட், ஃபர்ஸ்ட் லைன் பீச், செகன்ட் லைன் பீச், மெரினா

எல்லாத் தெருவுக்கும் வந்துட்டுது... ஷேர் மார்க்கட் கனகராஜன் பெண் எவனோடோ ஓடிப் போயிட்டான்னு ஊரே அலறும்... அடுத்த வருஷம் ஜனவரியிலே என்னை அஸோஸியேஷன் வைஸ்–பிரஸிடண்டாக்கப் போறா... என் மானமே இப்பப் போன பிறகு நான் எப்படி வைஸ்–பிரசிடண்டா மேடை மேலே உட்காருவேன்..."

கோமதி அழ ஆரம்பித்தாள்.

"நீ இப்ப அழுது என்னடீ புண்ணியம். பெண்ணைப் பெறத் தெரிஞ்சுது. அதைச் சரியா வளர்க்கத் தெரியலையே..."

"உங்கக் கண்டிப்பையும் மீறி, உங்களுக்கு பயப்படாம போறவள்னா, அந்தப் பெண்ணை யாராலும் சரியாக வளர்த்திருக்க முடியாது..."

"சரி சரி. அழுகையையும் ஓலத்தையும் நிறுத்து. ஐ.ஜி.க்கு போன் பண்றேன். அவள் போட்டோவை எல்லாப் பேப்பர்லேயும் ஏழு நாளுக்குத் தொடர்ச்சியா வெளியிடறேன்."

"உங்க மானத்தை நீங்களே விலைபேசி விளம்பரப் படுத்தி தெருப் போறாதுன்னு, நாடெல்லாம் அம்பலப் படுத்தப் போகிறீர்களா?"

"வேறு என்னதான் வழி?"

"எப்ப அவளாகவே போனாளோ, அவளாகவேதான் வரணும். நீங்க என்னதான் தலைகீழாக நின்னாலும் உங்க உபாயம் மூலமா வரவழைக்க முடியாது. கூடாது."

"என்னடி இது? என்னாச்சு உனக்கு?"

"சீ, அவள் என் பெண்ணா? எப்ப இந்த வாசற் படியைத் தாண்டி, என் கிட்டே பொய் சொல்லிண்டு போனாளோ... அப்பவே அவள்..."



"அப்ப எதுக்கு முதல்லே அழுதேயாம்?"

"தான் ஆடாட்டாலும் சதை ஆடுமே... என் புத்தி கெட்ட தனம்... பாசம் தலைதூக்கி ஆடித்து..."

கோமதி உள்ளே சென்றாள்.

கனகராஜன் விழித்தார்.

மேற்கொண்டு என்ன செய்வது என்று அவருக்குப் புரியவில்லை.

## 8

> பாவம்! இன்னும் கொஞ்சம் தைரியமிருந்தால் அரசியல்வாதியாகவோ, கொள்ளைக் காரனாகவோ ஆகியிருக்கலாம், காதலிக்கத் தெரிந்திருக்கிறது, ஆனால் காதலுக்காகப் போராடத் தெரியவில்லை.

"உன் கையிலே எவ்வளவு பணம் இருக்கு?" என்று கேட்டான், உமேஷ். வைஷ்ணாவின் காதில் அவன் கேள்வி விழவில்லை. அரக்கோணத்தைத் தாண்டி விட்ட ரயில் வேகமெடுத்தது. அவள் கண் முன் நின்ற அப்பா உறுமினார். அம்மா சிரிக்கவும் முடியாமல் அழவும் தெரியாமல் நின்றாள்.

"உன்னைத்தான்!" என்றான் உமேஷ். அருகே ஒரு பிரயாணி காற்றுத் தலையணையை ஊதிக் கொண்டிருந்தான்.

"ஏதானும் கேட்டாயா உமேஷ்?"

"உன் கையிலே எத்தனை ரூபாய் இருக்குன்னு கேட்டேன்."

"எண்ணிப் பார்க்கலை. பீரோ டிராயர்லேந்து அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு ஹாண்ட் பேக்கில் வைத்தேன்."



"இப்ப எண்ணிப் பாரு."

வைஷ்ணா கைப் பையைத் திறந்தாள்.

கன்னா பின்னா வென்று கிடந்த கரென்ஸி நோட்டுக்களை அள்ளி அவனிடம் நீட்டினாள்.

அவன் நோட்டுக்களைச் சீர்படுத்தலானான்.

மூன்று பத்து ரூபாய் நோட்டுகள்.

ஏழு ஐந்து.

பன்னிரண்டு இரண்டு.

எட்டு ஒன்று.

"இவ்வளவு தானா?"

"இதோ இன்னொரு இன்ஸ்டால்மெண்ட்!" அவள் மேலும் நோட்டுக்களை நீட்டினாள்.

ஒரு பத்து.

மூணு ஐந்து.

ஏழு இரண்டு.

ஒரு ஒன்று கூட இல்லை.

"நூறு ரூபாய் நோட்டு ஒன்று கூட இல்லை வைஷ்ணா."

"சனிக்கிழமை அரைநாள் பாங்க். இந்தப் பணம் போதாதா?"

"ஓ. போதுமே... நன்னாப் போதும். நூற்று முப்பத்தாறு ரூபாய் நன்னாப் போதும்!"

"ஏன் நீ கொண்டு வரலையா?"

"நீ நிறையக் கொண்டு வருவேன்னு நான் டிக்கட்டை வாங்க முன்னூறு எடுத்துண்டு வந்தேன். பம்பாயிலே ஒரு நாள் தங்க. அதாவது நல்ல ஓட்டல்லே தங்க, மினிமம் இரு நூறு ரூபாயாவது ஆகும். அப்புறம் திரும்பி வர ரெயில் சார்ஜ். நம்ம பிளான், முழுசாப் பத்து நாள் தலை மறைவா இருப்பதுன்னு..."

"எல்லாம் என் சிலவிலே ஓடணும்னு பார்த்தாயா, உமேஷ்?"

"ஏன் சத்தம் போடறே?"

"பேசினாலேச் சத்தமாக் கேட்கிறதோ?"

"இப்ப என்ன செய்யறது."

"என் கையிலே ரெண்டு ஜோடி வளையல் இருக்கு. கழுத்திலே நாலு பவுன் செயின். மொத்தம் பத்துப் பவுன். இப்ப பவுன் என்ன விலை?"

"குண்டக்கல்லிலே பேப்பர் கிடைக்கும். வாங்கிப் பார்த்துச் சொல்றேன்."

"ஆத்திரம் வந்து புண்ணியமில்லை, உமேஷ்."

"சரி, தூங்கு. எல்லோரும் விளக்கை அணைச்சாச்சு. மணி பன்னண்டு அடிக்கப் போறது."

"குட் நைட், சொல்ல மாட்டாயா, உமேஷ்."

"ஆரம்பமே பேட் நைட்."

"நம்ம ஃபர்ஸ்ட் நைட் இப்படியாயிடுத்து..."

"என்ன உளர்றே?"

"கல்யாணமானாத்தானா ஃபர்ஸ்ட் நைட், உமேஷ். நீயும் நானும் சேர்ந்து கழிக்கிற முதல் நைட் இதுதானே?"



"ஃபர்ஸ்ட் நைட்னா அர்த்தம் வேறே, வைஷ்ணா."

"அது எனக்குத் தெரியும் அன்னிக்குத்தான் கலியாணமான ஜோடி, ஜோடியா அசடு வழிவா."

"இது ரெயில்."

"அதனாலே அந்த சப்ஜெக்ட் பேசப்படாதா?"

"அப்புறமாப் பேசு."

"பம்பாயிலே என் சினேகிதி இருக்கா. பணத்தைப் பற்றிக் கவலைப் படாதே உமேஷ்."

"சரி."

"ஆனா எனக்கு ஒண்ணு உங்கிட்டே பிடிக்கலை. பிடிக்கவே இல்லை."

"என்ன?"

"எப்போதும் என் கையை எதிர்பார்க்கிற. சினிமா டிக்கட் நான்தான் புக் பண்ணணும். ஓட்டல் பில் நான் தான்..."

"ஓகே, ஓகே... இனிமே நான் உன் கையை எதிர் பார்க்கலே. உன் சிநேகிதிப் பணமும் தேவையில்லை... எங்க ஆபீஸ் பிராஞ்ச் பம்பாயில் இருக்கு. அங்கிருந்து எப்படிப் பணம் வாங்கறதுன்னு எனக்குத் தெரியும்."

"கோபிச்சுட்டுப் புண்ணியமில்லை. உள்ளதைச் சொன்னா ஏன் இப்படிப் பொத்துக்கொண்டு வர்றதாம்?"

"இப்ப காலை நீட்டித் தூங்க மாட்டே?"

"காலை நீட்டாமலே தூங்குவேன். அது என் இஷ்டம்."

"ஏண்டா ரெயில் ஏறினோம்னு இருக்கு."

"ரேணிகுண்டா வந்ததும் இறங்கிடு. நான் தனியாப் பம்பாய் போறேன்..."

"ரெண்டு பேருக்கும் சேர்ந்து ஒரே டிக்கட்டாக் கொடுத்திருக்கானே. என்ன செய்யறது."

"கேட்டிலே காட்டிட்டுத் திருப்பிக் கொடுத்துவிடு. வந்த பாசஞ்சர் முதுகெலும்பு ஒடிஞ்சு ரேணிகுண்டாவிலேயே இறங்கிட்டான்னு சொல்றேன்!"

"அப்படியா சொல்லுவே?"

"சரி, இறங்கிட்டார்னு சொல்றேன்." என்றாள் வைஷ்ணா.

"சரி, நான் தூங்கப் போறேன். இழவு பிடிச்சவன் அப்பர் பர்த் தந்திருக்கான்."

"அப்ப ரேணிகுண்டா வந்தா உன்னை எழுப்பணுமா? இன்னும் அரைமணி நேரத்திலே வந்துடும்."

வைஷ்ணா சிரிக்காமல் கேட்டாள்.

"உங்கிட்டே ஏர்பில்லோக் இருக்கா வைஷ்ணா."

"ஏன், பேச்சை மாத்தறே. இருக்கு."

"கொடு."

"ஒண்ணுதான் கொண்டு வந்திருக்கேன். ஏன், உன் வீட்டிலே ஏர்பில்லோ கூட இல்லையா?"

"கையைத் தலையணையா வைச்சுண்டு தூங்கித் தொலைக்கிறேன்."



"அது ரொம்ப நல்லது. இதமா இருக்கும்... ஸ்வீட் ட்ரீம்ஸ்."

ரெயில் ஓடியது.

உமேஷ், தட்டுத் தடுமாறி மேல் பர்த்துக்குப் போய்க் காலை நீட்டிக் கொண்டாகிவிட்டது.

ரேணிகுண்டா வந்தது. குறட்டை ஒலி உமேஷின் தட்டில் இருந்து அவள் காதில் கேட்டது.

பாவம் இன்னும் கொஞ்சம் தைரியமிருந்தால் அரசியல்வாதியாகவோ கொள்ளைக்காரனாகவோ மாறி இருக்கலாம்! காதலிக்கத் தெரிந்திருக்கிறது. ஆனால் காதலுக்காக எதிர்த்துப் போராடத் தெரியவில்லை. அவளுடைய அப்பாவை வழிக்குக் கொண்டு வர. இந்த மாதிரி ஒரு ஓட்டம் ஓடினால்தான் முடியும் என்று அவள் எத்தனை தடவை சொல்லியிருக்கிறாள். அவன் காது கொடுத்துக் கேட்காமல் தன் அப்பாவை அவள் அப்பாவிடம் தூது அனுப்பினான். 'டீச்சர்' அப்பா, பிரம்பு அடி வாங்கிக் கொண்டு ஓடினார். ஆனால் அவளுடைய அம்மா? கட்டித் தங்கம், மனசைப் புரிந்து கொண்டு, அவள் தீட்டியத் திட்டத்தை உடனடியாக அங்கீகரித்து பம்பாய்தான் ஓடிப்போகத் தலைசிறந்த இடம் என்று அபிப்பிராயமும் தெரிவித்தாள். அம்மா அத்துடன் நிற்காமல் உமேஷின் அம்மாவையும் சந்தித்து, அவளுடைய ஒப்புதலையும் பெற்றுவிட்டாள். தன்னுடையத் தாயாரே, இப்படி ஒரு ஓட்டத்துக்கு வரவேற்பு அளிக்கிறாள் என்பதை உணர்ந்த பிறகுதான் உமேஷ், சென்ட்ரலுக்குப் போனான், டிக்கட் வாங்க, அவள் போயிருந்தால் முதல் வகுப்பு அல்லவா வாங்கியிருப்பாள்?

பலகையில் அவள் சற்றே நகர்ந்தாள். முன்பின் பழக்கமில்லாத இரண்டாவது வகுப்புப் பலகை முழங்கையை இடித்தது. வலித்தது. முதுகு வேறு அங்கங்கே இடித்து இம்சைப்படுத்தியது.

பம்பாயில் எட்டு நாட்கள் அவள் ஏற்கெனவே இருந்திருக்கிறாள். நான்கைந்துத் தடவைகள் பம்பாய் சென்றிருக்கிறாள். தாஜ்மகால் ஓட்டலில் இரண்டு தடவை. ஓபிராய் ஷெராட்டனில் ஒரு தடவை. சென்டாரில் ஒரு தடவை. இப்போது மொத்தமாக இருக்கும் நானூற்று முப்பத்தாறு ரூபாயில் வழிச் செலவு போக எவ்வளவு மிஞ்சும்!, பம்பாய் சிடியில் இறங்கும் போது உமேஷ் என்ன செய்வான்? சிநேகிதி பூர்ணாவுக்கு டெலிபோன் செய்து இரண்டாயிரமோ மூன்றாயிரமோ கடன் கேட்க வேண்டியதுதான்.

ஏன் அவள் பம்பாய்ச் செலவுகளைப்பற்றித் தீவிரமாக எண்ணிப் பார்க்கவில்லை?

நீண்ட நேரம் தூங்காமலேயே அவள் ஸ்லீப்பர் பலகையில் புரண்டாள்.

கடப்பா வந்து போயிற்று. சிறுசிறு ஸ்டேஷன்களி லெல்லாம் பம்பாய் மெயில் நிற்பது எரிச்சலை ஊட்டிய போதிலும் அவள் அந்த எரிச்சலை அவ்வளவாக உணர வில்லை. வரப்போகும் எட்டு நாட்கள்தான் ஒரு பெரியப் பாராமாகத் தோன்றின.

## 9

இப்பதாண்டி கீதா தனி ரூம் கிடைச்சிருக்கு. உமேஷ் கம்பெனி வாழ்க! இது மாதிரி அடிக்கடி அது அவனை வெளியூர்களுக்கு அனுப்பட்டும்!

சேம்பர்லின் சேஷாத்ரிக்கு ஒரே ஆனந்தம். பல நாட்களுக்குப் பிறகு, உமேஷ் இது நாள்வரை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அறை கிடைத்து விட்டது. ஏதோ ஒரு ராஜ்யத்தையே பிடித்து விட்டதான மகிழ்ச்சியில் அவர் அறைக்குள்ளேயே உலாவினார். மின்சார விசிறியைச் சுழலவிட்டார். அது வெகு வேகமாகச் சுழன்ற போது, ஐந்து, நாலு, மூன்று, இரண்டு என்று வேகத்தைக் குறைத்துப் பார்த்தார். உமேஷின் புத்தகங்கள், துணிகள் எல்லாவற்றையும் அள்ளி எடுத்து, ஒரு மெல்லிய வாயகன்ற மூங்கில் கூடைக்குள் திணித்தார். ஆஹா, உமேஷ் மட்டும் கலியாணமாகி மனைவி வீட்டுக்குக் குடிபோய் விட்டாலோ (அப்படித்தான் அவன் போக வேண்டும் என்பது அவருடைய நெடுநாளைய விருப்பம்) அல்லது வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய் விட்டாலோ

எவ்வளவு நன்றாக இருக்கும்? கடைசி மூச்சு இருக்கும் வரை அவர் இந்த அறையிலேயே இருக்கலாமே!

திடீரென்று மல்லிகையின் மணம் நாசியைத் தாக்கியது. அடுத்த கணம் ஒரு தலையும் உள்ளே நீண்டது.

"உள்ளே வா சீதா!"

"என்ன இது. புளி அடைச்சு வைச்சிருந்த கூடையில் உமேஷின் துணிமணிகளையெல்லாம் போட்டிருக்கிறீர்கள்?"

"அப்புறமா பரண் மேலே வைச்சுடறேன். என்ன அது கையிலே, காபி டீயா... கீழே வைச்சுடு."

அவள் காபித் தம்ளரைக் கீழே வைத்து விட்டாள்.

"கதவைச் சார்த்திட்டு இப்படி உட்காரு."

"என்ன உளர்றேள்?"

"ஏன் உட்காரப்படாதா?"

"மூளை கோளாறா?"

"மனசுக் கோளாறு. உடம்புக் கோளாறு..."

"சீ கையைப் பிடிக்க வராதீங்கோ..."

"இப்பத்தான்டி சீதா தனி ரூம் கிடைச்சிருக்கு. உமேஷ் கம்பெனி வாழ்க! இது மாதிரி அடிக்கடி அவனை அது வெளியூர்களுக்கு அனுப்பட்டும். அது சரி, அவன் கல்கத்தாவிலிருந்து என்னிக்குத் திரும்பி வர்றான்?"

"தெரியாது."

"கல்கத்தாவிலே எட்டு நாள் இருப்பேன்னான். நேற்று ஹௌரா மெயில் புறப்பட்டா, நாளைக்குக்



கார்த்தாலே ஹௌரா... அப்புறம் செவ்வாய், புதன், வியாழன்..."

"பணம் வேணும்."

"எவ்வளவு?"

"இரு நூறு."

"எங்கிட்டே ஏது அவ்வளவு பணம்? உமேஷ் தரலையா?"

"இருக்கிறதையெல்லாம் வாரிச்சுருட்டிண்டு போயிட்டான்."

"ஏன் ஆபீஸ்லே அட்வான்ஸ் கொடுத்திருப் பார்களே? ஏன் வீட்டுப் பணத்தை எடுத்துண்டு போனான்?" என்று கேட்டார் சேஷாத்ரி. திடீரென்று அவருடைய குடை ஞாபகத்துக்கு வந்தது. "டீ, என் குடையைக் கொண்டு வந்து இந்த ரூம்லே வைச்சுடு."

"சரி."

"நான் கேட்ட கேள்விக்கு என்ன பதில்?"

"என்ன கேள்வி?"

"ஏன் வீட்டுப் பணத்தை உமேஷ் எடுத்துண்டு போனான்னு கேட்டேன்."

"அவன் வந்ததும் அவனையேக் கேளுங்கோ!"

"இரு நூறு ரூபாயையும் அவன்கிட்டேயே கேளு."

"சரி. ஆனா அதுவரையில் குழம்பும் ரசமும்தான் இலையில் விழும். சாதம் விழாது."

"ஏன் அரிசி அடம் பிடிக்கிறதா?"

"ஆமாம். வாசல்லே ஆந்திராக்காரன் மூட்டையோடு நிக்கறான். பழைய பாக்கியையும் கொடுத்து இப்பப் பாதிப் பணமும் கொடுத்தாத்தான் மூட்டை இறங்கி உள்ளே வரும். என்ன சொல்றேள்?"

"சேவிங்ஸ் பாங்க்லே கொஞ்சம் இருக்கு. தீபாவளிக்குன்னு வைச்சிருக்கேன்."

"இப்ப அரிசி. அப்புறம்தான் தீபாவளி!" என்றாள் சீதா.

"சரி... இதோ போயிட்டு பணம் எடுத்து வரேன். முதல்லே மூட்டையை இறக்கச் சொல்லு."

"சரி..."

"சீதா...!"

"என்ன?"

"என் குடையை எடு. வெய்யில் கண்ணைக் குத்தும்."

அவர் புறப்பட்டார்.

அரிசி மூட்டையைப் போட்டாகி விட்டது. அரை மணி நேரத்துக்குப் பிறகு பணம் வாங்கிக் கொள்ள வருவதாகச் சொல்லி அரிசிக்காரன் போனான்.

தன்னந்தனியாக இருந்த சீதா உள்ளூரப் பயந்து கொண்டிருந்தாள். கோமதி ஒரு சலசலப்புடன் பேசிப் பேசி அவளை மயக்கி, அவளுடைய திட்டத்துக்கு சீதாவையும் உடந்தையாக்கி விட்டாள். ஒரு ஆண்பிள்ளை ஒரு பெண் பிள்ளையை அழைத்துக் கொண்டு போனால் யாரும் ஒண்ணும் சொல்லமாட்டார்கள். ஆனால் இழுத்துக் கொண்டு போனால்?



இதைத்தான் கோமதி ஒரு பாடமாக அவளுடைய மண்டைக்குள் ஏத்தியிருக்கிறாள். அவளும் மதி கெட்டு உமேஷுக்கு உபதேசம் செய்து வாழ்த்தி வழி அனுப்பியிருக்கிறாள். இருவருடைய தகப்பனாருக்கும் உண்மை தெரியாது. அவளுடைய கணவர், பிள்ளை தன்னந்தனியாகக் கல்கத்தாவுக்கு கம்பெனி விஷயமாகச் சென்றிருக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். கனகராஜன், தம் பெண் வைஷ்ணர் கோடைக்கானல் மதுரை திருவனந்தபுரம் என்று கல்லூரிப் பெண்களுடன் போயிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். உண்மை தெரியும் போது என்ன நடக்கும்? அவளுடைய கணவரால் எந்த ஆபத்தும் இல்லை. ஆனால் கனகராஜன் சும்மா இருக்க மாட்டாரே. சில நாட்கள் பெண்ணைக் காணவில்லை என்றால், அவர் புழு மாதிரித் துடிப்பார், என்று கோமதி சொல்லுகிறாள். அது உண்மையாக இருக்கலாம். புழு மாதிரித் துடிக்கலாம். ஆனால் அதே பெண் திரும்பி வந்த பிறகு?

# 10

> இந்தக் கணமே கால் செருப்புகூட இல்லாம இந்த வீட்டை விட்டு இறங்க நான் தயார். வழி அனுப்ப நீங்க தயாரா?

கனகராஜன் ஆடிப்போய் விட்டார். நன்றாகவே ஆடிப் போய்விட்டார். முதன் முதலாகத் தம்மை யும் தம் குடும்பத்தையும் எண்ணிப் பார்த்தார். அவரால் அடக்கப்பட்ட மனைவி. அலட்சியப்படுத்தப் பட்ட பெண். அவளுக்கு வேண்டிய நகை நட்டுகளையும் துணிமணிகளையும் தேவைக்கு அதிகமாகவே அள்ளிக் கொடுத்திருக்கிறார் என்றால், அது அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கல்ல. தம்மைத் தாமே பெருமைப் படுத்திக் கொள்வதற்கு. நகரத்தில் ஒரு புள்ளி. நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டு வரும் புள்ளி. அப்புள்ளியின் பெருமைக்கேற்ப நாலு பேர் வாயாரப் புகழ அவர் கார் வசதிகள் என்று குமித்து வைத்திருந்தாரே அவை யெல்லாம் மனைவி மீதுள்ள அன்பினாலா அல்லது பெண் மீதுள்ள அன்பினாலா?

எல்லாம் அவருடைய கர்வத்தினால் வந்த விளைவு. மனைவியின் மனம் அறிந்து, ஒரு முழம் மல்லிகைப்



பூக்கூட வாங்காத அவர், நாலு பெரிய மனிதர்கள் வாயைப் பிளந்து அதிசயிக்க வேண்டும் என்பதற்காக எட்டு முழம் வைர நெக்லஸ் வாங்கிக் கொடுத்தார். கோமதி என்ன செய்தாள்? 'ஆகா ரொம்ப நன்றா யிருக்கு!' என்று சொல்லி விட்டு— அப்படிச் சொல்லா விட்டால் அவர் முரட்டுத்தனமாகப் பேசுவாரே என்ற பயத்தில் சொல்லிவிட்டு— பெட்டியில் வைத்துப் பூட்டினாள். அந்த நெக்லஸை அணிந்து கொண்டு அவள் அவருடன் எங்கே போயிருக்கிறாள்! கலியாண மான நாட்களில் அவளுடைய உடல்தான் அவருடைய இச்சைக்கு இரையாகியது. அவளுடைய மனத்தைத் தொட வேண்டும். அவளுடைய மென்மையான உணர்ச்சிக்குத் தான் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்ற எண்ணங்கள் அவருள் தோன்றியதே கிடையாது. அவர்தான் வீட்டில் அரசியல் சாஸனம். அவர் கூறும் வார்த்தைகள் சட்டங்கள் விதிகள். யாரும் எதிர்க்கக் கூடாது. பதில் பேசக் கூடாது. இப்படி அவர் கோமதியிடம் நடந்து கொள்ளுகையில் அவள் மனத்தில் பாசிதானே படரும்? அன்பா உருவாகும்?

கலியாணமான புதிதில் அபூர்வமாக அவர் அவளை அழைத்துக் கொண்டு வெளியே போவார். தெருவில் அவள் அங்குமிங்குமாகப் பார்த்து ரசித்து நடந்தால் வெகுண்டு கண்டிப்பார். மற்ற ஆண்களின் கண்கள் அவருடைய மனைவியை விழுங்கும் போது அவர் உடல் முழுதும் உஷ்ணம் ஏறி மண்டையில் ரத்தம் புகுந்து திணற வைக்கும். அவர் கலியாணமான பிறகும் மற்ற பெண்களைப் பார்க்கலாம். பார்த்து ரசிக்கலாம். ஆனால் அவருடைய மனைவியைப் பிறர் பார்க்கவும் கூடாது. இது அந்தக் காலத்தில் அவருக்கு நியாயமாகப் பட்டது.

அவருடைய அடக்கு முறையில் துவண்டு போன கோமதி நாளடைவில் பழகிப் போனாள். கணவரை அன்பால் வெல்ல முடியாது. அவருடைய உடற் பசி அடங்கியதும், சாப்பிட்ட இலையைத் தூக்கிப் போடுவது போல அவர் அவளை அலட்சியப்படுத்துகிறார். அவர் என்ன சொன்னாலும் அதைக் கேட்க வேண்டும். பெற்ற தாய் தந்தையர்களையும் சரி, கூடப் பிறந்த சகோதரி களையும் சரி, அவள் அவருடைய அனுமதியின் பேரில் தான் பார்க்க முடியும். சந்திக்க முடியும். அவர்களும், கூப்பிட்டாலொழிய (அதற்கும் அவருடைய சம்மதம் தேவை) அவளுடைய வீட்டு வாசற்படியை மிதிக்கக் கூடாது.

இந்தச் சூழ்நிலையில் கோமதிக்கு ஒரு வெறுப்பு ஏற்படலாயிற்று. ஆனால் அதை அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. காட்டினால் என்ன நடக்கும் என்று அவளுக்குத் தெரியும். கனகராஜன் நாளுக்கு நாள் தொழிலில் முன்னேறிக் கொண்டு வருகிறார். அவருடைய உலகமெல்லாம் ஷேர் மார்க்கட்டுக்குள் அடங்கி நிற்கிறது.

கோமதி தன் வெறுப்பை உமிழ்ந்தால் அவளுக்குத் தான் நஷ்டம்.

வைஷ்ணா பிறந்தாள்.

கனகராஜன் எல்லாப் பேப்பர்களிலும் தம் பெண்ணின் அவதாரத்தை விளம்பரப்படுத்தினார். ஆனால் புண்ணியா வசனம், தொட்டில் காது குத்துப் போன்ற நிகழ்ச்சிகளுக்கு எந்த உறவினரையுமே அவர் அழைக்க வில்லை. மாமனார் அவருடைய பிச்சையில் இரண்டு வேளை வயிற்றைக் கழுவுகிறவர். கோமதியின்



சகோதரிகளில் ஒருத்திக்குக்கூட ஓரிரு பட்டுப் புடவைகளுக்கு மேல் இல்லை. ஒருத்தி காதில்கூட வைரத்தோடு இல்லை. அவர்களுடைய கணவர்கள் எந்த விதத்திலும் அவருக்குச் சமம் இல்லை.

வைஷ்ணா வளரலானாள்.

தினம் ஒரு துணி.

வாரம் ஒரு நகை.

ஆண்டு நிறைவு விழாவில் வீடு அல்லோல கல்லோலப்பட்டது. பெரிய மனிதர்கள் அனைவரும் காரில் வந்து இறங்கினார்கள். பல கம்பெனிகளின் அதிபர்களும், நகரப் பிரமுகர்களும் வந்து விருந்து உண்டு பரிசுகள் வழங்கி விட்டுப் போனார்கள்.

அன்று கோமதி உள்ளூர அழுதாள். பிறருக்காகச் சிவந்து பழகிப்போன அவள், தன் தாயார் ஒரு மூலையிலும் தகப்பனார் இன்னொரு மூலையிலும் பரதேசிபோல நிற்பதைக் கண்டு நெகிழ்ந்தாள். கணவருக்கு இருக்கும் அத்தனை உரிமைகளும் அவளுக்கும் உண்டு. ஆனால் அவற்றை எப்படி அவளால் எடுத்துச் சொல்லி நிலைநாட்ட முடியும்?

தாம் பெற்ற பெண்ணின் ஆண்டு விழாவை அவ்வளவுச் சிறப்பாக நடத்தியவர். அக்குழந்தையை ஒரு தடவைக்கூட எடுத்துக் கொஞ்சியதில்லை. அவளைத் தோள்மேல் போட்டுத் தூங்க வைத்ததில்லை. என்றாவது ஒரு நாள் கோமதி தாலாட்டுப் பாடினால், அப்பாட்டு அவருக்கு நாராசமாக இருக்கும். கத்துவார்.

குழந்தையின் கபடமற்ற சிரிப்பு அவருடைய உள்ளத்தை ஈர்த்ததில்லை.

குழந்தையின் அழுகை அவருடைய எரிச்சலை வெளிப்படுத்தத் தவறியதில்லை.

சிறு வயதிலிருந்தே பயத்தில் வளர்ந்த வைஷ்ணா நாளடைவில் தாயாரைப்போல, தன்னைப் பழக்கிக் கொண்டாள். அப்பாவின் கேள்விகளுக்கு நேரடிப் பதில்கள். தாழ்ந்த குரலில் பேச்சு. அவர் சிரித்தால் உடன் சிரிப்பது. அவர் என்ன சொன்னாலும் எதிர்ப்புக் கிடையாது.

ஒரு இயந்திரம் அவளை வளர்க்கிறது. அந்த இயந்திரத்துடன் முரண் செய்தால், அது அவளைத் தீர்த்து விடும். பெற்ற தாயாருக்கு உறுதுணையாக நின்று இருவரும் சேர்ந்து, இயந்திரத்துக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும். வேறு வழி இல்லை.

கனகராஜன் தம் பெண் வைஷ்ணா சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுப் போய்விட்டாளே என்று கூட வருத்தமோ ஆத்திரமோ படவில்லை. அவள் சென்று விட்டதை ஊர் அறிந்தால் வாய்க்கு வந்தபடி பேசுமே என்றுதான் மனத்தினுள் அலறினார். சில மஞ்சள் பத்திரிகைகள், சினிமா நட்சத்திரங்களை ஒதுக்கிவிட்டு, பெரிய பிரமுகர்களை இலக்காக வைத்து இயங்கின்றன. அப்பத்திரிகைகளில் அவர் பெயர் வந்துவிட்டால்?

இப்பொழுது என்ன செய்வது?

உமேஷின் தகப்பனார் விலாசம் தெரியவில்லை. எந்தப் பள்ளிக்கூடம் என்று ஏறி இறங்குவது? அப்படியே ஏறி இறங்கி விலாசம் தெரிந்தாலும், அவரால் என்ன செய்ய முடியும்?



போலீஸ் ஐ.ஜி.யைத் தெரிந்து வைத்திருக்கும் பெருமை உண்டுதான். ஆனால் என்ன புண்ணியம். போலீஸ் இலாகாவுக்குத் தெரிந்தால் அவர்கள் வைஷ்ணாவைத் தேட ஆரம்பிக்கிறார்களோ இல்லையோ கண்டிப்பாகப் பத்திரிகைக்கு அறிக்கை கொடுப்பார்கள்.

அவர் மானம் போகும்.

அகில இந்திய ஷேர் ப்ரோக்கர்ஸ் அஸோஸியேஷனில் அவருடைய ஷேர் வால்யு கணிசமாகக் குறையும்.

அவர் வீட்டுக்குள் நடப்பது வீட்டுக்குள்ளேயே ரகசியமாக இருக்க வேண்டும்.

திடீரென்று மாடிப்படியில் காலோசை கேட்டது.

கோமதிதான்.

கோமதியை நினைத்ததும் ஒரு எண்ணம்—மறைந்திருந்த எண்ணம்—தலைதூக்கியது.

தன் பெண் திடீரென்று வீட்டை விட்டு வெளியேறியது அவளை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. ஏன்? எதுவுமே நடக்காதது போல நடந்துகொள்ளுகிறாள்! ஏன்? அவரும் அவளுமாக வைஷ்ணாவைப் பற்றிப் பேசும் போது மட்டும், அழுகிறாள், கேவுகிறாள், உணர்ச்சி வசப்படுகிறாள்.

"எல்லாம் நடிப்பா?"

எதற்கு நடிக்க வேண்டும்?

நடிப்பு என்றால் வைஷ்ணா வெளியேறுவதை அவள் ஏற்கெனவே அறிவாளா?

இதை எப்படித் தெரிந்து கொள்ளுவது?

அவர் கண்களை மூடிக் கொண்டார். கோமதி, அறைக்குள் பிரவேசிக்க இருக்கிறாள் என்று தெரிந்ததும்,

"இப்படியே உட்கார்ந்திருந்தா எப்படி?" என்று ஆரம்பித்தாள் கோமதி.

"ஹங்... என்ன சொன்னே?"

"சாப்பிட வாருங்கள்."

"சாப்பாடா?"

"ஆமாம்."

"வைஷ்ணாகிட்டேந்து ஏதாவது தகவல் வந்ததா?"

"வந்திருந்தா இப்படி நிதானமா நடந்து வந்து சாப்பிடக் கூப்பிட்டிருப்பேனா? மகாபாவி, பெத்த வயித்திலே நெருப்பை அள்ளிப் போட்டு விட்டுப் போயிட்டா."

"உன் வயிறு உண்மையாகவே நெருப்புச் சூட்டில் எரிகிறதா, கோமதி?"

"இது என்ன கேள்வி? என் வயிறு ஓமகுண்டமா யிடுத்து."

"உண்மையாகவா?"

"ஏன் சந்தேகம்?"

"சரி, அதை விடு. இந்த வைஷ்ணா உமேஷுடன் பழகுகிறாள்னு உனக்கு ஏற்கெனவே தெரியும் இல்லையா?"

"தெரியும்?"



"ஏன் என் கிட்டே நீ ஒரு வார்த்தை சொல்லலை."

"சொல்லியிருந்தால் உடனடியாக என்ன செய்திருப்பீர்கள்னு எனக்குத் தெரியும்."

"அப்போ நீயும் அவளுக்கு உடந்தை, அப்படித் தானே."

"ஒரு விதத்தில் உடந்தைதான். நீங்கதான் யார் மனசும் அறிஞ்சு எதுவும் செய்யறது கிடையாது. நானாவது என் பெண்ணின் மனசு அறிஞ்சு ஆதரிக்கலாமே..."

"சரி, டைரக்டா விஷயத்துக்கு வரேன். வைஷ்ணா எங்கே?"

"தெரியாது."

"பதில் வரவழைக்க ரொம்ப நேரமாகாது. கோமதி. பெண் போய் நாலு நாள் ஆறது. நான் ராத் தூக்கம் பகல் தூக்கம் இல்லாமல் கலங்கறேன்."

"அது பெண்ணுக்காக அல்லன்னு எனக்குத் தெரியும்" என்றாள் கோமதி.

"பின் யாருக்காக?"

"உங்க மானத்துக்காக, மரியாதைக்காக. ஊர்லே பெரிய மனுஷா என்னென்ன பேசுவாளோ என்கிற பயத்திலே நீங்க தூங்க முடியாமத் தவிக்கறீங்க."

"ஆனா நீ நன்னாத் தூங்கறே."

"ஆமாம்... என் பெண்தான் இஷ்டப்பட்டவனைக் கலியாணம் செய்து கொண்டு சந்தோஷமா இருப்பாள் என்கிற நம்பிக்கைத் தாலாட்டுப் பாடறது."

"என் அனுமதி இல்லாமல் என் பெண் யாரையும் கலியாணம் செய்து கொள்ள முடியாது."

"ஏனாம்."

"போலீஸ் வரையில் போவேன்..."

"போங்களேன். உங்க பெண்ணுக்கு என்ன வயசுன்னு கேட்பாங்க. எஸ்.எஸ்.எல்.சி. புக்கைக் காட்டும்பாங்க. என்ன சொல்லுவேள். 1969–லே பிறந்தாள்னுதானே..."

"ஓ, நிறையத் தெரிஞ்சு வச்சுண்டிருக்கே, கோமதி."

"அதுக்கு நீங்கதான் காரணம். நான் உங்ககிட்டே அகப்பட்டுக் கொண்டு, உங்க அதிகாரத்தில், சிறைப் பட்டுக் கிடக்கிறேன். அது என் தலைவிதி. ஆனா வைஷ்ணாவுக்கு அந்த விதி இல்லை. இப்ப அவள் மேஜர்."

"அவளுக்கு என் சொத்தில் ஒரு பைசா பெயராது."

கோமதி சிரித்தாள்.

அவளுடைய சிரிப்பு அவரைத் தாக்கியது. இது வரையில் கோமதி ஏளனமாகச் சிரித்தது கிடையாது.

"ஏண்டீ, சிரிக்கிறே?"

"இப்பக் கட்டியிருக்கிற புடவையுடன் நான் இந்த வீட்டை வீட்டு இறங்கத் தயார். நீங்க உசிரோடே இருக்கிறேள் என்ற ஒரே காரணத்துக்காக கழுத்திலே தொங்கற மஞ்சள் சரடு ஒண்ணு தவிர, பாக்கி எல்லா நகைகளையும் இங்கேயேக் கொட்டிவிட்டு, காலில் செருப்புக் கூட இல்லாமல் இறங்கி நடக்க நான் தயார். என்னை வழி அனுப்ப நீங்க தயாரா?"



கனகராஜன் அயர்ந்து போனார்.

"இவ்வளவு தைரியம் உனக்கு எங்கிருந்து வந்தது?"

"இருபத்தஞ்சு வருஷமா கொஞ்சம் கொஞ்சமா சம்பாதிச்ச தைரியம். என் பெண் கலியாணம் வரையில் பல்லைக் கடிச்சுண்டு இருக்க வேண்டும் என்று, இது நாள் வரை மனசுக்குள் கறுவிக் கொண்டிருந்தேன். இப்ப அவ உமேஷுடன் போயாச்சு. உமேஷ் நல்லப் பிள்ளைன்னு எனக்குத் தெரியும். அவன் உங்களைப் போல இல்லை... பெண்டாட்டிக்கு என்ன மதிப்பும் ஸ்தானமும் கொடுக்க வேண்டும் என்று அவனுக்குத் தெரியும்."

"அது எனக்குத் தெரியாதுன்னு சொல்றியா?"

"புரியலையா?"

"நீ ரொம்பப் பேசறே."

"இந்த அளவுக்குப் பேசக் கத்துக் கொடுத்தது, உங்ககிட்டே வாழ்ந்த அடிமை வாழ்வுதான்."

கனகராஜன் மௌனமானார். அவர் என்ன சொன்னாலும் பதிலுக்குத் தயாராக கோமதி இருக்கிறாள்.

"என்ன, என் கேள்விக்கு என்ன பதில்?"

"நீ என்ன கேட்டே?"

"இந்தக் கணமே கால்ச் செருப்பு கூட இல்லாம நான் இந்த வீட்டை விட்டு இறங்கத் தயார். வழி அனுப்ப நீங்க தயாரா? இதுதான் என் கேள்வி?"

"நீ எங்கே போவே?"

"அது அனாவசியம்."

"இந்த மாதிரிப் பங்காளவும் வசதியும் காரும் ஆள்படையும் உனக்கு எங்கே கிடைக்கும்?"

"எனக்கு இதெல்லாம் தேவைன்னு உங்களுக்கு யார் சொன்னார்கள்? என் கழுத்திலே நீங்கத் தாலி கட்டும் போது, இதை யெல்லாம் தரக்கூடிய நிலையிலா இருந்தீர்கள். ஒரு சாதாரணச் சிப்பந்தி... நான் வர்றேன். அதிருஷ்டம் அளித்தது. ஆனா நீங்க உங்க சாமார்த்தியம்னு சொல்லிக் கொண்டீர்கள். நான் அதைப் பெரிசா எடுத்துக்கொள்ளவில்லை... என்ன, என்ன சொல்லுகிறீர்கள்?"

"உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. கோமதி!"

"இல்லை. தெளிந்திருக்கிறது."

"இப்ப முதல்லே கீழே போ!"

"பெண் மட்டும் வெளியேறிட்டாள்னு ஒரு வேளை ஊர் சிரிச்சுப் பேசும். அவளைப் பெற்றவளும் கணவனைத் துறந்து இறங்கி நடந்து விட்டாள் என்றால் ஊர் ஒரு கேள்விக் குறியைப் போட்டுக் கொண்டு நிமிர்ந்து பார்க்கும். தாயாரையும் பெண்ணையும் அல்ல. உங்களை! நீங்க வெளியே எப்படி வேணுமானாலும் இருக்கலாம். ஆனால் உங்க வீட்டில் உங்களுடைய சுயரூபம் வெளியே தெரியும் போது..."

"கெட் அவுட்!"

கனகராஜன் சோர்ந்து போனார்.

## 11

> உன் தைரியம் தான் வைஷ்ணா எனக்கு ஊக்கமாக இருக்கு. இப்ப எனக்கும் கூட நிறையத் தைரியம் வர ஆரம்பிச்சுட்டுது.

"எனக்கு இதில் விருப்பமில்லை!" என்றான் உமேஷ்.

"ஏன் என்ன தப்பு? உனக்கும் எனக்கும் கலியாண மாக வேண்டுமா, வேண்டாமா?" என்று கேட்டாள் வைஷ்ணா.

"அதற்காக மாலையும் கழுத்துமா போட்டோ எடுத்துக்கறதா? பார்க்கிறவர்கள் என்ன நினைப் பார்கள்?"

"என்ன நினைப்பார்கள்?"

"நமக்குக் கலியாணமாயிடுத்து என்று நினைப்பார்கள்."

"அப்படி நினைக்கணும்னுதான் இந்தப் போட்டோ!"

"எனக்கு என்னமோ பயமா இருக்கு வைஷ்ணா."

"நீ எதுக்கு பயப்படறே? இந்த தாஜ் ஓட்டல் வெராந்தாவிலே நடக்கப் பயப்படறே. நீ இப்படி

நடுங்கறதைப் பார்த்தால் ஏதோ குற்றம் செய்து விட்டு ஒளிய வந்திருக்கேன்னு இங்கே இருக்கிற சிப்பந்திகள் நினைக்க மாட்டார்கள்?"

"சிப்பந்திகள் என்ன வேண்டுமானாலும் நினைச்சுக் கட்டும். நான் போட்டோ எடுத்துக் கொள்ள சம்மதிக்க மாட்டேன்."

"அப்பச் சரி... நான் போறேன். என்னுடைய ஏர் டிக்கட்டுக்கு இப்பவே ஏற்பாடு செய்யறேன்!"

"வைஷ்ணா."

"ஸ்க்ரூ இதுக்கு மேலே லூஸாகிப் போனா, நான் இன்னிக்கு ராத்திரி மெயில் ஏற வேண்டியதுதான்!" என்றாள் வைஷ்ணா.

சரியாக நாலே முக்காலுக்கு இரண்டு ரோஜா ஆரங்களும் பூச்செண்டுகளும் வந்து சேர்ந்தன.

"ரோஜா அப்படி ஒன்றும் பெரிசா மணமில்லை!" என்றான் உமேஷ்.

"போட்டோவில் மணம் தெரியாது," என்றாள் வைஷ்ணா.

"நாம் இந்த ரூம்லே மாலை மாத்திக்கணுமா. இல்லே ஸ்டூடியோவில் மாத்திக் கொண்டால் போதுமா?"

"நாம் நம்முடைய மாலைகளை நாமே நம்ம கழுத்தில் மாட்டிக் கொள்ளப் போறோம் உமேஷ். மாத்திக்கப் போவதில்லை."

"ஸ்டூடியோக்காரன் என் நினைப்பான். வைஷ்ணா? இதை யோசிச்சுப் பார்த்தாயா?"

"இன்னும் அஞ்சு நிமிஷத்திலே நாம் இந்த அறையை விட்டுப் புறப்படறோம். ரெண்டு மாலையையும் தூக்கிக் கொள்."



வைஷ்ணா முகத்தில் பவுடரை அப்பிக் கொள்ள கண்ணாடிக்குப் போனாள்.

"வைஷ்ணா!"

"உம்."

"தூங்கிவிட்டாயா?"

"இல்லை, தூங்கப் போறேன்."

"வைஷ்ணா!"

"உம்..."

"ஏன் ரொம்பத் தள்ளிப்படுத்துக்கறே... கொஞ்சம் கிட்டே வரப்படாதா."

"கலியாணம் ஆகட்டும்."

"அதான் போட்டோவே எடுத்தாச்சே..."

"அந்தப் போட்டோ என் அப்பாவுக்காக."

"வைஷ்ணா!"

"ஐயோ, என்னைத் தூங்கவிடேன், உமேஷ்!"

"இது கலியாணத்துக்கு முன்னாலே நாம் நடத்தற 'ஹனிமூன்' தானே?"

"அமாவாசை வரப்போகிறது. உமேஷ்."

"கலியாணத்துக்கு அப்புறம் நாம் 'ஹனிமூன்' போகணும்... எங்கே போகலாம்?"

"காட்டுமன்னார்கோவில் இல்லாமப் போனா கூடுவாஞ்சேரி"

"ரெண்டையும் நான் பார்த்ததில்லை."

"உமேஷ்!"

"என்ன?"

"நீ பெரிசாப் படிச்சிருக்கே. பெரியக் கம்பெனியிலே வேலையாயிருக்கே..."

"மன்த்லி தௌஸண்ட் ஸெவன் ஹண்ட்ரட் தர்றா..."

"ஆனா இன்னும் ஒரு ஆண் பிள்ளையா நிமிர்ந்து நிற்க உனக்குத் தைரியம் வரலே... நான் புத்தி கெட்டுப் போய் இந்த அட்வெஞ்சரில் இறங்கினேன். என் புத்தியை..."

"உன் தைரியம்தான் வைஷ்ணா எனக்கு ஊக்கமாக இருக்கு. இப்ப தைரியம் கூட வர ஆரம்பிச்சுட்டுது. நாளைக்குப் பிளானடோரியம் போகலாமா?"

"இப்பத் தூங்கு உமேஷ்."

"ஸ்வீட் ட்ரீம்ஸ்!"

"ஸ்வீட் ட்ரீம்ஸ்?"

## 12

சொல்லிக் கொண்டிருக்கையிலேயே மின்னலாகத் தெளிவு பிறந்தது கனகராஜனுக்கு!

சேம்பர்லின் சேஷாத்ரி அன்று மதிய உணவுக்கு, வீட்டை அடைந்த போது, சீதா 'சாமி வந்த' பக்தையைப் போல ஆடிக் கொண்டிருந்தாள். அவளுடையத் தலை அலங்கோலமாகக் காணப்பட்டது. கணவரைக் கண்டதும் வார்த்தைகள் புது வெள்ளம் போலப் பாய்ந்து வந்தன. ஆனால் ஒரு வார்த்தையும் அவருக்குப் புரியவில்லை. சீதா என்ன பேசுகிறாள்? இது என்ன குழறல்? என்ன நடந்தது?

வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு, கூடத்துக்கு வந்தார். சீதாவைப் பார்த்ததிலிருந்து, தம்முடையப் புது அறையைக் கூட அவர் மறந்து போனார்.

"சீதா... சீதா... உனக்கு என்ன ஆச்சு... ஏன் இப்படி பல ஸ்வரங்களில் என்னென்னமோ ஊளையிடறே?" என்று கேட்டார் சேஷாத்ரி.

அவள் பதில் சொல்லவில்லை. கன்னங்களில் தாரைத் தாரையாக நீர் வழிய, அவள் ஷெல்பிலிருந்து ஒரு நீண்ட உறையை எடுத்து அவரிடம் நீட்டினாள்.

நீண்ட உறை.

அழகான வெள்ளை உறை. இந்த உறையைப் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். பிற்காலத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

ஏற்கெனவே உடைக்கப்பட்டிருந்த உறையின் மீதுள்ள முகவரியைப் படித்தார். முத்து முத்தானக் கையெழுத்தில் அவருடைய பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. ஒரு பெண்ணின் கையெழுத்துப் போலப்பட்டது.

அவருக்குக் கடிதம் எழுதப் பெண் யாரும் இல்லையே?

"உள்ளே இருப்பதை எடுத்துப் பாருங்கள்... என் வயிறு எரிகிறது," என்றாள் சீதா.

முதன் முதலாகக் கோபத்துடன் அவள் கத்துவது அவருடைய நெஞ்சுக்கு இதமாக இருந்தது. ஆள் காட்டி மற்றும் கட்டை விரலால் உறையினுள் இழுத்தார்.

"இது என்ன போட்டோ?"

ஒரு கணம் அவருக்குத் தலை சுற்றியது.

அவருடையச் சீமந்த புத்திரன் ஒரு பெண்ணுடன் மாலையும் கழுத்துமாய் போட்டோவில் காட்சி அளித்தான். கூர்ந்து கவனித்தார். அப்பெண்ணின் முகத்தை ஏற்கெனவே பார்த்தது மாதிரி இருந்தது. உதடுகளில் புன்னகையின் தவழல் வெகு அழகாகவே புகைப்படத்தில் பிரதிபலித்திருக்கிறது. பிள்ளை உமேஷ் தான் காமராமேனின் காலை வாரிவிட்டிருந்தான். அவனுடைய கண்கள் இடுங்கிக் காணப்பட்டன.



சிரிப்புக்குப் பதிலாக பற்கள் ஒரு அலறலுடன் காட்சி அளித்தன.

"சீதா, சீதா! இது என்ன கூத்து?"

"பின்னால் என்ன எழுதியிருக்கிறது என்று படியுங்கள்."

புகைப்படத்தின் மறுபுறத்தைப் பார்த்தார்.

மசி வழவப்பான காகிதத்தில் ஒட்டாது என்றுதான் போலும் பென்சிலில் எழுதியிருந்தது.

படிக்க ஆரம்பிக்கும்போது பெண் யார் என்று நினைவுக்கு வந்தது. அதை உறுதிப்படுத்திக் கொள்ள, கடிதத்தின் கீழே கண் பாய்ந்தது.

வைஷ்ணா!

"கனகராஜன் பொண் வைஷ்ணா!"

"படியுங்கள்!"

"இதோ!"

கடிதம் ரத்னச் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.

"அன்புக்கும், மதிப்புக்கும், உரிய மாமா, மாமி அவர்களுக்கு அநேக கோடி நமஸ்காரங்களுடன் எழுதிக் கொள்ளுவது.

எனக்கும் தங்கள் அருமைக் குமாரன் சிரஞ்சீவி உமேஷுக்கும் நேற்று இங்கே ('சேஷாத்ரி கடிதத்தின் வலது மேல் மூலைக்கு ஓடினார். 'பாம்பே' என்றிருந்தது.') வெகு எளிய முறையில் என் பெற்றோர் முன்னிலையில் திருமணம் நடந்தது. நீங்கள் இருவரும் இல்லாமற்

போனது பெரும் குறைவு. என்ன செய்ய! என் தந்தை ஒரு மாதிரி. ஏழைகளைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது.

விரைவில் வருகிறோம்.

இப்படிக்கு நமஸ்காரத்துடன் வைஷ்ணா."

போட்டோவைத் தனியாகக் கோட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு, "சீதா இந்த என்வெலப்பைத் தனியா வை. தாஜ் மகால் ஓட்டல் என்வெலப் நன்னா கெட்டியா நீளமா இருக்கு," என்றார்.

சீதா ஒரு முறை அவரை ஏற இறங்கப் பார்த்தாள்.

"அவ்வளவுதானா?"

"என்ன சொல்றே?"

"இந்தப் பிசாத்து உறைதான் பெரிசாப் படறதா உங்களுக்கு... நம்பப் பிள்ளை, நம்ப மூத்தப் பிள்ளை, ஒரு அனாதையா நின்னு ஒரு பெண் கழுத்திலே மேளதாள மில்லாம, பட்டுப் புடவைகளும், வைரத் தோடுகளும் இல்லாம, தாலியைக் கட்டியிருக்கிறாள். நீங்கள் என்னடான்னா என்வெலப்பைப் பத்திரப் படுத்தச் சொல்றீங்க!"

"அதான் கலியாணமாயிடுத்தே. இனிமே என்ன செய்யறது!"

"ஜானவாசம் இல்லை. காசி யாத்திரை இல்லை. இரண்டாம் மூனாம் முடிச்சுப் போட என் பெண் இல்லை... நலுங்கு இல்லை. ரிஸப்ஷன் இல்லை. சாந்தி முகூர்த்தம் இல்லை."



"யார் சொன்னா, அது கட்டாயம் இருந்திருக்கும். அதுக்காகத்தான் இந்தக் கலியாணச் சடங்கே!"

"அசிங்கமா ஆபாசமா பேசாதீங்க... இதுக்கெல்லாம் இதுக்கெல்லாம் காரணம் அந்தக் கோமதி... வாருங்கள், இப்பவே அவளைப் போய் ஒரு பிடி பிடித்து விட்டு வரலாம்."

"யாரு கோமதி. எங்கேயோ கேட்ட பெயராக இருக்கு."

"கனகராஜன் பெண்டாட்டி."

"வைஷ்ணா அவள் பெண்தானே?"

"அதனால்தான் அவளைப் போய் உலுக்கலாம்ங்கறேன்."

"ஐயோ, நான் வரலை. ஏகப்பட்ட நாய்கள் ஒரே சமயத்தில் சூழ்ந்துகொண்டு குரைக்கும். முன்னாலும் போக முடியாது. பின்னுக்கும் நகர முடியாது."

"ஏன் பயப்படறேள். ஒருவாய் காபி தரேன். குடிச்சுட்டுக் கிளம்புங்க!"

"மத்தியானம் ஸ்கூல் இருக்கே!"

"அதன் தலையிலே இடி விழட்டும். என்கிட்டே பகட்டா வெளியே ஒண்ணு பேசி, எனக்கும் தெரியாம இப்படி என் பிள்ளைய ஒரு சோணகிரி ஆக்குவாள்னு நான் நினைக்கல்லை. முந்தா நாள்கூட அவகிட்டே பேசினேன். அன்னிக்கே பிளேன்லே போயிருக்கா போலிருக்கு. ஏன் நிக்கறேள். புறப்படுங்கள்."

"காபி தரேன்னு சொன்னாயே சீதா."

"இப்ப காபிதான் ரொம்ப முக்கியமா... என் பெத்த வயிறு எரியறது... என் பிள்ளை ஜானவாசம் வர அழகைப் பார்த்துப் பார்த்து ரசிக்கலாம்னு நான் எப்படி தவம் கிடந்தேன்! சரி சரி. இருங்கோ வரேன்... தெருவிலே ஆட்டோ போச்சுன்னா நிறுத்துங்கள்..."

"எக்கச்சக்கமாக மீட்டர் ஆகும். ரூபாய்க்கு இருபது பைசா மேலே வேறே கொடுக்கணும்... 23ஏ, 29சி, 43–ன்னு நிறைய பஸ் இருக்கு. போய் காபி கொண்டு வா!"

கனகராஜன் அமைதியின் உறைவிடமாகத் திகழ்ந்தார். அவருடைய பெண் கெட்டிக்காரி. வெறும் காதலுடன் நிற்காமல் காதலனைக் கைக்குள் போட்டுக் கொண்டு அவனிடமிருந்து தாலியையும் கழுத்தில் மாட்டிக் கொண்டாள். ஆனால் ஏதோ ஒருகுறை அவரை வாட்டியது. கலியாணத்துக்கு அவரையும் அழைத்திருக்கலாம். அவர் நிச்சயமாக விமானம் ஏறி (கோமதி வந்தாலும் வராவிட்டாலும்) பம்பாய் போயிருப்பார்.

கலியாணப் போட்டோவை மீண்டும் ஒருமுறை பார்த்து விட்டு மறுபக்கம் படித்தார்.

"அன்புள்ள கனகராஜன் அவர்கட்கு,

எனக்கும் தங்கள் மகள் சௌபாக்கியவதி, வைஷ்ணாவுக்கும் நேற்று பம்பாய் சையானியில் என் தாய் தந்தையர் முன்னிலை யில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது. தங்களை என்னதான் அழைத்தாலும் தாங்கள் வந்திருந்து வாழ்த்த மாட்டீர்கள் என்றுதான் தங்கள் பெண் உறுதியாகக் கூறவே, நான் தங்களுக்குத் தந்தி மூலமோ டெலிபோன் மூலமோ தகவல் கொடுக்கவில்லை. இன்னும் சில நாட்கள் இருந்துவிட்டு நாங்கள் தங்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற அங்கே வந்து சேருகிறோம்.

அன்புடன்
மாப்பிள்ளை உமேஷ்.



போட்டோவை எடுத்து வேறு ஒரு நல்ல உறையில் போட்டு விட்டு, தபாலில், வந்த பத்து, பைசா சாணி நிறக் கவரை கிழித்துக் கூடையில் போட்டார், கனகராஜன்.

அதே சமயம், கோமதி உள்ளே வந்தாள்.

"போன்."

"யார்?"

"ஒரே சத்தம். யாரோ சுகுமாராம். சேப்பாக்கத்திலிருந்து பேசறாறாம்."

"இங்கேயே எடுத்துக் கொள்ளுகிறேன்."

குப்பைக் காகிதக் கூடைக்குச் சற்று அருகே இருந்த முக்காலிக்குச் சென்ற கனகராஜன் டெலிபோனை எடுத்தார்.

"கனகராஜன் ஸ்பீக்கிங்."

"என் பெயர் ஸ்ரீ குமார். சதாசிவத்தின் பிள்ளை. கிரிக்கெட் மாட்சுக்காக மெட்ராஸ் வந்திருக்கிறேன்..."

"வெரிகுட்..."

"அப்பா உங்களைப் பார்க்கச் சொன்னார்."

"யூ ஆர் வெல்கம் அட் எனி டைம்."

"உங்க பெண் வைஷ்ணா சாயங்காலம் இருப்பாளா சார்?"

"மாட்டாள்."

"அப்ப நான் வந்து..."

"புண்ணியமில்லை..."

"அப்ப..."

"நீ எப்ப வந்தாலும், வைஷ்ணா சம்பந்தமா வந்தால், புண்ணியமில்லை."

"எனக்குப் புரியவில்லை சார்."

"நேத்துத் தான் அவளுக்கு பாம்பேயில் கலியாணம் நடந்தது."

"ஐ ஆம் ஸாரி சார்."

"டோண்ட் பி ஸாரி. இட் இஸ் ஏ ஹாபி அகேஷன்."

டெலிபோனை வைத்துவிட்டு கனகராஜன் திரும்பினார்.

கோமதி தன் அருகே இருந்த சோபாவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"இப்ப என்ன சொன்னீங்க...? வைஷ்ணாவுக்கு கலியாணம் ஆயிடுத்தா?"



"அதோ அந்தப் டீப்பாய் மேல் இருக்கிறதை எடுத்துப் பார்" என்றார் கனகராஜன்.

அடுத்த நிமிஷம் "மகாபாவி" என்று கத்தினாள் கோமதி.

"யாரைச் சொல்றே கோமதி?" என்று நிதானமாகக் கேட்டார் கனகராஜன்.

அவருடைய நிதானம் இதமான சாரீரம் எல்லாம் கோமதியைத் திகைக்க வைத்தன.

சிறு சிறு விஷயங்களில் கூடப் பொறுமை இழந்து வீடே அதிரும் படியாகக் கத்தும் கணவரா இப்படி அமைதியுடன் இருக்கிறார்!

"சீதா!"

"யார் அவள்?"

"உமேஷின் அம்மா. சேஷாத்ரியின் மனைவி."

"அவள் என்ன செய்வாள் பாவம். உன் பெண்ணும் அவள் பிள்ளையும் லவ் பண்ணினா அவள் என்ன செய்ய முடியும்? உன்னால்தான் இப்போ என்ன செய்ய முடிந்தது?"

"இப்படி நடக்கும்னு நான் எதிர்பார்க்கவில்லை."

"பின் எப்படி எதிர்பார்த்தே, கோமதி?"

கோமதி மெதுவாக நடந்தாள். நடையில் உயிர் இல்லை.

அவள் அறையை விட்டு வெளியேறும் முன் கனகராஜன் அழைத்தார்.

"கோமதி?"

"என்ன?"

அவள் வந்தாள்.

"உனக்கு ஏற்கெனவே சீதாவைத் தெரியும் அல்லவா?"

"தெரியும்."

"விலாசம்?"

"தெரியும்."

"அந்த ஸ்கூல் வாத்தியார் சேஷாத்ரி?"

"தெரியும்."

"உமேஷ்?"

"ஒரே ஒரு தடவை பார்த்திருக்கிறேன். நீங்கள் ஊரில் இல்லாத போது ஒரு முறை வந்திருந்தான்."

"இனிமே, என் திருப்திக்காக அந்தச் சீதாதேவியை 'மகாபாவி' ன்னு வையாதே..."

கோமதி பேசாமல் திரும்பவும் நடந்து வெளியேறினாள்.

சரியாக இரண்டரை மணிக்கு ஒரு ஆட்டோ ரிக்ஷா கனகராஜன் மாளிகை முன் நின்றது. அரைத் தூக்கத்தில் இருந்த உயரமான கூர்க்கா ஒரு எரிச்சலுடன் உமிழ்ந்து விட்டு எழுந்தான்.

காதைக் கிழித்துக் கொண்டு ஆட்டோ சென்ற பிறகு,



"யார் சாமி வேணும்?"

"என் சம்பந்தியைப் பார்க்க வேண்டும்!" என்றார் சேஷாத்ரி. அருகே சீதா முகம் வெளிற நின்றாள்.

"அப்படி யாரும் இங்கே இல்லை!"

"வைஷ்ணாவின் அப்பா கனகராஜன்... என் சம்பந்தி."

கூர்க்கா கதவைத் திறந்தான்.

"நாய்க் கூட்டம்!"

"அல்லாம் தூங்கிக்கிட்டு இருக்கு."

"முழிச்சுருக்குமா?"

"முழிச்சுக்கிட்டாலும் துரத்தாது..."

"ஏன், இன்னிக்கு அகிம்சா டேயா?"

"கட்டிப் போட்டிருக்கு."

"வா, சீதா தைரியமாப் போவோம்!"

அவர் ஏற்கெனவே அங்கே புரண்டு பழகியவரைப் போல குடையை ஆட்டிக்கொண்டு முன்னேறினார்.

கொஞ்ச தூரம் சென்ற பிறகுதான் எல்லா நாய்களும் கட்டி வைக்கப்படவில்லை என்பது தெரிந்தது. வெள்ளை வெளேரென்று, எங்கே கை வைத்தாலும் கொள்ளை ரோமம் இருக்கும் ஒரு பொமரேனியன் ஓடோடி வந்து சீதா காலை முத்தமிட்டது.

சீதா நின்றாள்.

"நிக்காதே, சீதா... உன் காலை அது லாம்ப் போஸ்ட்னு நினைச்சுக்கப் போறது... இருக்கிற... ஒரு பட்டுப்புடவையும்.. சீ...."

சீதா மெதுவாக நடக்கலானாள். நாய் சுற்றிச் சுற்றி ஓடிக் குரைத்து, சிணுங்கி, கூட வந்தது.

போர்ட்டிகோ வராந்தாவில் கோமதி நின்று கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் சீதாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. அதே சமயம் கோமதி தன்னை எரிக்கும் கண்களால் பார்ப்பதையும் உணர்ந்தாள்.

நாய் குரைக்கும் ஒலி கேட்டது. ஹாலில் இருந்த கனகராஜன் போர்ட்டிகோவுக்கு வந்தார்.

உடனேயே முன்னேறி வந்தார்.

"வாருங்கள், வாருங்கள், சம்பந்தி! கோமதி பட்டுப் பாயைப் போடு!" என்றார் கனகராஜன்.

சேஷாத்ரி சிரித்தார்.

ஒரு லிட்டர் அசடு கொட்டியது.

படி ஏறிய அவர், "ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தா நானும் என் சம்சாரமும் கடனோ உடனோ வாங்கிண்டு பம்பாய்க்கு பிளேன்லே வந்திருப்போமே... நான் பிளேன்லே போனதே இல்லை... நீங்க இப்படிச் செய்திருக்க வேண்டாம்!"

"என்ன சொல்லுகிறீர் சே... சே..."

"சேஷாத்ரி!"



"எஸ்... சேஷாத்ரி? என்ன சொல்லுகிறீர்கள்?"

"இதைப் பாருங்கள்!"

சேஷாத்ரி போட்டோவை நீட்டினார்.

"எனக்கு வந்திருக்கு..."

"பின் பக்கம் லெட்டர் இருக்கு!"

கனகராஜன் படித்தார்.

"உங்களுக்கு உங்க மருமகள் எழுதியிருக்கிறாள். எனக்கு..."

சொல்லிக் கொண்டிருக்கையிலேயே மின்னலாகத் தெளிவு பிறந்தது கனகராஜனுக்கு.

"ஏதோ ஆரம்பிச்சு சட்டுன்னு நிறுத்திட்டீங்களே... சீதா... சீதா..."

அருகே சீதாவைக் காணோம். கோமதியையும் காணோம்.

"ஒண்ணுமில்லை, சேஷாத்ரி, உங்க பிள்ளையும் என் பெண்ணும் இப்படி அவசரமா ஒரு கலியாணத்தைச் செய்து கொண்டிருக்க வேண்டாம்!"

"நீங்களும் உங்க மனைவியும் மட்டும் தானே பம்பாயில் நடத்தியிருக்கிறீர்கள்?"

"அப்படித்தான் என் பெண் உங்களுக்கு வந்திருக்கிற போட்டோவில் எழுதியிருக்கிறாள். ஆனா உங்கப் பிள்ளை எனக்கு என்ன எழுதியிருக்கிறான் தெரியுமா?"

"எதுவும் சொல்லாமல் எனக்குத் தெரியாது!" என்றார் சேஷாத்ரி.

"நீங்க ரெண்டு பேரும் வெகுச் சிறப்பா நடத்தி வைத்திருப்பதாக எழுதியிருக்கிறான்!"

"அப்படியா?"

"உள்ளே வாருங்கள். போட்டோவைக் காட்றேன்!"

"இப்ப என்ன செய்வது சம்பந்தி?"

"குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தான்!" என்றார் கனகராஜன்.

"எங்க வீடு சின்னது. உங்க இரண்டு கார் ஷெட்டுகளைச் சேர்த்தா எங்க ஹவுஸ். எங்களுக்கே இடம் போதாது..."

"அப்ப அவர்களே வேறே வீடு பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்!"

"இங்கே... இந்தப் பெரிய பங்களாவில்..." சேஷாத்ரி இழுத்தார்.

"பேசப்படாது... கலியாணம் ஆயிட்டா, பெண் புருஷன் வீடு போகணும். அதுதான் முறை!"

"கலியாணமே முறையில்லாம பொங்கலுக்கு நடுவே நடந்திருக்கு."

"கலியாணமே பொய்!" என்று சொல்ல வாயெடுத்த கனகராஜன் வாயை மாற்றிக் கொண்டு. "அதனால், மற்ற முறைகளை மாற்றி அமைக்கலாமா என்ன? பெண்ணும் மாப்பிளையும் இங்கே வந்தா, அவர்களை



உங்க வீட்டுக்கு ஒரு ஆட்டோவில் அனுப்பிவைக்கிறேன்!" என்றார்.

"கொஞ்சம் இருங்கள், உள்ளே ஏதோ சத்தம் காதைப் பொளிக்கிறது."

"உங்க ஒய்ஃபும் என் ஒய்ஃபும் வார்த்தைகளால் விளையாடுகிறார்கள்!" என்றார் கனகராஜன்.

## 13

> இன்னும் ஒண்ணும் குடி முழுக வில்லை. நாலு பேருக்குத் தெரியும் படியா கல்யாண மண்டபத்தில் கல்யாணம் செய்துவிடலாம்.

சீதாவைப் பார்க்கப் பார்க்க கோமதியின் எரிச்சல் விசுவரூபமெடுத்தது.

"ஏண்டீ, தீட்டின மரத்திலேயே குறி பார்த்துட்டியா? என் பெண்ணுக்கும் உன் பிள்ளைக்கும் கலியாணம் ஆக வேண்டும் என்று நான் ஒரு அழகானத் திட்டத்தைத் தீட்டினால், நீ தாலியும் கயிறுமாய்ப் பின்னாலேயே சென்று கலியாணத்தையே நடத்தி விட்டாயே!" என்றாள் அவள்.

"இதே கேள்வியைத் தாண்டீ நானும் உன்கிட்டே கேட்கணும்னு ஓடோடி வந்தேன். நீங்க பணக்காரங்கள்னா



உங்கப் பணம் உங்களோடே? ஏதுக்கு ஒரு ஏழைப் பிள்ளையாப் பார்த்துக் கொக்கி போட்டு இழுக்கணுமாம்... நீயும் உன் ஷேர் மார்க்கட்காரரும் ஸ்பெஷல் பிளேன்லே போய் கலியாணத்தை முடிச்சுட்டு வந்துட்டீங்களே? என் பிள்ளைக்கு டிரஸ் உண்டா, ஜானவாசம் உண்டா... இப்படி வக்கு இல்லாம என் பிள்ளை..."

"இரு... இரு... என்ன சொன்னே? நானும் அவரும் அங்கே போய் கலியாணத்தை நடத்தினோமா? யார் சொன்னா?"

"உன் பெண்தான் போட்டோவையும் அனுப்பிச்சு அதிலேயே நாலுவரியும் எழுதியிருக்கா..."

"எங்கே அது?"

"அவர்கிட்டே இருக்கு."

"எனக்கும் போட்டோ வந்திருக்கு..."

"உன் பெண் முதல்லே உனக்குத்தான் அனுப்புவாள். அப்புறம்தானே மாமியாரும் மாமனாரும்..."

"எங்களுக்கு எங்க பெண் அனுப்பலை... மாப்பிள்ளை... உன் பிள்ளை அனுப்பி எழுதியிருக்கார். நீங்க ரெண்டு பேரும் முகூர்த்தத்தை நடத்தி வைச்சிருக்கீங்கன்னு..."

"அப்படியா? எங்கே லெட்டர்..."

"போட்டோவுக்குப் பின்னாலே?"

"எங்கே போட்டோ?"

"அவர்கிட்டேயிருக்கு."

"அப்ப நீங்க அங்கே போகலையா?"

"நீங்களும் போகலியா?"

"அட ராமா!"

"அட சிவசிவா!"

"நீயும் நானும் இல்லாமலேயே நம்மக் குழந்தைகள் கல்யாணம் நடந்துட்டுது..."

"கலியாணமா அது... வரட்டும் வைஷ்ணாவை என்ன செய்கிறேன் பார்..."

"அவ இப்ப என் மருமகள்! உனக்கு உரிமை இல்லை, கோமதி!"

"பின் என்ன? சீரும் சிறப்புமா அவக் கலியாணத்தை முடிக்க நினைச்சேன்... அவள் என்னடான்னா..."

"பாவம், அவசரப்பட்டு ஏதோ ரிஜிஸ்தர் ஆபீஸில் கையெழுத்துப் போட்டுவிட்டது. இன்னும் ஒண்ணும் குடி முழுகவில்லை. நாலு பேருக்குத் தெரியும்படியாக் கலியாண மண்டபத்தில் தாலி கட்டிக் கலியாணம் செய்துடலாம்."

"அதுவும் சரிதான் சீதா. ஆனா என் புருஷர் இப்ப ரொம்ப நிம்மதியா, ஏன் ஒரு விதத் திருப்தியோடு இருக்கார்... மறுபடியும் அவர் புத்தி வக்கரிச்சிடும்... பேசாம இரு..."

கோமதி அவளை அழைக்க, சீதா பின் தொடர்ந்தாள். இருவருமாகக் காபி சாப்பிட்டுவிட்டு, இரண்டு தம்ளர்களில் புருஷர்களுக்கும் கொண்டு வந்தார்கள்.



தாதர் எக்ஸ்பிரஸ் சரியாகப் பிற்பகல் இரண்டரை மணிக்கு தாதரிடம் விடை பெற்றுக்கொண்டு நகர்ந்தது.

முதல் வகுப்பு கூப்பேயில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்த உமேஷ், வலது பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். வைஷ்ணா தன் பெட்டியைத் திறந்து கொண்டிருந்தாள்.

"என்ன செய்யறே வைஷ்ணா!"

"நீ அந்தப் பக்கமே பார்த்துண்டிரு. நான் டிரஸ் மாத்திக்கப் போறேன்..."

"என்ன புதுசா டிரஸ்?"

"ஹவுஸ் கோட்!"

"அதை ராத்திரியில் போட்டுக்கொண்டால் போதாதா, வைஷ்ணா!"

"நீ அங்கே பார்."

"சரி... டிரஸ் மாத்திண்டதும் என் பக்கத்திலே வந்து உட்கார்."

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவள் நீலநிற ஹவுஸ் கோட்டும் பாவாடையுமாக அருகே நின்றபோது, உமேஷ் பிரமித்துப் போனான்.

"நீ ரொம்ப லவ்லியா இருக்கே."

"தெரியும்."

"நமக்குக் கூப்பே கிடைச்சிருக்கு... இதேக் கூப்பே கலியாணத்துக்கு அப்புறமானால் எவ்வளவு ஜாலியா இருக்கும்!"

"கொஞ்சம் போர் அடிக்காம வா!"

"வைஷ்ணா!"

"எ...ன்...ன...?"

"ஏன் அலுத்துக்கறே?"

"என்ன சொல்லு."

"என் கற்பை நீ காப்பாத்திட்டே... நானும் உன் கற்புக்குப் பங்கம் வராம நடந்து கொண்டேன்."

"இன்னும் ஒரு ராத்திரி இருக்கு. நினைவு இருக்கட்டும், உமேஷ்!"

"வேணும்னா நான் இப்படியே ஜன்னல் பக்கமாப் பார்த்துண்டே உட்கார்ந்திருப்பேன். நான் உன்னை என் சுண்டு விரலால் கூட... வைஷ்ணா, ஏய் வைஷ்ணா... ஏன் எங்கேயோ பார்த்துண்டு, என்னமோ யோசிச்சுண்டு இருக்கே..."

"ஒரு தப்புச் செய்துட்டேன்."

"என்ன?"

"போட்டோவுடன் நிறுத்திக் கொண்டிருக்கணும்!"

"அப்படீன்னா?"

"நாம் ரெண்டு பேரும் லெட்டர் எழுதியிருக்கப்படாது!"

"போட்டோவே எடுத்துக்கொள்ளப்படாதுன்னு நான் சொன்னப்போ நீ காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை."



"இன்னமும் சொல்றேன். போட்டோ அவசியம், என் அப்பாவின் பாறாங்கல் மனசை அசைக்க. ஆனா லெட்டர் விபரீதத்தில் கொண்டு போய் நிறுத்தும் போல இருக்கு!"

"என்ன விபரீதம்?"

"நீ என் அப்பாவுக்கு எழுதியிருக்கே. நான் உன் அப்பாவுக்கு எழுதியிருக்கேன்... அவர்கள் இரண்டு பேரும் சந்தித்து போட்டோக்களைப் பரிமாறிக் கொண்டால்...?"

"கொண்டால்?"

"என்னையே எல்லாம் கேளு. நீ மூளையை உபயோகிக்காதே!"

"நா என் மூளையை உபயோகிக்கணும்னா நீ பக்கத்திலே இருக்கப்படாது."

"இரண்டு பேரும் சந்தித்துக்கொண்டு போட்டோக் களைப் பரிமாறிக்கொண்டால் பேச்சு தொடரும். என் அப்பா உன் அப்பாவைப் போல் அல்ல. புத்திசாலி. உண்மையை உடனேயே சட்டுன்னு புரிந்துகொண்டு விடுவார்..."

"என் அப்பாவுக்கு மந்தப் புத்தி என்கிறாயா வைஷ்ணா?"

"என் ஃபாதரின் புத்தி கூர்மையைப் பத்திச் சொன்னேன். அது எவ்வளவு கூர்மைன்னு உனக்குப் புரியவேண்டாமா? அதான் தாரதம்மியத்தை..."

"சரி, என்ன புரிந்து கொள்வார்?"

"உனக்குப் புரியலையா?"

"இல்லை."

"இவ்வளவு தூரம் பிட்டுபிட்டுன்னு வைச்சப்புறமும் புரியலையா?"

"இல்லை... இல்லை... இல்லை..."

"உன் அப்பா உன்னைவிட நிச்சயமா இன்டலிஜெண்ட்டா இருப்பார், உமேஷ்!"

"அது இருக்கட்டும். விஷயத்துக்கு வா... சரியான ஸ்டேஷன் வரப்போறது... டீயும் பிரெட்டோஸ்டும் வரும். நான் ஆர்டர் கொடுத்திருக்கேன்."

"சாப்பிடறதிலேயே இரு..."

"சரி, என்ன சொல்ல வந்தே!"

"என் அப்பா நம்ம போட்டோக்களைப் பார்த்து, போட்டோ வெறும் வேஷம்கிற முடிவுக்கு வருவார்!"

"இந்த முடிவுக்கு வர இன்டலிஜெண்ட் தேவையில்லையே? போட்டோ வெறும் வேஷம்தானே?"

"நீ சரியான லூஸ், உமேஷ்... லெட்டர் இல்லாம இருந்திருந்தா உனக்கும் எனக்கும் கலியாணமே ஆயிடுத்துன்னு மத்தவங்களைப்போல என் அப்பாவும் நம்பியிருப்பார்..."

"சரி, இப்ப நம்பலை, அதனால் என்ன?"

"என்னவா? அவருடைய நம்பிக்கையில்தானே நம்ம காதலின் வெற்றியே அடங்கியிருக்கு?"



"நாம்தான் புனிதமானக காதலர்களாக நடந்து கொண்டிருக்கிறோமே... ஒருத்தரை ஒருத்தர் கை காலால் இடிச்சுண்டதுகூட இல்லை. உன் கன்னத்தைத் தொட்டுக் கிள்ள எனக்கு கொள்ளை ஆசை; ஆனா நீ மூஞ்சியைத் திருப்பிக்கறே!"

"நான் இப்ப ரொம்ப ஸீரியஸாத் 'திங்க்' பண்ணிக் கொண்டிருக்கிறேன், உமேஷ்!"

"என்ன 'திங்க்' பண்றே என்னிடம் சொல்லு. நானும் 'திங்க்' பண்ண முடியுமான்னு பார்க்கிறேன்."

"நீ பிரட்டோஸ்ட்டைப்பத்தி 'திங்க்' பண்ணு... ஸ்டேஷன் வந்துட்டது..."

வைஷ்ணா தனிமையில் சிந்தித்தாள். நிச்சயமாகக் கனகராஜன் அவளைத் தண்டிப்பார். உமேஷ் இனிமேல் அவளுடைய சொப்பனத்தில்தான் வரமுடியும்! கிடைத்த பணக்காரக் குடும்பத்திலிருந்து ஒரு பிள்ளையைக் கொண்டு வந்து அவனிடம் தாலிக் கயிற்றை அப்பா நீட்டுவார்.

அவளும் வேறு வழி இல்லாமல் கழுத்தை நீட்டுவாள்.

அவளுடைய காதல் வாழ்வு தாதர் எக்ஸ்பிரசுடனும் ஒரு வழியாத் தீர்ந்துவிடும்.

என்ன செய்ய?

## 14

> ஆரத்தியிலே ஏதாவது சில்லரைபோட ணும்னு சொல்லுவா. நாம் ரெண்டுபேரும் ரெண்டு போட்டோக்களையும் போடுவோம்.

நாய்களெல்லாம் திடீரென்று ஆர்ப்பரிப்பதை மாடியிலிருந்துக் கேட்ட கனகராஜன் பால்கனிக்கு வந்து பார்த்தார்.

வைஷ்ணா ஒரு பெட்டியுடன் மெல்ல மெல்லத் தயங்கித் தயங்கி வந்துகொண்டருந்தாள். தம்மை அவள் இன்னும் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்த கனகராஜன் அவசர அவசரமாகத் திரும்பி, மாடிப் படியை நோக்கி விரைந்தார். பூஜை அறைக்கு வெளியே பூக்கூடையிலிருந்து பூக்களை அள்ளித்



தாம்பாளத்தில் போட்டுக் கொண்டிருந்த கோமதி கணவரின் விரைவைக் கண்டு ஒரு கணம் ஆச்சரியப்பட்டாள்.

"சீக்கிரம் ஆரத்தி கரைச்சுண்டு வா, கோமதி!"

கனகராஜனுடைய விரைவு ஒரு பெரிய புதிராகப்பட்டது. பூத்தட்டை அப்படியே வைத்துவிட்டு அவள் கனகராஜனைப் பின் தொடர்ந்தாள்.

அவர் வராந்தாவை அடையவும் வைஷ்ணா படியில் காலை வைக்கவும் சரியாக இருந்தது.

"வைஷ்ணா அங்கேயே நில்!" என்றார் கனகராஜன்.

"அப்பா... அப்பா..."

"ஏன் அவளை அங்கேயே நிக்கச் சொல்றீங்க!" என்றாள் அங்கே வந்த கோமதி.

"நீ இன்னும் ஆரத்திக் கரைக்கவில்லை..."

"அப்பா!"

"பேசாம இரும்மா. கோமதி, போ உள்ளே போய் ஆரத்திக் கொண்டு வா... வைஷ்ணா, ஒரு நிமிஷம் பொறு அம்மா.! ஆரத்தி எடுத்து முடிஞ்சதும் படி ஏறி வரலாம்."

"என்னப்பா இது?"

"என்ன அசட்டுத்தனமா இப்படி ஒரு கேள்வி கேட்டுட்டே? கலியாணமாகி முதன் முதலாப் பிறந்த வீடு வர்றே!"

"அப்பா!"

"பேசப்படாது... அது சரி, மாப்பிள்ளை எங்கே!"

"மாப்பிள்ளையா?"

"ஆமாம் வைஷ்ணா! என் மாப்பிள்ளை. உமேஷ்! அவன் எங்கே?"

வைஷ்ணாவுக்கு என்னப் பதில் சொல்லுவது என்று புரியவில்லை. ஒரு வேளை இன்னும் உமேஷின் வீட்டார் போட்டோவுடன் அவளுடைய தந்தையை சந்திக்க வில்லையா?

"ஏம்மா வைஷ்ணா' பதில் சொல்லாம நிக்கறே? இனிமேல் உமேஷ் என் மாப்பிள்ளை! அவன் என்னைக் கண்டு பயப்படத் தேவை இல்லை!"

"அப்பா... என்னை மன்னிச்சுடுங்க அப்பா... வந்து..."

"பரவாயில்லை வைஷ்ணா! உனக்கு என்மேலே நம்பிக்கை இல்லை. அதான் உன் அம்மா பேச்சைக் கேட்டுட்டு பாம்பே போய் அங்கேக் கலியாணம் பண்ணிண்டே... அன்னிக்கு நான் உன்னை அடக்கி யிருக்கப்படாது... நீ விரும்பின உமேஷை நானே வரவழைத்து மணமேடையில் உட்கார்த்தியிருக்கணும்... உம், இனிமேல் என்ன செய்யறது?"

"அப்பா... அப்பா..."

"இதோ ஆரத்தி!" என்று கோமதி வந்தாள்.



"நீயே எடு!"

"நிறுத்தும்மா. எனக்கு இன்னும் கலியாணமே ஆகலை!"

கனகராஜன் சிரித்தார்.

"என்னம்மா இது முழுப் பூசணிக்காயைச் சோத்திலே மறைக்கிறே... இதோப் பார் உமேஷ் அனுப்பியிருக்கிற போட்டோ!"

"அப்பா அது, பொய்!"

அவள் படி ஏறினாள்.

"இரு. நான் சொல்றவரைக்கும் படி ஏறாதே."

"அம்மா, நீ சொல்லும்மா."

"நான் என்னடீ சொல்ல இருக்கு? நீதான் மாலையும் கழுத்துமாப் போட்டோவிலே அவனோடு உட்கார்ந்திருக்கிறாயே?"

"நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்க... தயை செஞ்சுக் கேளுங்க, அப்பா! நான் உமேஷுடன் ஒரு வாரம் பம்பாயிலே இருந்தது உண்மைதான். ஆனா உங்கமேல் ஆணையா நாங்க ஒரு தப்பும் செய்யலே... நான் மனசாலக் கூட களங்கப்படலே..."

"நீ என்ன சொன்னாலும் ஏத்துக்கமாட்டேன், வைஷ்ணா... உன் சம்மதப்படி, நீ உன் மாமனாருக்கு எழுதிய கடிதப்படி உனக்குக் கலியாணமாயிடுத்து. எழுத்து மூலமா நீயே சொல்லியிருக்கே. எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும் அது செல்லும். அதேபோல

அவனும் எனக்கு எழுதியிருக்கான். இந்த ரெண்டு கடிதங்களை விட என்னப் பெரிய சாட்சியங்கள் இருக்க முடியும்!

நேரே உன் புருஷன் வீட்டுக்குப் போ! இனிமேல் நீ அங்கேதான் இருக்கணும். மாமியார் மாமனார் பேச்சைத் தட்டாமல் கேட்டு, புருஷனுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்துகொண்டிரு. இன்னும் கொஞ்ச நாள்லே தீபாவளி! தலைத் தீபாவளி! நானும் உன் அம்மாவும் நேர்லே வந்து அழைக்கிறோம்!"

வைஷ்ணா அழ ஆரம்பித்தாள்.

"கோமதி வா, உள்ளே போகலாம்... வைஷ்ணா, நீ உன் சௌகரியப்படி இங்கேயிருந்து கிளம்பலாம். ஆனா அதுவரை அந்தப் படியிலே இரு!"

கனகராஜன் நகர்ந்தார். அதே சமயம் ஒரு டாக்ஸி வரும் சத்தம் கேட்டது.

'சேம்பர்லின்' சேஷாத்ரி குடையுடன் இறங்கி நடக்க, பின்னால் சீதா, உமேஷ் இருவரும் பின் தொடர்ந்து வந்தார்கள்.

"நமஸ்காரம், பிள்ளை வந்துட்டான்!" என்றார் சேஷாத்ரி.

"வாருங்கள் சம்பந்தி, ஏன் மருமகளை இங்கே அனுப்பிவிட்டீர்கள்?"

"இல்லையே! உமேஷ் வந்தான். அவனைத்தான் இங்கே உங்க வீட்டில் கொண்டுவிட வந்தோம்!"



"ஆனா மாப்பிள்ளை இங்கே வந்து மனைவியுடன் குடித்தனம் நடத்தினால் அது அகௌரவம்."

"அப்போ ஒரு தனி வீடா பார்த்துடலாம்!"

"அதுதான் கரெக்ட்!"

திடீரென்று வைஷ்ணா வீராவேசமாகப் பார்த்தாள்.

"உமேஷ்!"

"என்ன வைஷ்ணா!"

"என் அப்பாவேச் சொல்லிட்டார், நமக்குக் கலியாணம் ஆயிடுத்துன்னு. அவர் எல்லாம் தெரிஞ்சவர். தப்பாச் சொல்லமாட்டார். வா, போகலாம்..."

கோமதி படி இறங்கி வைஷ்ணா அருகே வந்தாள்.

"இருடீ! அவன் நாலு பேர் அறிய தாலிக்கட்ட நாங்க ஏற்பாடு செய்யறோம். என்ன சீதா, சொல்றே!"

"நாம எல்லாரும் சொன்னாப் போதுமா கோமதி. உன் ஹஸ்பெண்ட் சொல்லணுமே..."

"இனிமே நான் என்ன சொல்ல வேண்டியிருக்கு... கரைச்ச ஆரத்தி வீணாப்போக வேண்டாம், கோமதி. நீங்க ரெண்டு பேருமா நம்ம மாப்பிள்ளைக்கு அட்வான்ஸ் ஆரத்தி எடுங்கள்!"

"ஆரத்தியிலே ஏதானும் சில்லறை போடணும்னு சொல்லுவா!" என்றார் சேஷாத்ரி.

"நாம ரெண்டு பேரும் ரெண்டு போட்டோக் களையும் ஆரத்தித் தட்டிலே போடுவோம்" என்றார் கனகராஜன்.

முதன் முறையாக அவர் சிரித்தது எல்லாரையும் ஆச்சரியத்தில் மூழ்க அடித்தது.

நடக்கப் போகும் திருமணத்திற்கு ஆரத்தி ஒத்திகை பார்த்தார்கள் கோமதியும், சீதாவும்.

-முற்றிற்று-

திருவரசு புத்தக நிலையம்

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794